Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 30 ரூபா • தீபம் 124 • 24.12.2017






# பிரபாகரனை குறிவைத்த அமெரிக்க ஒப்ரேஷன்!

## புலிகளின் தளபதி மரணத்திற்கு உள்வீட்டு சிக்கலே காரணம்!

## விபசாரிகளால் சிக்கிய இஸ்ரேல் உளவ அமைப்பு

## இந்து VS கிறிஸ்தவ மோதலாகுமா மாநகரசபை தேர்தல்

மெல்பேர்ன் அவுஸ்திரேலியாவிலிருந்து ஒலிபரப்பாகும் உலகத் தமிழர்களின் அபிமான வானொலி சங்கநாதம்
பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் கேட்கத் தவறாதீர்கள்.

சங்கநாதம் SANGANATHAM.NET.AU

யாழ் நேயர்களுக்காக நேயர் விருப்பம், பிறந்த நாள் வாழ்த்துக்கள் மற்றும் திருமண வாழ்த்துக்கள் என்பன இலவசமாக ஒலிபரப்பாகும். மெல்பேன் நேயர்கள் 97.1FM மற்றும் அவுஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்பு கூட்டுத்தாபன (24 மணி) ஒலிபரப்பு சேவையூடாகவும் சர்வதேச நேயர்கள் WWW.SNAGANATHAM.NET.AU மற்றும் 3MDR.COM.AU ஊடாகவும் கேட்டு மகிழலாம்.

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு


TOPAZ Mall (Pvt) Ltd.
NO 1
TOPAZ
No.01 Shop in Jaffna
ஆண்களிற்கான சூட் மற்றும் ரெடிமேட் ஆடைகள்
We are Specialist in
Wedding suits, Wedding Sarees, Party Sarees, Wedding Frocks, Party Frocks and all kinds of items
TOPAZ
No 72, Grand Bazaar
Jaffna
Tel 021 222 4743
Fax 021 222 7645
TOPAZ TAILORING
No 80/24, Kasthuriyar Road
Jaffna
Tel 021 222 4643
Email : topazagn@gmail.com
TOPAZ MALL
No 195, Power House Road
Jaffna
Tel 021 222 4933
021 221 9933
coustomer is king


Nivithra
Beauty Parlour & Training Academy
'Specialized in Makeup Dressing'
Bridal Makeup / Reception Makeup
Convocation Makeup
Key Birthday Makeup
Puberatery ceremony Makeup
Bridal Makeup Our Free Service
Gold Facial,Waxing Hand,
Eyebrow Threading,Full Face Threading
No.: 207, Navalar Road, Jaffna.
Tel.: 077 771 2604
You get married once in a lifetime


இதோ நெல்லியடியில் புது உதயம்!
S.P.C Sellular Spot
(பிரதான வீதி, பஸ் நிலையம் முன்பாக)
Phone Repair, மற்றும், புதிய Smart Phoneகள்
பெற்றுக் கொள்ள நாட வேண்டிய ஒரே இடம்
Sellular Spot
0778449758


அறுசுவைகளின் அரசன்
SUNJEYA FOODLAND
414, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
அன்பர்கள் நண்பர்கள்
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
இறைமகன் இயேசு
கிறிஸ்து பிறப்பின் நத்தார்
வாழ்த்துக்கள்
பாரம்பரிய உணவுகள் மற்றும் சைனிஸ் உணவுகள்
இந்தியன் உணவுகள் மற்றும் சிற்றுண்டிகள்
போன்றவற்றை சுவைத்திட நாடுங்கள்


வெளிநாடுகளுக்கான
பொதிகள் சேவை
11Kg மேற்பட்ட பொதிகளுக்கு 1 Kgக்கான கட்டணம்
UK - 550/-, FRANCE - 700/-, GERMANY - 650/-,
SWISS - 750/-, CANADA - 950/-
மற்ற நாடுகளுக்கும் விசேட கட்டணம் உண்டு.
சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள்
நிபுணத்துவம் வாய்ந்தவர்களுடாக செய்து கொடுக்கப்படும்
திருமுருகன் கொம் நெற் (பிறைவெட்) லிமிடெட்
216, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
18, பிரதான வீதி, நெல்லியடி.
3-5 வேலை
நாட்களில் உரிய
முகவரியில்
ஒப்படைக்கப்படும்
Tel : 0777554528
aramex
delivery unlimited
SKYNET
WORLDWIDE EXPRESS
The Partnership that delivers
DHL
EXPRESS



மாலையுடன் தற்கொலைதாரி தனு, சிவராசன்



# சென்னையிலிருந்து இரகசியமாக ரயிலேறிய பெண் புலி... விரட்டிய இந்திய உளவுத்துறை!

கே.ராகோத்தமன்

ஹியூமன் ரிஸோர்ஸ் மனேஜ்மென்ட் என்றொரு நிறுவனத்தை அங்கே நடத்தி வந்தவர். அதன்மூலம் நேபாளத்துக்கு நிறையப் பேரை வேலை வாங்கிக் கொடுத்து அனுப்புவது அவரது தொழில். (ராஜிவ் கொலையில் ஈடுபட்டவர்களில் மிக முக்கியமான சிலரைத் தவிர மற்ற அனைவரையும் நேபாளம் வழியே எங்காவது தப்பித்துப் போகச் சொல்லித்தான் புலிகளின் தலைமை உத்தரவிட்டிருந்தது! சிவராசன், முருகன், நளினி, சுபா நால்வரை மட்டுமே எப்படியாவது இலங்கைக்கு வரவழைக்கப் பார்த்தார்கள்.) முகவரியை வாங்கிக்கொண்டு கனகசபாபதி வாண னுடன் விமானம் மூலம் டெல்லிக்குப் புறப்பட்டார்.

அங்கே தியாகராஜன் அவர்களை வரவேற்று, ரயில்வே ஸ்டேஷனுக்கு அருகே உள்ள கிருஷ்ணா லொட்ஜில் தங்க வைத்தார். அங்கிருந்தபடி மோதி பாக்கில் ஒரு மருந்துக் கடையில் விசாரித்து, சாணக்கியபுரி அருகே ஒரு வீட்டை வாடகைக்குப் பிடித்தார்கள். மூவாயிரம் ரூபாய் அட்வான்ஸும் கொடுக்கப்பட்டது.

வேலை செய்துகொண்டிருந்த அதே சமயம், தேர்தல் பிரசாரத்துக்காக ராஜீவ் காந்தி தமிழகம் வருவது உறுதி செய்யப்பட்டது.

மே 17 அந்த அறிவிப்பு வந்தது. எனவே, சிவராசனின் திட்டப்படிதான் காரியம் நடந்தாக வேண்டும். ஆதிரை அல்ல, ஏற்கெனவே தமிழகம் வந்துவிட்டிருந்த சுபாவும் தணுவும்தான்!

**காணாமல் போய்விடுங்கள்!**

மே 21ம் திகதி ராஜீவ் காந்தியை ஸ்ரீபெரும்புதூரில் வைத்துக் கொல்வது என்று முடிவு செய்ததுமே சிவராசன் ஒரு காரியம் செய்தார்.

திட்டத்தில் நேரடியாகவும் மறைமுகமாகவும் சம்பந்தமுள்ள, சம்பந்தம் ஏதுமில்லாவிட்டாலும் தமிழகத்தில் விடுதலைப் புலிகளுக்கு நெருக்கமாக உள்ள நபர்கள் அனைவரையும் சம்பவ தினத்தன்று சென்னையில் இருக்க வேண்டாம் என்று உத்தரவிட்டார்.

நினைத்தபடி காரியம் முடிந்துவிட்ட பிறகு சிவராசன், சுபா, நளினி, முருகன், ஹரி பாபு தவிர மற்ற அத்தனை நேரடித் தொடர்பாளர்களும் நேபாளம் வழியே எங்காவது தப்பித்துச் சென்று விடவேண்டுமென்று திட்டம்.

அதற்கு டெல்லி தியாகராஜன் உதவி செய்வார். பாஸ்போர்ட் போன்ற சடங்குகளுக்கு, தம்பியண்ணா என்பவர் உதவி செய்வார் என்று சொல்லப்பட்டது.

அவரிடம் தங்க பிஸ்கட்டைக் கொடுத்தால் அதைப் பணமாக்கி, பயண ஆவணங்கள் வாங்க ஏற்பாடு செய்து தருவார். எல்லா ஏற்பாடுகளும் தயாரான சமயத்தில் தமிழகத்தில்தான் சம்பவம் நடக்கவிருக்கிறது, டெல்லியில் அல்ல என்று தெரிந்ததும் கனகசபாபதி சென்னைக்கு வந்து சேர்ந்தார்.

அப்போது அவரைச் சென்னையில் வரவேற்று தங்குவதற்கு உதவியர் டிக்சன். இன்னொரு விடுதலைப் புலி உளவுப்பிரிவு நபருடன் சென்னையில் இணைந்து பணியாற்றிக்கொண்டிருந்த ஒருவரே டிக்சன்.

டிக்சன், கனகசபாபதியுடன் முதல் முதலில் தமிழகம் வந்த ஆதிரையை முன்னதாக, சென்னை ராயப்பேட்டை கௌடியா மடம் சாலையில், சுபா சுந்தரம் ஸ்டுடியோவுக்கு அருகே வசித்து வந்த விமலா ஆன்ட்டி என்பவர் வீட்டுக்கு அழைத்துச் சென்றிருந்தார்.

அவர்கள் அங்கே தங்க வேண்டும் என்பது ஏற்பாடு.



## ராஜிவ் காந்தி கொலை
### எப்படி... என்ன நடந்தது? 14

அந்த விமலா ஆன்ட்டி, தம்பியண் ணாவுக்கு நன்கு தெரிந்தவர் என்பதால் விஷயம் சுலபமாயிற்று.

ஆதிரை சென்னை வந்ததுமே ராயப் பேட்டை இந்தியன் வங்கியில் தனக்கொரு கணக்கு தொடங்கி, தன்னை ஈழ அகதி என்பதாகப் பதிவு செய்துகொண்டார்.

அகதி அட்டை வாங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆதிரை சென்னைக்கு வந்து தங்கத் தொடங்கிய சமயத்தில்தான் சிவராசன், மே 21 அன்று சென்னையில் சம்பந்தப்பட்ட யாரும் இருக்கவேண்டாம் என்று சொன்னது.

சாத்தானின் படைகள் நூலை அச்சிட்டுக் கொடுத்த வசந்தகுமார் உள்பட அத்தனை பேருக்கும் பணம் கொடுத்து எங்காவது போய்ச் சுற்றிவிட்டு வாருங்கள் என்று அனுப்பிவிட்டுத்தான் அவர்கள் ஸ்ரீபெரும்புதூருக்குப் புறப்பட்டுச் சென்றார்கள்.

ஆதிரை அப்போது சிதம்பரம், மாய வரம் என்று தென் தமிழ்நாட்டு நகரங் களுக்கு சுற்றுப்பயணம் போனார். திட்ட மிட்டபடி ராஜீவ் காந்தி படுகொலை நடந்து முடிந்ததும், ஏற்கெனவே தீர்மானித்திருந்தபடி அனைவரையும் நேபாளம் வழியே எங்காவது வெளிந ாட்டுக்குச் செல்லச் சொல்லி சிவராசன் உத்தரவிட்டார்.

விமலா ஆன்ட்டி வீட்டுக்கு வந்து, ஆதிரையைச் சந்தித்த டிக்சன், அந்தத் தகவலைச் சொல்லி, உடனே புறப்பட்டு டெல்லிக்குச் சென்று அங்கிருந்து நேபாளம் போய்விடும்படி சொன்னார்.

மீண்டும் டெல்லி. சரியென்று கனகச பாபதியுடன் ஆதிரை புறப்பட்டபோது அவருடன் சின்ன சாந்தனும் வருவார் என்று டிக்சன் சொன்னார்.

சின்ன சாந்தன், தமிழகத்தில் சிவரா சனுக்கு வலக்கரம் போல் இருந்த ஓர் உளவுத்துறை நபர். அவர் அப்போது பழவந்தாங்கலில் தங்கியிருந்தார்.

டிக்சன், ஆதிரையை சின்ன சாந்தன் வீட்டுக்கு அழைத்துச் சென்று விட, ஆதிரையும் கனகசபாபதியும் டெல்லி செல்வதற்கு ஜி.டி. எக்ஸ்பிரஸில் டிக்கெட் வாங்கிக் கொடுத்து, அனுப்பி வைத்தது சின்ன சாந்தன்.

ஜூலை முதல் திகதி அவர்கள் ரயிலேறி விட்டார்கள். ஆனால் டிக்சன் சொன்னதுபோல் சின்ன சாந்தன் அவர்களுடன் டெல்லி செல்லவில்லை.

கடைசி நேரத்தில் சாந்தன் தன்னுடன் இருப்பதே நல்லது என்று சிவராசன் எண்ணியதுதான் காரணம். ராஜீவ் காந்தி கொலை நடவடிக்கையின்போது மட்டுமல்ல, அதற்குப் பலகாலம் முன்னர் இருந்தே சிவராசனுக்கு சாந்தன் வெகு முக்கியமான உதவியாளர்.

இந்த நிலையில், ஆதிரை டெல்லிக்கு ரயில் ஏறிய அதே தினம் நாங்கள், எங்களுக்குக் கிடைத்த தகவல்களின்படி, விமலா ஆன்ட்டியை அவரது வீட்டில் பிடித்தோம்.

விசாரித்ததில்,'அவர்கள் டெல்லிக்குப் போவதாகப் பேசிக்கொண்டார்கள்' என்று அவர் சொன்னார். அந்த ஒரு வரித் தகவலை வைத்துக்கொண்டு பரபரவென்று சாத்தியமுள்ள அனைத்துத் தரப்பிலும் விசாரணையை முடுக்கி விட்டோம்.

திருச்சிற்றம்பலம் என்கிற சின்ன சாந்தனுக்குத் தெரிந்த ஒரு ஆள் அகப்பட்டான். அவன் மூலம் ஆதிரையும் கனகசபாபதியும் டெல்லிக்கு ரயில் ஏறிவிட்டார்கள் என்பது தெரிந்தது.

அதாவது நாங்கள் விவரம் அறிவதற்கு முதல் நாள்!

(தொடரும்)



தற்கொலை தாக்குதலுக்கு பின்பு தனு



முருகன் பேரறிவாளன் சாந்தன்



நளினி ரவிச்சந்திரன் ராபர்ட் பயாஸ் ஜெயக்குமார்

# யாழ் மாநகரசபை தேர்தல் இந்து Vs கிறிஸ்தவ மோதலா?

கருடன்

யாழ்ப்பாண மாநகரசபை ஏரியாவை சுற்றிவிட்டு அலுவலகத்திற்கு பறந்து வந்தார் கருடர். வெளியில் மழையும் இல்லாமல் வெயிலும் இல்லாமல் இருந்த இதமான காலநிலையிலும் கருடருக்கு வியர்த்துக் கொட்டியது. "எவ்வளவு பறந்தாலும் களைப்பில்லை. நமது நாட்டு நிலவரங்களை கேட்கத்தான் பயங்கர களைப்பாக இருக்கிறது" என ஆரம்பித்தார்.

"மாநகரசபை ஏரியாவை சுற்றிவிட்டு வருகிறீர்கள்... மாநகரசபை தேர்தல் களம் எப்படியிருக்கிறது?"

"மாநகரசபை தேர்தல் களம் இப்பொழுது தான் சூடு பிடிக்க ஆரம்பித்துள்ளது. பல முனை போட்டி இம்முறை நடக்கும். சுவாரஸ்யத்திற்கும் குறைவிருக்காது. அதற்கான அறிகுறிகள் இப்பொழுதே தெரியத் தொடங்கிவிட்டதுதானே"

"பிரதான கட்சிகளின் முதல்வர் வேட்பாளர்கள் யார்? கள நிலவரம் எப்படியிருக்கும்?"

"தமிழரசுக்கட்சியின் முதல்வர் வேட்பாளர் ஆர்னோல்ட்தான் என்பதை கடந்த வாரமே குறிப்பிட்டிருந்தேன். கட்சித்தலைமையின் கடைக்கண் பார்வை அவருக்கு கிடைத்திருந்தது. முக்கியமாக சுமந்திரன்தான் ஆர்னோல்ட்டின் நியமனத்திற்கு காரணம்.

அல்பிரட் துரையப்பாதான இறுதியாக மாநகரசபை முதல்வராக இருந்த கிறிஸ்தவர். மாநகரசபை மரபை மீற முயன்றதால்தான் அவர் துரோகியாக்கப்பட்டார் என்கிறார்கள் அவர்கள். ஆனால் இந்த குழு சிறிய அணிதான். கட்சியின் தீர்மானத்தை மாற்றும் வல்லமை இல்லாதவர்கள்.

எல்லைமீள் நிர்ணயத்தின்போதும் யாழ்ப்பாண மாநகரசபை பகுதியிலிருந்த சில கிறிஸ்தவ பகுதிகள் அகற்றப்பட்டு, இந்துக்கள் வாழும் பகுதி புதிதாக இணைக்கப்பட்டுள்ளது. இந்துக்களின் வாக்குகள்தான் மாநகரசபை பகுதியில் அதிகமாக உள்ளது. மாநகரசபையை இந்துக்களின் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்குத்தான் இந்த நடவடிக்கை செய்யப்பட்டது என்ற விமர்சனமும்

"சைவ மகாசபையின் அறிக்கையே கிட்டத்தட்ட ஒரு அசியல் அறிக்கைதான். ஆர்னோல்ட்டின் நியமனம், "இந்துவுக்கு வாக்களிப்போம்" என்ற கோசத்தையும் ஏற்படுத்தலாம். சைவ மகாசபை கூட ஒரு அரசியல் நிலைப்பாட்டில் இருக்கிறது. சிவசேனை என்ற பெயரில், இந்துவுக்கு வாக்களிப்போம் என்ற சுவரொட்டி யாழ்ப்பாண நகரம் முழுவதும் ஒட்டப்பட்டுள்ளது. இதற்கு பின்னால் எல்லாம் அரசியல் உள்ளது.

சைவமகாசபையின் முக்கியஸ்தர்கள் பலர் தமிழ் தேசிய மக்கள் முன்னணியுடன் இணைந்து செயற்படுகிறார்கள். தமிழர் வாழ்வுரிமை இயக்கம் என்ற அமைப்பை உருவாக்கியதே சைவமகாசபையிலுள்ள சிலர்தான். சைவமகாசபையினூடாக


ஆர்னோல்ட்டை வீழ்த்த இவர்கள் சைவ வேட்பாளர் ஆயுதத்தை கையிலெடுத்திருக்கலாம். அது பலனளிக்கும் என அவர்கள் நம்புவதாக தெரிகிறது".

"எப்படியிருக்கும் யாழ் மாநகரசபையின் போட்டிக்களம்?"

"தமிழரசுக்கட்சிக்கு சவால் விடும் விதமான எதிரணி உருவாகவில்லைப்போலத்தான் தெரிகிறது. அப்படியொரு எதிரணியை உருவாக்கும் முயற்சி நடந்தது. தமிழ் தேசிய மக்கள் முன்னணி, ஈ.பி.ஆர்.எல்.எவ், தமிழர் விடுதலை கூட்டணி, சைவமகாசபை போன்ற அமைப்புக்களை இணைத்து பொது வேட்பாளரை நியமிக்கும் முயற்சியொன்றும் நடந்தது. ஏற்கனவே இந்த கூட்டு இணைந்து உள்ளூராட்சி

## வேலணையில்தான் குழப்பம்!

யாழ்ப்பாணத்தில் உள்ள பதினேழு உள்ளூராட்சிமன்றங்களிற்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர் தெரிவை அந்தந்த பிரதேச முக்கியஸ்தர்கள்தான் இணைந்து மேற்கொண்டனர். ஏற்கனவே கூட்டமைப்பின் தலைமை இணக்கம் கண்டபடி, வேட்பாளர் தெரிவு நடப்பதென்றுதான் முடிவெடுக்கப்பட்டது. ஆனால் பிரதேச மட்டத்தில் அது நடக்கவில்லை. அனேக இடங்களில் பங்காளிக்கட்சிகள் கடும் அதிருப்தியுடன் இருக்கிறார்கள். பங்காளிக்கட்சிகளின் வேட்பாளர் தெரிவில் தமிழரசுக்கட்சி அதீதாக தலையிட்டுள்ளது. நிர்வாகத்திறமையுடையவர்கள் என தெரவுசெய்யப்பட்ட பலரை, தமிழரசுக்கட்சிக்கு பிடிக்கவில்லையென்பதற்காக பங்காளிக்கட்சிகள் நீக்கியுள்ளன. வடக்கு, கிழக்கு முழுவதும் இந்த சம்பவம் பதிவாகியுள்ளது. யாழ்ப்பாணத்தில் அதிகம் சீரழிந்தது வேலணை பிரதேசசபைக்கான வேட்பாளர் தேர்வே. அங்குள்ள கீழ்மட்ட உறுப்பினர்களிடம் வேட்பாளர் தெரிவு பொறுப்பை தமிழரசுக்கட்சி ஒப்படைத்துள்ளது. அரசியல் கூட்டணியென்பது முதிர்ச்சியானவர்களாலேயே வளர்த்தெடுக்கப்படலாம். அரசியல் முதிர்ச்சியற்றவர்களின் நடவடிக்கைகள் சிக்கலை அதிகப்படுத்தும். வேலணை விடயத்தை அவதானித்தவர்களின் அப்பிராயமும் அது தான். பங்காளிக்கட்சிகளின் வேட்பாளர் பட்டியலில் தம்மால் தெரிவுசெய்யப்பட்டவர்களை இணைக்கும்படி பிரதேச தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள் அடம்பிடித்துள்ளனர். எனினும், நீண்ட இழுபறியின் பின்னரே இதில் விடாப்பிடியாக நின்று பங்காளிக்கட்சிகள் தமது உறுப்பினர்களை நியமித்தன.



வி.மணிவண்ணன்
இ.ஆர்னோல்ட்

கிறிஸ்தவர் முதல்வராக முடியாதா?

கடந்தவாரம் தமிழரசுக்கட்சியின் உயர்மட்ட உறுப்பினர்களின் கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில் நடந்தது. இதில்தான் ஆர்னோல்ட்டின் பெயர் முதல்வர் பதவிக்காக உறுதிசெய்யப்பட்டது. 'மாநகரசபை முதல்வர் பதவி உங்களிற்குத்தான் என மூன்று வருடங்களின் முன்னரே ஆர்னோல்ட்டிற்கு வாக்களித்து விட்டேன். அதை நிறைவேற்ற ஒத்துழைப்பு தாருங்கள்' என சுமந்திரன் கேட்டிருக்கிறார். அதை எல்லோரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். 17ம் திகதி இரவு ஆர்னோல்ட் தனது மாகாணசபை உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்வதற்கான கடிதத்தை அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானத்திடம் ஒப்படைத்தார்.

ஆனாலும் ஆர்னோல்ட்டின் நியமனம் தமிழரசுக்கட்சிக்குள்ளேயே குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. யாழ்ப்பாண மாநகரசபை முதல்வராக நகர மத்தியில் உள்ள, இந்து ஒருவரே இதுவரை தேர்வாகி வந்தார், அந்த வழக்கம் தொடர வேண்டுமென அவர்கள் விரும்புகிறார்கள்.

உள்ளது. அவரை முதல்வராக நியமிக்க வேண்டுமென கிறிஸ்தவ மத அமைப்புக்கள் கட்சிக்கு கடுமையான அழுத்தம் கொடுத்தன.

ஆர்னோல்ட்டின் நியமனம் மதங்களிற்கிடையிலான போட்டியாகவும் மாற வாய்ப்பிருக்கிறது. ஆர்னோல்ட் கிறிஸ்தவர். இந்து வேட்பாளர் ஒருவரே நியமிக்கப்பட்ட வேண்டுமென சைவ மகாசபை ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தது".

"இது எவ்வளவு தூரம் மத போட்டியாக மாறும்?"

செய்ய முடியாத அரசியலை செய்ய இந்த அமைப்பு உருவாக்கப்பட்டதென்ற விமர்சனமும் எழத் தொடங்கியுள்ளது. கிட்டத்தட்ட ஒரு பினாமி நிறுவனம் என்ற அபிப்பிராயம் உருவாகிறது. ஆனால், இதே பெயரில் பல வருடங்களின் முன்னரே ஒரு நிறுவனம் இயங்கி வருவதால், சட்டச்சிக்கல்களை கருத்தில் கொண்டு தமிழர் சமஉரிமை இயக்கம் என்ற பெயரில் செயற்படுகிறார்கள். இவர்களும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியுடன்தான் இணைந்து செயற்படுகிறார்கள்.

## சங்கரி கூட்டு கடுப்பில்!

யாழ் மாநகரசபை முதல்வர் வேட்பாளராக யாரை அறிவிப்பதென்பதில் உதயசூரியன் கூட்டிற்குள் பெரிய குழப்பம் நிலவியது. தமிழரசுக்கட்சி, தமிழ் தேசிய மக்கள் முன்னணி வேட்பாளர்களிற்கு சவாலான கவர்ச்சிகரமான வேட்பாளர் கிடைக்காமல் கூட்டணி பெரும் திண்டாட்டத்தில் இருந்தது. இதனால்தான் வித்தியாதரனை பொதுவேட்பாளராக்கவும் விரும்பினார்கள். யாழ்ப்பாண பல்கலைகழகத்தின் முன்னாள் துணைவேந்தர் ஒருவரை களமிறக்கலாமா என்றும் யோசித்து, அவரை அணுகினார்கள். ஆனால் அவர் அதற்கு சம்மதிக்கவில்லை. "இப்போதைக்கு அரசியலுக்கு வரும் எண்ணமில்லை" என கையை விரித்து விட்டாராம். உதயசூரியன் சின்னத்திற்கு அவர் கையை விரித்து மூன்றாம் நாளில், வீட்டு சின்னத்தில் அவர் களமிறங்கலாமென செய்தி வெளியாக, கூட்டணிக்குள் பயங்கர கடுப்பாம்!


## கருடன் பக்கம்

தேர்தலை சந்திக்க முயற்சித்து, முடியாமல் போன நிலையில், மாநகரசபையிலாவது வெற்றியடையுமா என பார்த்தார்கள். ஆனால், முதல் சுற்று பேச்சிலேயே அந்த முயற்சி தோல்வியடைந்து விட்டது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியை ஆதரிக்கும் சைவ மகாசபை

தமிழரசுக்கட்சியில் களமிறங்க முயன்று, சரவணபவனின் எதிர்ப்பால் வாய்ப்பு கிடைக்காமல் போன பத்திரிகையாளர் வித்தியாதரனை பொதுவேட்பாளராக்கவே இந்த முயற்ச்சி நடந்தது. வித்தியாதரனை பொதுவேட்பாளராக்க ஈ.பி.ஆர்.எல்.எவ், தமிழர் விடுதலை கூட்டணி, சிவசேனை, சைவமகாசபை எல்லோரும் விரும்பினார்கள். ஆனால் தமிழ் தேசிய மக்கள் முன்னணி விரும்பவில்லை. தமது வேட்பாளரான சட்டத்தரணி மணிவண்ணனைத்தான்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...



யாழ் மாநகரசபை வாக்காளர்கள்

பொதுவேட்பாளராக்க வேண்டுமென நிபந்தனை விதித்தார்கள். வித்தியாதரனை பொதுவேட்பாளராக்கவே ஏனையவர்கள் விரும்பினார்கள்.

இதற்குள் இன்னொரு சுவாரஸ்ய சம்பவமும் உண்டு. என்னதான் கூட்டணிக்காக முயன்றாலும், தமிழர் விடுதலை கூட்டணியும், தமிழ் காங்கிரசும் ஒட்டவே ஒட்டாதவை. தமிழ் காங்கிரஸ் தலைமைக்கு அரசியல் அனுபவம் போதாதென நினைக்கிறார் ஆனந்தசங்கரி. அதை பகிரங்கமாகவே சொல்லியும் வருகிறார். ஆனந்தசங்கரி இந்திய பின்னணியில் இயங்குகிறார் என தமிழ் காங்கிரஸ் நினைக்கிறது. அத்துடன் காங்கிரசின் அரசியல் நிலைப்பாடும், கூட்டணியின் நிலைப்பாடும் ஒன்று சேரவே முடியாதவை. இவையெல்லாம் சேர்ந்து மாநகரசபை பொதுவேட்பாளர் பேச்சும் தோல்விடைந்தது.

இந்த பேச்சுக்கள் தோல்வியடைந்ததற்கு மிகவும் முக்கியமான இன்னொரு விசயமும் உள்ளது. அதை இதுவரை யாரும் கண்டுபிடிக்கவில்லை"

"இதென்ன விசயம்.. சொல்லுங்கள்"

"சைவமகாசபை, சிவசேனை போன்ற இந்து அமைப்புக்கள் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பின்னால் நிற்கின்றன. உள்ளூராட்சி தேர்தலில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி சிக்கலில்லாமல் எல்லா சபைகளிலும் வேட்பாளர்களை களமிறக்க இந்த பின்னணியும் ஒரு காரணம்.

சைவ அமைப்புக்களின் பின்னணியில் நல்ல தேர்தல் பெறுபேற்றை பெறலாமென அந்த கட்சி நினைக்கிறது. எல்லா சபைகளிலும் நல்ல வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டதாகவே கட்சி தலைமைக்கு அமைப்பாளர்களிடமிருந்து அறிக்கையும் கிடைத்துள்ளது. கூட்டணியொன்றிற்குள் போவது கிடைத்த வாய்ப்பை வீணாக்குவதாக முடியுமென தமிழ் காங்கிரஸ் நினைக்கிறது. தமிழ் மக்கள் பேரவைக்குள் இனி ஒருபோதும் செல்வதில்லையென முடிவெடுத்து விட்டதால், தமிழ் தேசிய பேரவையை கிராம மட்டத்தில் அறிமுகப்படுத்த இதுதான் நல்ல சந்தர்ப்பமென நினைக்கிறார்கள்."

"தமிழ் தேசிய கூட்டமைப்பு முகாமிற்குள் என்ன நடக்கிறது?"

சிக்கலை வளர்க்கும் இரண்டாம் நிலை பிரமுகர்கள்

"அங்கும் நிறைய குழப்பங்கள் உள்ளன. யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சியெல்லாம் சிக்கல் இருக்கிறது. தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர்கள் கூட்டத்தில் கட்சிகளிற்கிடையிலான ஆசனப்பங்கீடு பற்றிய தெளிவான முடிவெடுக்கப்பட்டது. ஆனால், நடைமுறையில் அது பெரும்பாலும் கணக்கெடுக்கப்படவில்லை.

கிளிநொச்சியில் மூன்று உள்ளூராட்சி சபைகளிலும் தமிழரசுக்கட்சிக்கு 60 வீதமும், புளொட் மற்றும் ரெலோவிற்கு தலா 20 வீதமும் ஆசன ஒதுக்கீடு நடந்தது. கிளிநொச்சி வேட்பாளர் தெரிவு நடந்தபோது, "அதெல்லாம் செல்லாது. இரண்டு கட்சிக்கும் ஒவ்வொரு ஆசனமே வழங்க முடியும்" என சிறிதரன் எம்.பி சொல்லிவிட்டார்.

முல்லைத்தீவிலும் சிக்கல். முல்லைத் தீவில் தமிழரசுக்கட்சியின் சாந்தி சச்சிதானந்தம், சிவமோகன் ஆகிய எம்.பிக்கள் உள்ளனர். சிவமோகனுடன் வேட்பாளர் நியமனத்தை பேசி முடித்து விட்டு சென்றால், "அதெல்லாம் சரிவராது. நான் என்னத்திற்கு இருக்கிறேன். என்னுடனும் பேச வேண்டும்" என சாந்தி எம்.பி அடம்பிடிக்கிறார் என மற்ற இரண்டு கட்சிகளும் தலையிலடித்துக் கொண்டார்கள்.

மற்றைய பிரதேசங்களிலும் தமக்கு பொருத்தமான வேட்பாளர்களையே களமிறக்க வேண்டுமென தமிழரசுக்கட்சி விடாப்பிடியாக நின்றது. இதில் புளொட், ரெலோ கணிசமான விட்டுக் கொடுப்புக்களை செய்துதான் பிரச்சனையை தீர்த்துள்ளன. இது மாவை சேனாதிராசாவின் அணுகுமுறை தொடர்பான விமர்சனங்களையும் கிளப்பியுள்ளது. இரண்டாம் நிலை தலைவர்கள் தமது விருப்பப்படி நடக்கிறார்கள், மாவை சேனாதிராசாவை ஆட்டிப் படைக்கிறார்கள் என்ற விமர்சனம் கிளம்பியுள்ளது. மூத்த தலைவர் சம்பந்தன் இல்லாவிட்டால் கூட்டமைப்பை யாராலும் காப்பாற்ற முடியாதென்ற அபிப்பிராயமும் மெல்லமெல்ல உருவாக ஆரம்பிக்கிறது" என்றபடி பறந்து சென்றார் கருடர். ●

# தமிழ் மக்கள் பேரவைக்கு பதிலாக தமிழ் தேசிய பேரவை!


அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் இம்முறை தேர்தலில் தமிழ் தேசிய பேரவை (Tamil national council) என்ற பெயரில்தான் களமிறங்குகிறது. இதில் பொதுஅமைப்புக்களும் உள்ளன. தமிழ் தேசிய பேரவை என்பது 1977 இல் வட்டுக்கோட்டை பிரகடனத்தின் போது முன்மொழியப்பட்ட பெயர். வட்டுக்கோட்டையில் தமிழீழ பிரகடனம் செய்தபோது, தமிழ் தேசிய பேரவையை உருவாக்கி தமிழீழத்திற்கான கொ... ஒன்றை உருவாக்கப்போவதாகவே தமிழர் விடுதலை கூட்டணி அறிவித்தது. அந்த அறிவிப்பு பின்னர் காற்றோடு போகத்தான், இளைஞர்கள் போராட்டத்தை கையில் எடுத்தனர். இதுதான் தமிழ் தேசிய பேரவையின் வரலாறு.

இப்பொழுது தமிழ் தேசிய பேரவையை, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கையில் எடுத்துள்ளது. தமிழ் மக்கள் பேரவை இனி கிட்டத்தட்ட செயலற்ற இயக்கமாகிவிடும் போலத்தான் தெரிகிறது. முதலமைச்சர் விக்னேஸ்வரனை தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் இறுதியாக சந்தித்த போதும் இதைப்பற்றி பேசியிருக்கிறார்கள். தமிழ் மக்கள் பேரவை முதலமைச்சரின் அரசியல் திட்டங்களிற்காக செயற்படுகிறதென தமிழ் காங்கிரஸ் நினைக்கிறது. உள்ளூராட்சி தேர்தலில் தமிழ் மக்கள் பேரவை யாரையும் ஆதரிக்கவில்லையென அதன் பிரமுகர்கள் அறிக்கைவிட்டனர். இதன்பின்னரும் மாற்று அணிக்கு தமிழ் மக்கள் பேரவை பொருத்தமாக இருக்காதென மக்கள் முன்னணி நினைக்கிறது. தமிழ் மக்கள் பேரவைக்கு பதிலாக புதிய பேரவையொன்றை கட்டியெழுப்பும் நோக்கத்துடனேயே, தமிழ் தேசிய பேரவையென்ற பெயரை தூசி தட்டியெடுத்துள்ளனர்.

# சாவகச்சேரி சிக்கலின் பின்னணி!

சாவகச்சேரி நகரசபைக்கான வேட்புமனு 14ம் திகதிக்குள் தாக்கல் செய்யப்பட வேண்டும். அதனால் 13ம் திகதி 1 மணி வரை மாவிட்டபுரத்தில் உள்ள மாவை சேனாதிராசாவின் வீட்டில் இதற்கான பணிகள் நடந்தன. மாவை சேனாதிராசா, அருந்தவபாலன், சயந்தன், மாவையின் செயலாளர் சுகிர்தன் (முன்னாள் பிரதேசசபை தவிசாளர்) ஆகியோர் இந்த பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

தென்மராட்சி தமிழரசுக்கட்சியின் கிளைக்குழுவின் ஊடாக விண்ணப்பங்கள் கோரப்பட்டு, ஒரு பட்டியல் தயாரிக்கப்பட்டிருந்தது. குற்றச்சாட்டுக்களிற்கு உட்படாதவர்களை கொண்ட சிறப்பான பட்டியல் ஒன்றே தயாரிக்கப்பட்டிருந்தது. இந்த பட்டியல் எல்லோருக்கும் பிடித்துப் போக, மறுநாள் காலை 8.30 மணிக்கு வேட்பாளர்களை ஆள் அடையாள அட்டையுடன் மார்ட்டின் வீதியிலுள்ள தமிழரசுக்கட்சி அலுவலகத்திற்கு வந்து கையெழுத்திடுமாறு அழைப்பதென முடிவாகியது.


சாவகச்சேரி நகரசபைத் தேர்தல்

| இல. | வேட்பாளர் பெயர் | கையொப்பம் |
| --- | --- | --- |
| 1 | [illegible] | [illegible] |
| 2 | [illegible] | [illegible] |
| 3 | [illegible] | [illegible] |
| 4 | [illegible] | T.P. [illegible] |
| 5 | [illegible] | [illegible] |

14ம் திகதி 8.30 மணிக்கு வேட்புமனுவில் உள்ளடக்கப்பட்டிருந்தவர்கள் அடையாள அட்டையுடன் தமிழரசுக்கட்சி அலுவலகத்திற்கு வந்தனர். கட்சி பிரமுகர்களும் வந்த பின்னரும் வடமாகாணசபை உறுப்பினர் சயந்தன் வரவில்லை. தாமதமாகவே வந்தார். அவருடன் சில ஆதரவாளர்களும் வந்திருந்தனர். முன்னாள் நகரசபை உறுப்பினர்களும் அதில் இருந்தனர். அவர்கள் தமது பெயர் வேட்பாளர் பட்டியலில் உள்ளடக்கப்படவில்லையென தர்க்கத்தில் ஈடுபட்டனர். கட்சித்தலைவர்கள் அவர்களுடன் பேசி, அனுப்பிவைத்தனர்.

காலை 10.30 மணியளவில் வேட்பாளர்களிடம் கையெழுத்து வாங்க ஆரம்பித்தபோது, 'வேட்பாளர்களின் சில அடையாள அட்டை இலக்கங்களும், பெயரில் எழுத்துப்பிழைகளும் உள்ளன' என சுகிர்தன் கூறினார். அதனால் இன்னொரு தாளில் திருத்தி எழுதுவதென முடிவாகியது.

கட்சி அலுவலகத்தின் முன் பகுதியில் உள்ள குலநாயகத்தின் அறையில் இந்த வேலை நடந்தது. குலநாயகம், சயந்தன், சிவாஜிலிங்கம், அலுவலக உதவியாளரான யுவதி ஆகியோர் அந்த வேலையில் ஈடுபட்டனர்.

இதன்போதுமாவை சேனாதிராசா, அருந்தவபாலன் ஆகியோர் ஆதரவாளர்களுடன் பேசிக் கொண்டிருந்தனர்.

புதிய பட்டியல் தயாரிக்கப்பட்டு வேட்பாளர்களின் கையெழுத்துக்கள் வாங்க ஆரம்பிக்கப்பட்ட போது, சிலரது பெயர் மாற்றப்பட்டதாக ஒரு கதை வேட்பாளர்களிடம் எழுகிறது. உடனயாக அவர்கள் அருந்தவபாலனை தொடர்பு கொண்டனர். அருந்தவபாலன் உடனடியாக வேட்பாளர் பட்டியலை பார்க்க, மூன்று பெயர்கள் மாற்றம் செய்யப்பட்டிருந்தனர்.

இந்த மாற்றத்தை தான் சொல்லவில்லையென மாவை அந்த இடத்திலேயே சொன்னார். வேட்புமனுவை தயாரிக்கும் பணியில் இருந்த குலநாயகம், சிவாஜிலிங்கம் ஆகியோரும் தமக்கு இதில் சம்பந்தமில்லையென கூறினர்.

இதன்பின் நடந்தது ஊரறிந்தது. அதனால் நாம் அதைப்பற்றி குறிப்பிடவில்லை. நாம் குறிப்பிடபோவது, மாற்றப்பட்ட அந்த மூன்று வேட்பாளர்களும் யார்? புதிதாக நியமிக்கப்பட்ட மூவரும் யார்? என்பதை.


ஏற்கனவே தயாரிக்கப்பட்ட பட்டியலில் இருந்த மூவர் நீக்கப்பட்டு, புதிதாக சயந்தனால் சேர்க்கப்பட்டவர்கள் சுதர்சன் தனபாலசிங்கம், கு.சதாசிவமூர்த்தி, ப. ஸ்ரீதரன் ஆகியோரே. இதில் சுதர்சன் தனபாலசிங்கம் நகரசபைக்கு வெளியிலுள்ள கைதடியை சேர்ந்தவர். கல்வயலில் போட்டியிடுகிறார். விகிதாசார வேட்பாளர் பட்டியலில் முதலாவதாக இவரது பெயர்தான் இருந்தது. ஓய்வுபெற்ற அதிபராக ரவீந்திரனின் பெயர் கல்வயல் வட்டார வேட்பாளராக பெயரிடப்பட்டிருந்தது. மார்ட்டின் வீதியில் ரவீந்திரனின் பெயர் மாற்றப்பட்டு, சுதர்சன் தனபாலசிங்கத்தின் பெயர் இடப்பட்டது.

அடுத்தவர் ப.ஸ்ரீதரன். மீசாலையை சேர்ந்தவர். மீசாலை கிழக்கு வட்டாரத்தில் போட்டியிடுகிறார். கைலாயபிள்ளை என்ற ஓய்வுபெற்ற அதிபரே மீசாலை கிழக்கு வட்டாரத்திற்கு முதலில் பெயரிடப்பட்டவர். பின்னர் மார்ட்டின் வீதியில் அவரது பெயர் நீக்கப்பட்டு, ஸ்ரீதரனது பெயரிடப்பட்டுள்ளது.

சங்கானை வட்டாரத்தில் ஓய்வுபெற்ற வங்கி முகாமையாளர் ஒருவர் களமிறக்கப்படவிருந்தது. இறுதியில் அவரது பெயர் மாற்றப்பட்டு, முன்னாள் உபதவிசாளர் கு.சதாசிவமூர்த்தியின் பெயர் இணைக்கப்பட்டது.

இந்த குழப்பங்களையடுத்து, நகரசபை தேர்தலில் இருந்து விலகுகிறோம் என ஏழுபேர் அறிவித்தனர். பின்னர் அவர்களுடன் வடமாகாணசபை உறுப்பினர் சயந்தன் பேச்சு நடத்திய பின், ஐவர் தமது முடிவை மீளப்பெற்றுள்ளனர்.

# புலிகளின் சோதனைக்காலம் இப்போதைக்கு முடியாது



கருணாகரன்

புலிகளுடைய சோதனைக் காலம் இன்னும் முடியவேயில்லை. போரில் தப்பிய புலிகளுக்கு ஆயிரம் நெருக்கடிகளும் தாங்கவே முடியாத துயரமும் என்றால், போர்க்களத்தில் வீரமாகச் சமராடி உயிர் நீத்த மாவீர்களுக்கும் நெருக்கடிகளே.

மிஞ்சியிருக்கும் விடுலைப்புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் கைது, விசாரணை, சித்திரவை, சிறைத்தண்டனை, சமூகத்தில் ஆதரவற்ற நிலை, வாழ்க்கை நெருக்கடிகள், புலனாய்வுத்துறையின் கண்காணிப்பு, அரசியல் கையறு நிலை என ஏராளம் நெருக்கடிகளின் மத்தியில் வாழ வேண்டியுள்ளது. அண்மையில் ஒரு முன்னாள் விடுதலைப்புலிகள் உறுப்பினர் ஒருவரோடு பேசிக் கொண்டிருந்தபோது "ஒரு கண் நித்திரையை நிம்மதியாகக் கொள்ள முடியாமலுள்ளது" என்று துக்கமாகச் சொன்னார். போர்க்களத்தில் சந்தித்த நெருக்கடிகளையும் விட இன்று தாம் சந்திக்கும் உள நெருக்கடிகளின் தாக்கம் அதிகம் என்றார் அவர்.

இதில் இப்போது இன்னொரு நெருக்கடியும் அவர்களுக்குச் சேர்ந்துள்ளது. தங்களோடு ஒன்றாகவே கூடி வாழ்ந்து சமராடி வீழ்ந்த மாவீரர்களின் நினைவுச் சின்னங்களையும் நினைவிடங்களையும் குறித்த கவலைகள். ஆகவே நிம்மதியடையவே முடியாத வாழ்க்கையே அவர்களுக்கு இப்போது கிடைத்திருக்கிறது.

முதலில் இந்த நினைவுச் சின்னங்களையும் நினைவிடங்களையும் படைத்தரப்பு இடித்தழித்தது. பிறகு படையின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்ட துயிலுமில்லங்கள் அரசியற் சூதாட்டக்களமாக்கப்பட்டன. கடந்த ஆண்டு அரசியல்வாதிகள் இந்தத் துயிலுமில்லங்களைத் தங்களுடைய அரசியல் ஆதாயங்களுக்காகப் பயன்படுத்தினார்கள். இது சமூக மட்டத்தில் கடுமையான விமர்சனமாக மேலெழுந்து, இந்தமாதிரியான நடவடிக்கைகள் தொடரக்கூடாது என்ற எதிர்ப்பாக மாறியது.

இதனால், இந்த ஆண்டு நடந்த மாவீரர் நாள் நிகழ்வுகள் தொடக்கத்தில் மெல்லிய இழுபறிகள், பதற்ற நிலை என்றிருந்தாலும் இறுதியில் சர்ச்சையில்லாமல் ஓரளவுக்குச் சுமுகமாக நடந்தேறின. ஆனாலும் இது நீடிக்கவில்லை. இப்போது புதிதாகத் தோன்றியுள்ளது ஒரு பிரச்சினை.

கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தை தாவரவியல் பூங்காவாக மாற்றுவதற்கு முற்பட்ட கையோடு இந்தப் பிரச்சினை ஆரம்பமாகியது.

கிளிநொச்சி மாவீரர் துயிலுமில்லத்தை தாவரவியல் பூங்காவாக மாற்றுவதற்கானமுயற்சிகளை பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தரப்பினர் மேற்கொண்டிருந்தனர். இதற்கான தீர்மானம் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் கடந்த ஜனவரி மாதம் 16 ஆம் திகதி நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் எடுக்கப்பட்டிருந்தது. அப்போதே இதைப்பற்றிய சர்ச்சைகள் பொது வெளியில் உண்டாகியிருந்தன.

> "ஒருங்கிணைப்புக் குழு சட்டபூர்வமான அங்கீகாரத்தையும் அதிகாரத்தையும் தமக்குத் தந்துள்ளது" என வாதிட்டார் பிரதேச சபையின் செயலாளர் ஹம்சநாதன். ஆகவே அவருடைய வாதத்தின்படி பிரதேசசபையின் அதிகாரத்துக்குக் கீழ் மாவீரர் துயிலுமில்லம் கொண்டு வரப்பட்டுள்ளது என்று முடிவாகியது.

மாவீரர்களின் அடையாளமும் மகிமையும் இந்த மாற்றத்தினால் கெடுக்கப்படக்கூடிய அபாயச் சூழல் உண்டென்று ஒரு சாராரர் வாதிட்டனர். ஆனால், மாவீரர் துயிலுமில்லங்களைத் தொடர்ச்சியாகவே பேண வேண்டுமாக இருந்தால், அரசியல் நெருக்கடிகளிலிருந்து அவற்றைப் பாதுகாப்பதாக இருந்தால், இந்தகைய உருமாற்றம் தவிர்க்க முடியாது என இதற்குப் பதிலாக நியாயம் கூறப்பட்டது.

இறுதியில் மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தீர்மானத்தின்படி தாவரவியல் பூங்காவுக்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இதற்கான நிதியை பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தமக்கு ஒதுக்கப்படும் நிதியிலிருந்து ஒதுக்கினார். இதைப்பற்றி அவர் குறிப்பிடும்போது, "கிளிநொச்சி கனகபுரம் மற்றும் முழங்காவில் ஆகிய பகுதிகளில் உள்ள துயிலும் இல்லங்கள் கடந்த ஜனவரி மாதம் 16 ஆம் திகதி தாவரவியல் பூங்காவாக அறிவிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து நாம் குறித்த இரு பூங்காக்களையும் புனர்நிர்மாணம் செய்ய நிதி ஒதுக்கீடு செய்துள்ளோம். பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து ஒரு மில்லியன் ரூபாவும், பிரதமரின் அமைச்சின் கீழ் கிராம அபிவிருத்தி விசேட செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட 20 மில்லியன் ரூபாவில் 1.5 மில்லியன் ரூபாவையும் மொத்தமாக 2.5 மில்லியின் ரூபாவினை குறித்த அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக வழங்கியுள்ளேன்" என்று தெரிவித்தார்.

தொடர்ந்து வேலைகள் ஆரம்பமாகின. கரைச்சிப் பிரதேச சபை வேலைகளை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டது. இதோடுதான் அடுத்த கட்டப் பிரச்சினைகள் உருவாகின. அரச ஒதுக்கீட்டு நிதியில் மாவீரர் துயிலுமில்லத்தை எப்படிப் புனரமைக்க முடியும் என்ற கேள்விகளை எழுப்பியது அரசாங்கம். இது பெரும் சர்ச்சையை இலங்கை அரசியல் மற்றும் நிர்வாகக் களத்தில் உருவாக்கியுள்ளது. இதனால், இது தொடர்பான விசாரணைகளுக்காகவும் மேலதிக தகவல்களைப் பெறுவதற்காகவும் கொழும்புக்கு அழைக்கப்பட்டிருக்கிறார் கிளிநொச்சி மாவட்டச் செயலர் என மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.


இதற்கு முன்பு, பிரதேச சபையிடம் மாவீரர் துயிலுமில்லத்தைக் கடந்த ஆண்டு ஒருங்கிணைப்புக்குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் ஒப்படைத்தபோது, அதைப் பொறுப்பேற்ற பிரதேச சபைக்கும் மாவீரர்களுடைய உறவினர்களுக்குமிடையே ஒரு மோதல் நடந்தது. மாவீரர் துயிலுமில்லத்தை மாவீரர்களின் குடும்பங்கள் சிலவும் முன்பு போராளிகளாகச் செயற்பட்ட சிலருமாகப் புனரமைக்க முற்பட்ட வேளை அதைத் தடுத்தது பிரதேச சபை. இதனால் பிரதேசசபையின் செயலாளர் க. ஹம்சநாதனுக்கும் மாவீர்களின் உறவினர்களுக்குமிடையில் வாய்த்தர்க்கமும் கைகலப்பும் ஏற்பட்டன. இறுதியில் பொலிஸ் விசாரணை வரை விவகாரம் சென்றது.

"பிரதேச சபையின் அனுமதியை மீறி பொதுமக்கள் (மாவீரர் குடும்பங்கள்) துயிலுமில்லப் பணிகளைச் செய்ய முடியாது" என்பதே பிரதேச சபையின் வாதமாக இருந்தது. "ஒருங்கிணைப்புக் குழு சட்டபூர்வமான அங்கீகாரத்தையும் அதிகாரத்தையும் தமக்குத் தந்துள்ளது" என வாதிட்டார் பிரதேச சபையின் செயலாளர் ஹம்சநாதன். ஆகவே அவருடைய வாதத்தின்படி பிரதேசசபையின் அதிகாரத்துக்குக் கீழ் மாவீரர் துயிலுமில்லம் கொண்டு வரப்பட்டுள்ளது என்று முடிவாகியது. அதாவது மாவீரர் துயிலுமில்லம் அமைந்திருந்த வளாக நிலத்தின் உரிமை பிரதேச சபைக்கு அரசுக்குரியது என்பதானது.

இத்தகைய ஒரு நிலை ஏற்படும் என இந்தக் கட்டுரையாளரினால் ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டிருந்தது. ஏனெனில் மாவீரர் துயிலுமில்லங்கள் அமைந்திருக்கும் அநேகமாக காணிகள் அரசினுடையவையாக இருந்தவை. ஆகவே இதை விவகாரமாக்கி, சட்டப் பிரச்சினையாக்க முற்பட்டால், இவற்றை அரசு அதிகாரத்தின் கீழ் கொண்டு வருவதற்கான அபாய நிலை ஏற்படும் என எச்சரிக்கப்பட்டிருந்தது. ஆனால், இதை உரிய தரப்புகள் கவனத்திற் கொள்ளவில்லை.

இதன் விளைவே பிரதேச சபையின் பொறுப்பில், மாவட்டச் செயலகத்தின் கண்காணிப்பில் அல்லது மேற்பார்வையில்

தொடர்ச்சி 19-ம் பக்கம்...



# கிளிநொச்சியில் குறிவைக்கப்பட்ட பிரபாகரன்... தகவல் வந்தது அமெரிக்காவில் இருந்து!

## மலேசியா வழியாக புலிகளிற்கு அனுப்பப்பட்ட சற்றலைற் போனில் விசயமிருந்தது!

இந்தியா கொடுத்த புரபோஷல் 3

பீஷ்மர்

**தி.மு.க** தலைவர் கருணாநிதியின் மகள் கனிமொழிக்கும் விடுதலைப்புலிகளின் அரசியல் துறை பொறுப்பாளர் நடேசனிற்குமிடையில் பேச்சுவார்த்தைகள் நடந்ததாக ஒரு செய்தி வெளியாகியிருந்ததை அறிந்திருப்பீர்கள். அமெரிக்காவில் உள்ள பேராசிரியர் ஒருவர் மூலம் நடேசனிற்கும், கனிமொழிக்குமான தொடர்புகள் ஏற்பட்டதை கடந்த அத்தியாயங்களில் குறிப்பிட்டிருந்தோம்.

யுத்தம் முடிந்த பின்னர்தான் இந்த பேச்சு விபரங்கள் வெளியில் கசிந்தன. இரு தரப்பிலிருந்தும் பரிமாறப்பட்ட கடிதங்கள் சிலவும் வெளியாகின. இந்த கடிதங்கள் லீக் ஆனதில் அதிகம் அப்செற் ஆனவர் கனிமொழி. புலிகள் விடயத்தில் தி.மு.க வேடம்போட்டது என்ற அப்பிராயம் சாதாரண மக்களிடம்



ஏற்பட்டதில் இந்த கடித பரிமாற்ற விசயம் லீக் ஆனதும் முக்கிய பங்குவகித்தது. இந்த தொடர்பில் சம்பந்தப்பட்ட இருவர் நடேசன், கனிமொழி. இறுதிப்போரில் நடேசன் மரணமாகி விட்டார். விசயம் வெளியாவதென்றால் தன்னைத்தவிர, வேறு வழியில்லையென கனிமொழி நினைத்திருந்தார். அவர் வாயே திறக்காமலிருந்த, நடேசனுடனான கடித பரிமாற்றங்கள் லீக் ஆனது அவரை அதிர்ச்சியடைய வைத்தது. எப்படி அந்த விசயங்கள் லீக் ஆனதென்பதை கடைசியில் சொல்கிறோம்.

2009 ஜனவரியில் பரந்தன் நகரத்தை இராணுவத்தின் 58வது டிவிசன் கைப்பற்றியது. அடுத்தடுத்த நாட்களில் கிளிநொச்சி நகரும் இராணுவத்திடம் விழுந்தது. கிளிநொச்சி நகரை மையமாக வைத்து புலிகள் ஒரு இராஜதந்திர விளையாட்டை செய்ய விரும்பியிருந்தார்கள். கிளிநொச்சியை இராணுவத்தால் பிடிக்க முடியாது, யுத்தம் தொடர்வது வீணாண உயிரிழப்பைத்தான் ஏற்படுத்தும் என்பதை சொல்லாமல் சொல்லும் இராஜதந்திர விளையாட்டை செய்தார்கள். இதற்காக கிளிநொச்சியை சுற்றி பெரும் மண்அணைகளை அமைத்து, இராணுவம் உள்நுழைய முடியாதபடி பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்திருந்தார்கள். கிளிநொச்சியை கைப்பற்றுவது உண்மையிலேயே இராணுவத்திற்கு தலையிடியாகத்தான் இருந்தது.

கிளிநொச்சியை சுற்றியுள்ள மண் அணைகளை உடைக்க முடியாதென்பதை தெரிந்ததும், கரடிப்போக்கில் ஏ9 பிரதான வீதியை சந்தடியில்லாத நகர்வு மூலம் இராணுவம் கைப்பற்றி, பரந்தனையும் கிளிநொச்சியையும் வீழ்த்தினர்.

நிலைமை கட்டுமீறி போவதை உணர்ந்த நடேசன் ஒரு இரகசிய பேச்சு முயற்சியை ஆரம்பித்தார். நடேசன் இப்படியொரு முயற்சியை ஆரம்பிப்பதற்கு காரணமாக இருந்தவர் கே.பி. அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தை சேர்ந்தவர்களுடனும் கே.பி அப்போது பேசிக்கொண்டிருந்தார். இதை பிரபாகரனிற்கும் தெரியப்படுத்தியிருந்தார். ஆனால் சரணடைவு மூலமே சமாதானத்தை ஏற்படுத்தலாம் என்பது போன்ற பேச்சுக்கள் எதுவும் அப்பொழுது நடக்கவில்லை.

ஆனால், 2009 ஜனவரியிலேயே புலிகளை சரணடைய வைத்தாவது யுத்தத்தை நிறுத்தும் முயற்சியை கே.பி ஆரம்பித்து விட்டார்!

2009 ஜனவரியில் அமெரிக்க இராஜாங்க திணைக்கள அதிகாரிகளிற்கு கே.பி ஒரு புரபோஷலை அனுப்பியிருந்தார். அமெரிக்கா கப்பல் புலிகளை ஏற்ற வருகிறதென பின்னாளில ஒரு கதை உலாவியதே, இந்த புரபோஷல்தான் அந்த கதையை உருவாக்கியது!

அமெரிக்க புரபோஷல் பற்றிய விபரங்களை பின்னர் குறிப்பிடுகிறேன். அமெரிக்காவுடன் ஒரு பக்கமாக பேச்சை ஆரம்பித்ததை போல, இந்தியாவுடனும் பேச்சை ஆரம்பிக்க வேண்டுமென வன்னியிலிருந்த நடேசனை தொடர்பு கொண்டு கே.பி சொன்னார். கிளிநொச்சியின் வீழ்ச்சியுடன், யுத்தத்தை இனி வெல்ல முடியாதென்ற அபிப்பிராயம் நடேசனிற்கு வந்துவிட்டது. எப்படியாவது ஒரு சமரச முயற்சியை செய்ய வேண்டுமென நடேசன் யோசித்துக் கொண்டிருந்த சமயத்தில்தான், கே.பி பேசினார்.

இந்திய மத்திய அமைச்சர் சிதம்பரத்திற்கு, மலேசிய வர்த்தக புள்ளியொருவர் மூலம் புலிகள் 2008 செப்ரெம்பரில் ஒரு தகவல் அனுப்பினார்கள் என்பதை கடந்த அத்தியாயங்களில் குறிப்பிட்டிருந்தோம். ஒரு மாதத்தில் புலிகளுடனான சகல தொடர்பையும் அந்த வர்த்தகபுள்ளி துண்டித்து விட்டார். தனிப்பட்ட தொலைபேசி இலக்கத்தையும் மாற்றிவிட்டு, அலுவலகத்தை தொடர்புகொண்டாலும் "Boss இல்லை" என்பதை போன்ற பதிலை சொல்ல வைத்தார். அதற்கு காரணம் மலேசிய உளவுத்துறை!

புலிகளின் செய்தியொன்றை அந்த மலேசிய பிரபலம் சிதம்பரத்திற்கு பாஸ் பண்ணிய விவகாரம் மலேசிய உளவுத்துறைக்கு ஒரு வாரத்திற்குள் கிடைத்துவிட்டது. மலேசிய உளவுத்துறை புலிகளின் இந்திய தொடர்பை ட்ரக் பண்ணிக்கொண்டும் இருக்கவில்லை. அவர்களிற்கு இது முக்கியமில்லாத விசயம். ஆனால், நாட்டிற்கு அத்தியாவசியமான விசயத்தைபோல எப்படி இதை ட்ரக் பண்ணி பிடித்தார்கள்?

2009 மேவரை புலிகளும் இந்த விசயத்தில் தலையை பிய்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் விடை கிடைக்கவில்லை. இன்று வரை மர்மமாக உள்ள விசயங்களில் அதுவும் ஒன்று.

புலிகளிற்கும் இந்தியாவிற்குமிடையில் தூதராக செயற்பட்ட வர்த்தகரை மலேசிய உளவுத்துறை ஏன் தடுத்தது? அவர் தூதராக செயற்படுகிறார் என்ற விசயத்தை மலேசிய உளவுத்துறைக்கு தெரிவித்தது யார்?

புலிகள் இயக்கம் அழியும்வரை இதற்கான விடையை தேடினார்கள். கடைசி நேர நெருக்கடியில் இதற்கு சரியான பதிலை கண்டுபிடிக்க முடியாமல் போய்விட்டது. ஆனால் அப்பொழுது புலிகளிற்கு ஒருவர் மீது உறுதிப்படுத்தப்படாத சந்தேகம் இருந்தது.


அவர் கே.பி!

மலேசிய வர்த்தக புள்ளியின் மூலம் புலிகளும் இந்தியாவும் நெருங்கி வரலாம் என்ற சூழ்நிலை இருந்தது. இந்த சமரச முயற்சியை உடனடியாக நிறுத்தாவிட்டால், புலிகள் அனுகூலமடைய வாய்ப்புண்டு. இதையெல்லாம் தெரிந்த ஒருவர்தான், புகுந்து விளையாடியிருக்க வாய்ப்புண்டு. உள்ளேயிருந்த யாரோதான் டபிள்கேம் ஆடியிருக்கிறார்கள் என்பது புலிகளிற்கு தெரிந்தது. அவர் யார்?

2008 ஒக்ரோபரில் இருந்தே கே.பி மீது புலிகளிற்கு ஒரு சந்தேகம் இருந்து கொண்டிருந்தது. புலிகளின் வெளிநாட்டு உளவுப்பிரிவு நெட்வேர்க்கிலிருந்து கே.பி சம்பந்தமான சில இரகசிய தகவல்கள் பொட்டம்மான் மூலமாக பிரபாகரனின் காதிற்கு போயிருக்கிறது. வெளிநாட்டு உளவுப்பிரிவுகளின் மூலம் இலங்கை உளவுப்பிரிவிற்கு கே.பியுடன் தொடர்பு ஏற்பட்டு விட்டது, அவர்களது திட்டப்படியே அவர் இயங்குகிறார் என்பதே அவர்கள் அனுப்பிய தகவல்.

என்றாலும், பிரபாகரன் இதை அவ்வளவாக நம்பவில்லை. இன்னும் முழுமையாக உறுதிப்படுத்தும்படிதான் பதில் சொன்னார். அப்போதைய நெருக்கடியான சமயத்தில் இப்படியான பஞ்சாயத்தொன்றை அவர் விரும்பி பாலிருந்திருக்கலாம். கே.பியின் உயர்மட்ட பொறுப்பாளர்கள் யாராவது வெளிநாட்டு உளவுப்பிரிவுகளுடன் தொடர்பை வைத்திருந்திருக்கவும் வாய்ப்புள்ளது, ஏற்கனவே ஒருமுறை கே.பி மீது வீணான சந்தேகம் கொண்டு அவரை ஒதுக்கியது பிரபாகரனின் மனதில் இருந்ததால், இம்முறை வந்த குற்றசாட்டை அவ்வளவாக கண்டுகொள்ளவில்லை.

என்றாலும், சில எச்சரிக்கையான நடவடிக்கைகள் எடுத்திருந்தார். கே.பியுடன் அல்லது அவரது நெறிவோர்க்கில் உள்ள யாருடனும் 2009 ஜனவரியின் பின்னர் செய்மதி தொலைபேசியில்



பிரபாகரன் பேசியதில்லை.

அவசியமான தகவல் என்பதால் இடையில் இன்னொரு கொசுறு தகவலையும் சொல்லிவிடுகிறேன். இதுவும் புலிகளின் செய்மதி தொலைபேசிகள் பற்றிய செய்திதான்.


புலிகள் இயக்கத்திற்காக முதன்முதலில் செய்மதி தொலைபேசிகள் வாங்கப்பட்டது மலேசியாவில். அது மலேசிய உரிமையாளரின் நிறுவனமல்ல. அமெரிக்க செய்மதி தொலைபேசி நிறுவனத்தின் சப்டீலர் நிலையமே மலேசியாவில் இயங்கியது. ஒரே தடவையில் அதிக தொலைபேசிகளை வாங்குவது யாரையும் சந்தேகம் கொள்ள வைக்கும். புலிகள் முதல்முறை வாங்கியது ஐம்பது தொலைபேசிகள்!

2006 இன் பின்னர் புலிகளின் பல இலக்குகள் மீது இலங்கை விமானப்படை துல்லிய தாக்குதலை நடத்தியிருந்தது. இதில் புலிகளிற்கு கணிசமான சேதம்

தொடர்ச்சி 10-ம் பக்கம்...

# விபசார அழகியிடம் சிக்கிய மொசாட் ஏஜெண்ட்!

## வெளிநாட்டில் நடந்த சிரியா VS இஸ்ரேல் இரகசிய மோதல்



இந்த பகுதியில் நாம் குறிப்பிட போகும் சம்பவம், உளவுத்துறை வட்டாரங்களிலேயே இரகசியமாக வைக்கப்பட்டிருந்து, இரண்டு வருடங்களின் முன்னர்தான் வெளியுலகத்திற்கு கசிந்தது. இந்த நடவடிக்கையில் தெரியாமல் சம்பந்தப்பட்ட துருக்கி புலனாய்வுதுறை, இந்த சம்பவத்தை பற்றி விரிவான விசாரணை நடத்தியிருந்தது. ஆனாலும் சம்பவத்தை வெளியிடாமல் வைத்திருந்தது. காரணம், விசயம் வெளியில் வந்தால் துருக்கி உளவுத்துறையின் பெயர் மொத்தமாக டமேஜாகிவிடலாம் என்ற அச்சமே!

பொதுவாகவே உளவுத்துறைகளின் இரகசிய ஒப்ரேஷன்கள் முடிந்ததும், அடுத்த சில வருடங்களில் அந்த சம்பவம் எப்படி நடந்ததென்பது அடியிலிருந்து நுனி வரை விலாவாரியாக வெளியாகிவிடும். நாம் கடந்த சில வாரங்களாக வெளியிட்ட அட்டவாரியஸ் கப்பல் சம்பவம் 1986 இல் நடந்தது. 1991 இல் இந்த சம்பவம் பற்றிய அத்தனை தகவல்களும் வெளியாகிவிட்டது. ஆனால் அதே ஆண்டு நடந்த "ஒப்ரேஷன் பொட்டாட்டோ" (operation potato) பற்றிய தகவல்கள் 2015இல்தான் வெளியாகியது. துருக்கி உளவு அமைப்பின் மூன்றாம் நிலை அதிகாரியாக பதவி வகித்த இப்ராஹிம் அலி 2013இல் ஓய்வுபெற்றார். 2015இல் அவர் ஒரு புலனாய்வு பத்திரிகையாளருடன் பேசி, அந்த பத்திரிகையாளரால் ஒப்ரேஷன் பொட்டாட்டோ பற்றிய விபரங்கள் வெளியுலகத்திற்கு தெரிய வந்தது.

இந்த புலனாய்வு தொடர், கடந்த இதழ்களுடனும் தொடர்புடையது. யாராவது வாசகர்கள் கடந்த இதழ்களை வாசிக்க முடியாமல் போய், இந்த இதழை வாசித்தால் தலை சுற்றும். அவர்களிற்காக சிறிய பிளாஷ்பேக்.

அட்டவாரியஸ் கப்பல் ஒப்பரேஷனில் ஆறு PLO போராளிகள் இஸ்ரேலியர்களிடம் உயிருடன் அகப்பட்டிருந்தார்கள் என்பதை கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தோம். அவர்களை விசாரணை செய்ததில், அந்த ஒப்ரேஷனின் பின்னணியில் சிரிய உளவுத்துறை இருந்ததை இஸ்ரேல் தெரிந்து கொண்டது. உடனே, சிரிய உளவுத்துறைக்கு ஒரு நையாண்டி மெசேஜ் அனுப்பினார்கள்.

மொசாட் அனுப்பிய மெசேஜ் "உங்கள் உருளைக்கிழங்குகள் வந்து சேர்ந்தனவா? அனேகமாக இப்பொழுது அவற்றை மீன்கள் சாப்பிட்டிருக்கும். ஆறு உருளைக்கிழங்களை மட்டும் எடுத்து வந்தோம். நன்றாக தோல் சீவிவிட்டோம். அனுப்பி வைக்கவா?" என, உயிருடன் பிடித்த அறுபேரின் பெயர்களையும் சேர்த்து அனுப்பினார்கள். சிரிய உளவுத்துறை பதிலனுப்பாமல் கப்சிப்பாக இருந்து விட்டார்கள் என்று குறிப்பிட்டிருந்தோம்.

உளவுத்துறைகளின் இரகசிய நடவடிக்கைகள் 03

சரியாக ஒரு மாதம் கழித்து, "ஒப்ரேஷன் பொட்டாட்டோ" (operation potato). என்ற ஒப்ரேஷன் மூலம் பதிலளித்தார்கள் என்று கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தோம்.

அதென்ன ஒப்ரேஷன் பொட்டாட்டோ?


அட்டவாரியஸ் கப்பலை உருளைக்கிழங்கு ஏற்றிச் செல்லும் கப்பலாகத்தான் சிரிய உளவுத்துறை பாவனை செய்தது. அதை மோப்பம் பிடித்த மொசாட், கப்பலில் இருந்தவர்களை கைது செய்த பின்னர் "உருளைக்கிழங்குகள் வந்து சேர்ந்தனவா?" என்றுதான் நக்கலாக கேட்டிருந்தார்கள். இதனால் மொசாட்டிற்கு பதிலடி கொடுக்க, ஒப்ரேஷன் பொட்டாட்டோ என்று பெயரிட்டனர். ஆனால், அந்த பெயர் ஒப்ரேஷனிற்கு கச்சிதமாக பொருந்தி வந்ததுதான் சுவாரஸ்யமான விசயம்.

பொதுவாக ஊடகங்களில் சி.ஐ.ஏ, மொசாட் செய்த ஒப்ரேஷன்கள் பற்றிய விபரங்கள்தான் வெளியாகி வருகின்றன. மற்ற நாட்டு உளவுத்துறைகளின் நடவடிக்கைகள், சி.ஐ.ஏ, மொசாட் போன்ற உளவுத்துறைகளிற்கு எதிராக செய்த கவுண்டர் ஒப்ரேஷன்கள் பற்றி யாரும் எழுதுவதில்லை. இந்த குறையை தீபத்தில் வெளியாகும் இந்த கட்டுரை தீர்க்கும்.

சிரியாவின் ஒப்ரேஷனிற்குள் நுழைய முன்னர், நசிப் ஹெறிபெக் (Nasif Kheirbek) யார் என்பதை பற்றி சொல்ல வேண்டும். சிரிய உளவுத்துறையில் (General Intelligence Directorate) அப்போது Palestinian Affairs Division இல் பணியாற்றிய இளநிலை அதிகாரி. பின்னர் சிரிய தேசியப்பாதுகாப்பு கவுன்சிலில் மிக முக்கிய பொறுப்பில் இருந்தவர். அதிபர் பஷீர் அல் ஆசாத் முக்கிய விவகாரங்களில் நசிப் ஹெறிபெக் உடன் கலந்தாலோசிக்கிறார் என்கின்றன உளவுத்துறை வட்டாரங்கள்.

1980களின் நடுப்பகுதியில் நசிப் ஹெறிபெக் இன் திறமையை சிரிய உளவுத்துறை தலைவர்கள் சரியாக கணிக்கவில்லை. ஆனால் மொசாட் துல்லியமாக கணித்துவிட்டது. ஒட்டுமொத்த சிரிய உளவுத்துறையும் தமக்கு சவாலில்லை, நசிப் ஹெறிபெக் என்ற தனிநபர்தான் தமக்கு தலையிடியாக இருப்பார் என கணக்கிட்டது. 1989ம் ஆண்டுக்குள் அவர் மீது நான்கு இரகசிய கொலை முயற்சிகள் மொசாட்டினால் செய்யப்பட்டன. அத்தனையிலும் சமயோசிதமாக தப்பிவிட்டார்.

அட்டவாரியஸ் சம்பவத்திற்கு பதிலடி கொடுக்கும் பொறுப்பு நசிப் ஹெறிபெக்கிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர் தனது அலுவலகத்தில் இருந்து வெளிநாடுகளில் உள்ள தமது ஏஜெண்டுகள்



பற்றிய விபரங்களை புரட்டிக் கொண்டிருந்தார். துருக்கியில் செயற்படும் ஏஜெண்ட்களை கவனித்துக்கொண்டிருக்க, அதில் ஒரு பெயர் எலிஷிபா. அசல் யூத பெண்.

சிரிய உளவுத்துறையில் ஒரு யூத பெண்!

சுவாரஸ்யமாக இருக்கிறதே என, அவரது பைலை புரட்ட தொடங்கினார். கிழக்கு ஜெருசலேமுக்கு பக்கத்தில் உள்ள நகரமொன்றை சேர்ந்த யூத தந்தையொருவருக்கும், பாலஸ்தீன தாய்க்கும் பிறந்தவர் எலிஷிபா. அவரது தாயின் சகோதரர்கள் நால்வர். அதில் மூவர் பாலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் நெருக்கமான தொடர்பில் இருந்தவர்கள். ஒருவர் இஸ்ரேல் இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டவர். எலிஷிபா குடும்பம் பின்னர் சிரியாவிற்கு குடி பெயர்ந்து விட்டது.

21வது வயதில் எலிஷிபா துருக்கியில் பயோமெடிசின் படிக்க சென்றார். அதாவது நசிப் ஹெறிபெக் அவரது பைலை புரட்டிக் கொண்டிருப்பதற்கு ஒன்றரை வருடங்களின் முன்னர்.

துருக்கிக்கு வந்த பின்னர்தான், தனது மாமாக்கள் மூவரையும் தன்வாழ்நாளில் முதன்முறையாக துருக்கியில் சந்தித்தார். எலிஷிபாவின் தாயாரின் மூத்த அண்ணன் மொஹமட் ஹமீட் துருக்கியில் பிஸ்னஸ் செய்து கொண்டிருந்தார். அது PLO விற்கான பிஸ்னஸ். ஆனால், அது வெளியில் தெரியாமல், தானே செய்வதை போல காட்டிக்கொண்டிருந்தார். அவர் மூலமே எலிஷிபா சிரிய உளவுத்துறை வலைக்குள் வந்தார்.

இதுவரை எலிஷிபா ஒரு பெரிய ஒப்ரேஷனில் பங்குபற்றியதில்லை. வெறும் இன்போர்மராகத்தான் இருந்தார். அதையும் அவ்வளவு சீரியஸாக அவர் எடுத்துக் கொண்டிருக்கவில்லை.

எலிஷிபா பயன்படுத்தி ஒரு ஸ்லை விளையாட்டை நடத்த

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

நசிப் ஹெரிபெக் தீர்மானித்தார்!

**இப்பொழுது ஒரு பிளாஷ்பேக்.**

அட்டவாரியஸ் கப்பல் சம்பவத்தின் பின்னர், "எங்கே பிழைத்தது?" என சிரிய உளவுத்துறை வலு சீரியசாக தேடிக் கொண்டிருந்தது. அப்போதுதான் துருக்கியில் உள்ள மொசாட் இன்போர்மர் ஒருவர் பற்றிய தகவல் சிரிய உளவுத்துறைக்கு கிடைத்தது. பொதுவாக உளவு விளையாட்டுக்களில் அழகிகளும், பாலியல் உறவும் தவிர்க்க முடியாத ஒரு அங்கம். அனேக உளவுத்துறை ஒப்ரேஷன்கள் அழகிய பெண்களால் நடத்தப்பட்டுள்ளது. விபசார விடுதிகளில் அவிழ்க்கப்பட்ட இரகசிய முடிச்சுக்களும் உள்ளன.

துருக்கி தலைநகர் அங்காராவின் புறநகர் பகுதியில் இன்ஷூரன்ஸ் ஏஜெண்ட் டாக இருந்த ஒருவர் மீது சிரிய உளவுத் துறைக்கு வலுவான சந்தேகம் இருந்தது. 1985இன் இறுதியில் அல்ஜீரியாவில் வைத்து மொசாட் இன்போர்மர் ஒருவரை சிரிய உளவுத்துறை இரகசியமாக தூக்கி வந்தது. மொசாட் உளவுத்துறையை பற்றிய சிறிய விளக்கமொன்றை தர வேண்டும். மொசாட் ஒப்ரேஷன்களில் களத்தில் செயற்படுபவர்கள் மூன்று வகையானவர்கள்.

முதல் வகை சயான் (Sayan) ஆட்கள். ஒரு வட்டத்திற்குள் மூன்று வட்டங்கள் இட்டால் மூன்றாவது வட்டத்தில் இருப்பார்கள். இவர்களை தேவைக்கு பயன்படுத்திவிட்டு சமயங்களில் கைகழுவியும் விடுவார்கள். அட்டவாரியஸ் கப்பல் ஒப்ரேஷனில் அல்ஜீயர்ஸ் துறைமுக சுங்க அதிகாரியொருவரை பற்றி ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம் அல்லவா, அவர் சயான் வகையை சேர்ந்தவர்தான்.

இரண்டாவது வட்டத்தில் வருபவர்கள் கஸ்டா (Katsa) ஆட்கள். இவர்கள் Field intelligence officers. அதாவது களத்தில் செயற்படும் உளவாளிகள். மூன்றாவது வட்டத்தினரான சயான் வகையினரை இவர்கள்தான் கையாள்வார்கள். சயான் ஆட்களிற்கு கஸ்டா ஆட்களுடன்தான் தொடர்பிருக்கும்.

வட்டத்தின் மையத்தில் இருப்பவர்கள் கிடொன் (Kidon) ஆட்கள். இவர்கள் ஆபத்தானவர்கள். இரகசிய ஒப்ரேஷன் களை செயற்படுத்துபவர்கள் இவர்கள் தான். யாரென்றாலும் "போட்டு தள்ளிக்கொண்டு" போய்க்கொண்டே யிருப்பார்கள்!

அல்ஜீரியாவில் சிரிய உளவுத்துறை தூக்கியது ஒரு சயான் வகையானவர். அல்ஜீரியாவில் உள்ள சிரிய இரகசிய இடமொன்றில் அவரை விசாரித்தனர். விசாரணையின் போது அடித்ததில், கொஞ்சம் எக்குத்தப்பாக அடி பட்டு அவர் இறந்துவிட்டார். அவரது உடலை இரகசியமாக புதைத்துவிட்டனர். அவரிடமிருந்து நோட் புக் ஒன்றையும் எடுத்திருந்தனர். அது ஒன்றுதான் சிரிய உளவுத்துறையின் கையிலிருந்த ஒரே துரும்பு. நோட் புக்கில் விட்டு கணக்கு வழக்குகள் சில எழுதப்பட்டிருந்தன. சில கணக்கு வழக்குகளின் இறுதியில் சந்தேகப்படும் விதமான ஒவ்வொரு வரி இருந்தது. மொத்தம் நான்கு கணக்குகளின் கீழ் சில வசனங்கள் எழுதப்பட்டிருந்தன.

Police no 931259
Police no 033174
All police collected
Junuary New agent 4

அந்த நோட்புக்கை ஆராய்ந்த சிரிய உளவுத்துறை அதிகாரி, இந்த நான்கு வசனங்களையும் தனியே எழுதி வைத்தார். இதில் ஏதோ சம்திங் இருக்கிறதென அவரது உள்ளுணர்வு சொல்லிக் கொண்டிருந்தது. தூக்கி வந்த சயான் ஆள் இன்ஷூரன்சுடன் தொடர்பற்றவர். ஏன் இன்ஷூரன்சுடன் தொடர்பான வசனங்களை எழுதி வைத்திருக்கிறார்?

இந்த இலக்கங்களை வைத்து பலவாறாக யோசித்து கொண்டிருந்த சிரிய உளவுத்றை ஆளுக்கு, இது ஒரு தொலைபேசி இலக்கமாக இருக்கலாமோ என்ற சந்தேகமும் வந்தது. அப்படியே டயல் பண்ணி பார்த்தார். பலனில்லை. இலக்கத்தை பலவிதமாக மாற்றி மாற்றி டயல் பண்ணிக் கொண்டேயிருந்தார். இரண்டு இலக்கத்தின் முதல் எண்ணை எடுத்து பார்த்தார், அது துருக்கியின் Country calling code!

இரண்டு எண்ணை அப்படியே போட்டுவிட்டு, இரண்டாம் எண்ணை வரிசை மாற்றி போட்டு டயல் செய்ய, துருக்கிக்கு அழைப்பு சென்றது. அல்ஜீரியாவில் இருந்து அறியாத இலக்க அழைப்பு வந்ததையடுத்து, துருக்கியிலிருந்தவர் அழைப்பை துண்டித்து அனுப்பப்பட்டு, அண்மையில் வீட்டை காலி செய்தவர் என்ற உப தகவலும் அனுப்பப்பட்டிருந்தது.

அப்பொழுது அங்காராவின் புறநகர் பகுதியொன்றில் இருந்து ஒரு சிரிய உளவுத்துறை இன்போர்மர் மேலிடத்திற்கு ஒரு தகவல் அனுப்பினார். "இங்குள்ள விபசார விடுதியொன்றிற்கு இரண்டுநாளாக புதிய ஆள் ஒருவர் வருகிறார். இன்ஷூரன்ஸில் வேலை பார்க்கிறாராம்"

விபசார விடுதியில் உள்ள பாலியல் தொழிலாளிஒருவர், அந்தஇன்போர்மரிற்கு தகவல் கொடுப்பவராக இருந்துள்ளார். உடனே உசாரடைந்த சிரிய உளவுத் துறை, தனது ஏஜெண்ட் ஒருவரை அனுப்பி, அந்த துருக்கி விபச்சாரிக்கு சில உளவுத்துறை டிப்ஸ்களை சொல்லிக்கொடுக்க வைத்தது. பின்னர் அந்த இன்ஷூரன்ஸ் ஆளை வளைத்து, விசயத்தை கறக்க சொன்னது.

மொசாட் இன்போர்மர்கள் வழக்க மாக மிக உசாரானவர்கள். எல்லா இடத்திலும் சில உசார் மடையர்கள் இருப்பார்கள்தானே. இந்த இன்ஷூரன்ஸ் ஆளும் ஒரு உசார் மடையன்தான். விபசார விடுதிக்கு வரும் உசார் மடையனை முதல் சில தடவைகள், சிரிய இன்போர்மராக்க விரும்பினார் அந்த இன்ஷூரன்ஸ் ஆள். அது பற்றி பேசினார். அந்த பெண் கொஞ்சம் தயங்கினார். முதல் தரத்தில் எதையும் முடிக்க முடியாதென நினைத்துக்கொண்டு இன்ஷூரன்ஸ் கிளம்பிவிட்டார். உடனே தன்னுடைய ஏஜெண்டுக்கு அந்த பெண் விசயத்தை சொன்னார். நாம் தேடும் முகமறியாத மொசாட் ஆள் இவர்தான் என்பது சிரிய உளவுத்துறைக்கு தெரிந்து விட்டது. என்றாலும் கொஞ்சம் விட்டுப்பிடித்தது!

மொசாட் இன்போர்மராக வேலை செய்யத அந்த பெண் சம்மதித்தார். புதிய இன்போர்மர் கிடைத்த விசயம், துருக்கியில் இருந்த மொசாட் பொறுப்பாளருக்கு சென்றது. அவரது நடவடிக்கை பெயர் டபிள் அல்பா (AA) "நல்ல விசயம், நாளை இரவு அவளை நான் சந்திக்கிறேன்" என்றார் அவர்.

துருக்கி, அல்ஜீரிய பிராந்திய மொசாட் நடவடிக்கைகளை கையாண்டு கொண்டிருந்த ஆள்தான் அவர். பாலியல் தொழிலாளியான அந்த பெண்ணை உடனே சந்திக்க அவர் ஏன் ஆர்வப்பட்டார் தெரியுமா?

AAஉம் பெண்கள் விசயத்தில் கொஞ்சம் வீக். கொஞ்சமென்றும் சொல்ல முடியாது. நிறைய. இந்த வீக்தான் இன்ஷூரன்ஸ்



விட்டார். துருக்கியில் அந்த தொலைபேசி இலக்கத்திற்குரிய வீட்டை சிரிய புலனாய்வுத்துறை தேட, அந்த வீட்டில் வாடகைக்கிருந்தவர் கடந்தவாரம்தான் திடீரென வீட்டை காலி செய்தார் என்ற பதிலே வந்தது. வாடகைக்கிருந்தவரை பற்றிய எந்த மேலதிக தகவலும் வீட்டு உரிமையாளரான வயதான பெண்மணியிடம் இருக்கவில்லை.

"அங்காராவில் உள்ள இன்ஷூரன்ஸ் ஆள்" என்ற ஒற்றை வரி தகவல் மட்டும் சிரிய உளவுத்துறையிடம் இருந்தது. இந்த மொட்டை தகவல் துருக்கியில் இருந்த சிரிய உளவுத்துறை இன்போர்மர்களிற்கு இன்போர்மரான பாலியல் தொழிலாளி கரெக்ட் பண்ணிவிட்டார். அதாவது, சிரிய உளவுத்துறை இன்போர்மரின் வாடிக்கையாளராகினார் மொசாட் இன்போர்மர்!

பொதுவாக யாரிடமாவது தகவல் கறப்பதற்கு பெண்களைத்தான் உளவுத் துறையினர் அதிகமாக பயன்படுத்து வார்கள். அதிலும், பாலியல் தொழிலில் உள்ள உயர்மட்ட பெண்கள் என்றால் உளவுத்துறைகளிற்கு மிக பிடிக்கும். சிரிய இன்போர்மர் அப்படியானவர்தான். நான்கைந்து தடவைகள் சென்ற பின்னர், அந்த யுவதியை மொசாட் ஆளையும் AAயையும் இணைந்தது. இன்ஷூரன்ஸ் ஆள் அழகான பெண்களை, தனது AAக்கு அறிமுகம் செய்து வைப்பது வழக்கம். இந்த பலவீனம்தான் மொசாட்டிற்கு பெரும் அடி வி காரணமானது.

இத்துடன் பிளாஷ்பேக் முடிந்து, நசிப் ஹெரிபெக்கின் ஒப்ரேஷன் ஆரம்பிக்கிறது. இந்த இடத்தில் எலிஷிபா களமிறக்கப்பட்டார். எலிஷிபாவின் அழகிய புகைப்படமொன்று AAயின் கைக்கு சென்றது. எப்படி சென்றது? AA என்ன செய்தார் என்பதை அடுத்த வாரம் குறிப்பிடுகிறோம். (தொடரும்)

தீபம்
989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர்
தொடர்புகளிற்கு
ஆசிரியர்பீடம் : 0214927562 விநியோகம், விளம்பரம் : 0214927542, 0768255563
அலுவலகம் : 0214927561 கருத்துக்கள், முறைப்பாடுகள் : 0768255562
செய்திகள் அனுப்ப : deepamdesk@gmail.com




# நீங்களும் பிஸ்னஸ் புள்ளி ஆகலாம்!

**1**

**நீங்களும் முன்னணி businessman ஆக முடியும். ஒரேயொரு தடையை கடந்தால், உங்களால் அது முடியும். அந்த தடையை கடக்க வைத்து, உங்களையும் வெற்றியாளராக்குகிறோம். ஒவ்வொரு வாரமும் இந்த தொடரை படியுங்கள்.**

### உன்னை நீயே அறிவாய்

யாழ்ப்பாண நகரத்திற்கு வருபவர்கள் பலரும் அங்குள்ள பெரிய வர்த்தக நிலையங்களை பார்த்து, அப்படியொன்றிற்கு உரிமையாளராக வேண்டுமென நினைக்கிறார்கள். அவரவர் துறையை பொறுத்து கனவு மாறுபடுகிறது.

தொழில்நுட்பத்துறையில் உள்ளவர்கள் பில்கேட்ஸ், மார்க் சக்கர்பெர்க் மாதிரி ஆகுவதை விரும்புவார்கள். விவசாய குடும்பத்தை சேர்ந்த ஒருவர், அதனுடன் தொடர்புடைய மாதிரி ஒரு பெரிய நிறுவனத்தை ஆரம்பிக்க வேண்டுமென கனவு காண்பார். இந்த கனவு, வெறி, பிரமிப்பு எல்லாவற்றிற்கும் பலன் கிடைக்காமல் போகாதென சொல்ல முடியுமா? முடியாது. எந்த விதைக்குள் எந்த விருட்சமென்பதை யாராலும் சொல்ல முடியாது.

கடின உழைப்பும், பொசிற்றிவான சிந்தனையும் இருந்தால் அவர் ஜெயிக்கலாம். பிஸ்னஸ்மேன் (businessman) ஆகலாம். வாழ்க்கையின் அடிநிலையில் இருந்தாலும், உயர்நிலைக்கு வரலாம். இதற்கு அடிப்படையான முதலாவது விசயம் "என்னிடம் பிஸ்னஸ்மேன் ஆகக்கூடிய முழு திறனும், தகுதியும் இருக்கிறது" என நீங்கள் நம்ப வேண்டும். இரண்டாவது, பிஸ்னஸில் ஜெயிக்க வைக்கும் அத்தனை வித்தைகளைளும் சூட்சுமங்களையும் அறிந்துகொள்ள மனக்கண்ணை எப்பொழுதும் திறந்து வைத்திருக்க வேண்டும்.

இளைஞர்கள் சிலர் ஒன்று சேர்ந்தாலே "படிப்பிற்கேற்ற வேலை கிடைக்கவில்லை. நமது கப்பாசிற்றிக்கு ஏற்ற வேலையை தராமல், ஏதோ ஒரு வேலையை தந்துள்ளார்கள். இப்படியே ஈயோட்டிக்கொண்டிருந்தால் வயதுதான் போகும்" என்றுதான் பேசுகிறார்கள். இளவயதில் உள்ள அத்தனைபேருமே, சொந்தமாக தொழில் தொடங்கினால் மாத்திரமே இளைஞர்களின் வேலை வாய்ப்பு பிரச்சனையை தீர்க்கலாமென நம்புகிறார்கள்.

### ஏன் தொழில் தொடங்க வேண்டும்?

ரொபர்ட் கியாஸ்கி பிஸ்னஸ் தொடர்பாக புத்தகங்கள் எழுதி உலகப் புகழ் வெற்றவர். 21ம் நூற்றாண்டு தொழில்முனைவோருக்கானது என ஒரு புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார். காரணம், இன்றைய நூற்றாண்டு மனிதர்களில் சொந்தமாக தொழில் செய்து வாழ்பவர்கள் மட்டும்தான் வாழலாமென நினைக்கிறார்கள். எஞ்சியவர்கள் பாதுகாப்பின்மையை குறிப்பிடுகிறார்கள்.

இன்றைய பரபரப்பான வாழ்க்கைமுறை, நமது எதிர்காத்தை நிலையற்றதாக்கும். வேலை, சம்பளம் ஏதுவுமே நிரந்தரமில்லை. அறவுணர்ச்சியும் குறைந்து செல்கிறது. பொருளாதார பாதுகாப்பை உறுதிசெய்ய, தனியே தொழில் தொடங்குவது மட்டுமே வழி. தனி தொழில் தொடங்கினால் நீங்கள் சுதந்திரமாக செயற்பட முடியும். யாரிடமும் உங்களை நிரூபித்துக் கொண்டிருக்க தேவையில்லை. அனைத்தையும் நீங்களே நடைமுறைப்படுத்தி முயற்சித்து பார்க்கலாம்.

மக்களின் தேவை, நுகர்வு கலாசாரமும் வெகுவாக மாறிவிட்டது. இது மெகா சந்தையை உருவாக்கி விட்டது. இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்பவர்கள் வெற்றியடைகிறார்கள். சரியான தொழிலை அடையாளம் காண்பவர்கள் வெற்றியடைகிறார்கள்.

### எல்லோராலும் பிஸ்னஸ் செய்ய முடியுமா?

இன்று படித்து முடித்ததும் 35% இளைஞர்கள் ஏதோ ஒரு வேலைக்கு போய்விடுகிறார்கள். இன்னொரு 35% இளைஞர்கள் படித்து முடித்ததும் என்ன செய்வதென தெரியாமல் திண்டாடுகிறார்கள். படிக்கும் காலத்தில் ஏன் படிக்கிறோம், என்ன படிக்கிறோம், எதிர்காலத்தில் என்ன செய்ய போகிறோம் என்பதைப்பற்றி இவர்கள் பெரிதாக கவலைப்பட்டிருக்கமாட்டார்கள். படித்து முடித்த பின்னரே என்ன செய்வதென்று தெரியாமல் திண்டாடுவார்கள்.

25% ஆட்கள் குடும்பத்தின் தொழிலை செய்கிறார்கள். மீதியுள்ள வெறும் 5% இளைஞர்கள் மட்டுமே சொந்தமாக தொழில் செய்ய முடிவெடுக்கிறார்கள்.

இதில் வேலை செய்யும் 35% இளைஞர்கள், தமது 30 வயதை கடந்த பின்னர்தான் "ஏன் நாம் சொந்தமாக தொழில் தொடங்ககூடாது?" என சிந்திக்கிறார்கள். இப்படி பலரும் யோசித்தாலும், வேலை பார்த்த அனுபவத்தை கொண்டு சொந்தமாக தொழில் ஆரம்பிப்பவர்கள் வெகு சிலர்தான். இருக்கும் வேலையை விட்டுவிட்டு தொழில் தொடங்கினால் மாத சம்பளம் இல்லாமல் போய்விடும் என பயப்படுகிறார்கள் மற்றவர்கள். தொழில் நஷ்டம் வந்தால்? என்ற பயமும் சேர்ந்துவிடுகிறது.

பிஸ்னஸின் முதல் தேவை பணம் என்றுதான் பலரும் நினைக்கிறார்கள். உண்மையில் அது சரியல்ல. கொஞ்சம் முயற்சித்தால் பணத்தை தயார் செய்துவிடலாம். அதைவிட முதலில் தேவை பிஸ்னஸ் செய்யப்போகிறவர் தன்னை தயார்படுத்த வேண்டும். பிஸ்னஸிற்காக மனதளவில் தயாரானாலே, முதல்படியை கடந்து விட்டீர்கள் என்பது அர்த்தம்!

பிஸ்னஸ் செய்ய வேண்டும், வாழ்வில் வெற்றியடைய வேண்டுமென்ற வெறி உங்கள் தூக்கத்தை கெடுத்துக் கொண்டிருக்க வேண்டும்.

ஒரு இடத்தில் வேலை பார்ப்பதும், பிஸ்னஸ் செய்வதும் ஒன்றல்ல. தொழில் தொடங்கும்போது படிப்பு, வயது. மொழி எல்லாம் பெரிய விசயங்கள் அல்ல. தொழில் செய்து லாபம் சம்பாதிக்க வேண்டுமென்ற வெறி இருந்தால், தொழில் அறிவை எளிதாக யாராலும் பெற்றுவிட முடியும். நீங்கள் தயாரிக்கும் பொருள் அல்லது கொடுக்கும் சேவையை மக்கள் ஏற்பார்களா என்ற சந்தேகம் உங்களிற்கு வரவே கூடாது. மக்களுக்கு தேவையான பொருளை, சேவையை அவர்கள் விரும்பும் விதத்தில் கொடுத்தால் ஏற்றுக்கொள்வார்கள்!

### பெரிதாக ஆசைப்படுங்கள்!

பிஸ்னஸ் தொடங்குவதென முடிவெடுத்தால், என்ன பிஸ்னஸ் செய்யப்போகிறோம், எப்படி செய்யப் போகிறோம் என்பதை திட்டமிட வேண்டும். திட்டங்களை நிறைவேற்ற என்னவெல்லாம் தேவையென்பது தெரிந்திருக்க வேண்டும். பிஸ்னஸ் என்பது பெட்டிக்கடையொன்றை தொடங்கி நடத்துவதை போன்ற விசயமென நினைத்தால், தொழில் செய்யவே நினைக்காமலிருக்கலாம்.

பிஸ்னஸ் என்பது பெரிய விசயம். பிஸ்னஸிற்கு பெயர் வைப்பதிலிருந்து, முறைப்படி பதிவுசெய்வது, வரி கட்டுவது, படிப்படியாக வளர்ந்து முன்னணி தொழிலதிபராக உயர்வது வரை எல்லாம் சேர்ந்ததுதான் பிஸ்னஸ். இந்த வளர்ச்சியை விரும்பும் அணுகுமுறைதான் புதிதாக தொழில் தொடங்குபவர்களிடம் இருக்க வேண்டும்.

### ஜாக் மா உதாரணம்

பிஸ்னஸ் செய்யும் ஆர்வம் இருந்தும், என்ன பிஸ்னஸ் செய்வதென்ற குழப்பம் தான் பெரும்பாலானவர்களிடம் இருக்கும். "தெரிந்த தொழிலை விட்டவனும் கெட்டான். தெரியாத தொழிலை தொட்



டவனும் கெட்டான்" என்ற மூத்தவர்கள் சொல்வார்கள். அது அவ்வளவு சரியானதல்ல. அனுபவமில்லாத முற்றிலும் புதிய தொழில்களில் இறங்கி பெரும் சாதனை படைத்தவர்கள் பலர் இருக்கிறார்கள்.

ஜக் மாவும் அதில் ஒருவர். இவருக்கு ஆங்கிலம் தெரியாது. முன்பின் பிஸ்னஸ் செய்த அனுபவமும் கிடையாது. வேலை தேடி கடைகடையாக அலைந்தார். ஆனால், இன்று அவரது ஒன்லைன் ஷொப்பிங் பிஸ்னஸ் உலகம் முழுவதும் கொடிகட்டி பறக்கிறது.

ஜாக் மா செய்தது ஒன்றுதான். திறந்த மனதுடன் சந்தையை அணுகினார்.


தொடர்ச்சி அடுத்தபக்கம்...

அவருக்குள் இருந்த தேடல் பிஸ்னஸிற்கான வழிகை காட்டியது. பிஸ்னஸை வளர்ப்பதற்கான திறனையும், அறவையும் வளர்க்க தன்னையொரு மாணவனாகவும் மாற்றிக்கொண்டார். எல்லோருக்கும் எல்லாம் தெரியாது. எனக்கு எதுவுமே தெரியவில்லையென முயற்சிக்காமல் இருக்ககூடாது. எந்த உயரத்துக்கு போனாலும் கற்றுக்கொள்ள தயாராக இருந்தீர்கள் என்றால், கற்றுத்தர உலகம் தயாராகத்தான் இருக்கிறது.

**உங்களிற்காக காத்திருக்கிறது சந்தை**

உங்களின் முன்னால் விரிந்துள்ள சந்தையில் என்னென்ன தொழில்கள் உள்ளன, அதில் உங்களிற்கு பொருத்தமானது எது என்பதை பார்ப்போம். முக்கியமான பிஸ்னஸ் கோட்பாடு ஒன்றை சொல்கிறோம் கவனித்துக் கொள்ளுங்கள். "சரியான தொழிலை தெரிவு செய்தாலே போதும், ஐம்பது சதவிகித வெற்றி நிச்சயமாகிவிடும்".

உற்பத்தி(Manufactruing), வர்த்தகம் (Trading), சேவை (Service) ஆகிய துறைகள் உள்ளன. பெரும்பாலான



அனைத்து பிஸ்னஸ்களும் இந்த மூன்று துறைக்குள்ளும்தான் அடக்கம்.

இயந்திரங்கள், உதிரிப்பாகங்கள், நுகர்வு பொருட்கள் உள்ளிட்டவை உற்பத்தி துறையிலும், ஹோட்டல், சுற்றுலா, மருத்துவம், ஓடிட்டிங், தொழில்நுட்ப சேவைகள், பாங்கிங் (banking) போன்றவை சேவைத்துறையிலும் உள்ளடங்கும்.

ஒருவரிடமிருந்து பொருட்களை வாங்கி இன்னொருவரிடம் விற்பது வர்த்தகத்தில் அடங்கும். அது நேரடியாகவோ, ஒன்லைன் மூலமாகவோ இருக்கலாம்.

**உற்பத்திதுறை**

இந்த துறையில் பெரும் வாய்ப்புக்கள் உள்ளன. நமது நாட்டில் பெரும்பாலான பொருட்கள் இறக்குமதிதான். இறக்குமதி நாடாக இருப்பது நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும் பாதிக்கிறது.


இந்த துறையில் பிஸ்னஸ் செய்ய விரும்பினால், விவசாயமோ, இயந்திரமோ எந்த பொருளை உற்பத்தி செய்ய விரும்புகிறீர்களோ, அந்த பொருள், உற்பத்தி செய்யும் தொழில்நுட்பம், உபகரணங்களை கையாளும் அறிவு அவசியம். அல்லது அந்த அறிவுடையவர்களை வேலைக்கு வைத்திருக்குமளவிற்கு கையில் மூலதனம் இருக்க வேண்டும்.

பொருளை உற்பத்தி செய்தால், அதை யாரும் தேடி வந்து வாங்கமாட்டார்கள். யாருக்காக அதை உற்பத்தி செய்தீர்களோ, அவர்களை தேடி நீங்கள்தான் போக வேண்டும். வாடிக்கையாளர்களை கண்டுபிடிப்பதும், அவர்களிடம் உங்கள் தயாரிப்புக்களை விற்பதும் ஒரு கலை. அதை பற்றி பின்னர் பார்ப்போம்.

விவசாயம் தனித்துறையாக இருந்தாலும், அதையும் உற்பத்திதுறையாக பார்க்கலாம். விவசாயம் இப்பொழுது கோர்ப்பரேட் பிஸ்னஸாக உருவெடுக்க ஆரம்பித்துவிட்டது.

**வர்த்தகம்**

பிஸ்னஸ் என்றாலே வர்த்தகத்தைதான்



பெரும்பாலானவர்கள் நினைக்கிறார்கள். உற்பத்தியாளர்களிடம் பொருளை வாங்கி, வாடிக்கையாளரிடம் விற்பதுதான் வேலை. எளிதாகவும், இலாபம் தருவதாகவும் இருப்பதால் பலரும் இதில்தான் ஆர்வமாக உள்ளனர். கையில் கொஞ்ச பணமும், வாடிக்கையாளரை பிடிக்க முயற்சியும் இருந்தால் போதும். தற்போது வரவேற்பு பெறும் ஒன்லைன் வர்த்தகத்திலும் நல்ல வாய்ப்புண்டு.

**சேவைத்துறை**

தொழில்நுட்ப வளர்ச்சி, வாழ்க்கைமுறை மாற்றத்தாலும் மிக விரைவாக பணம் சம்பாதிக்கும் வழிகள் இந்த துறையில் உள்ளது. உற்பத்தியாளர்களிற்கும் வாடிக்கையாளர்களிற்குமிடையில் பாலமாக இருப்பதே சேவைத்துறை.

சேவைத்துறையில் பலவகை பிஸ்னஸ்கள் உள்ளன. தற்போது ஸ்மார்ட் போன், இணைய பயன்பாடு அதிகரித்துள்ளதால் சேவைத்துறையில் பிஸ்னஸ் செய்வோரின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துவிட்டது. இதில் ஒருவராக நீங்களும் மாற விரும்பினால் ஸ்மார்ட் போன், இணையம், அப் (app) பயன்பாடுகள் பற்றி தெரிந்திருக்க வேண்டும். இதில் வாடிக்கையாளரின் மனநிலை அடிக்கடி மாறிக்கொண்டிருக்கும். அதற்கு ஈடு கொடுக்க வேண்டும்.

**நம்மைப்பற்றி நாமே!**

இந்த விசயங்களில் நீங்கள் முன்னுக்கு வர வேண்டுமெனில், அடிபட்டு அடிப்பட்டுகற்றுக்கொள்ள சிலவருடங்கள் ஆகும். இந்த சில வருடங்களை, சில மாதங்களாக மாற்ற ஒரு வழியிருக்கிறது. அதாவது, உங்களை போல முயற்சியை ஆரம்பித்து இன்று வெற்றிக்கொடி நாட்டியுள்ளவர்களின் அனுபவங்களை நீங்கள் அறிந்து கொள்வது, தொழில் சூட்சுமங்களை அறிந்துகொள்ள உதவும்.

யாரிடமிருந்தும் கற்றுக்கொள்ள நாம் தயங்ககூடாது. அதேநேரம், உங்களை பற்றியும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அதெப்படி "நம்மை பற்றி நாமே தெரிந்து கொள்வது?" என குழம்பாதீர்கள். உங்கள் பலம் என்ன? பலவீனம் என்ன? திறமை என்ன? அதை பிஸ்னஸிற்கு எப்படி பயன்படுத்துவது? இதையெல்லாம் அடுத்த வாரம், ஒரு சோதனை பயிற்சியுடன் பார்க்கலாம். **(தொடரும்)**

7-ம் பக்க தொடர்ச்சி...

ஏற்பட்டது. புலிகளின் உயர்மட்ட தலைவர்களின் இருப்பிடங்களும் தாக்குதலிற்கு இலக்கானது. பிரபாகரனை குறிவைத்து இரண்டு தடவைகளும், பொட்டம்மானை குறிவைத்து ஒரு தடவையும் விமானத்தாக்குதல்கள் நடந்தன.

ஒருமுறை மிக் விமானங்கள் தாக்குதல் நடத்தியபோது அந்த முகாமில் பிரபாகரனும் இருந்தார்!

இன்னொரு தாக்குதலில் மனைவி மதிவதனி, கடைசி மகன் பாலச்சந்திரன் சிக்கினார்கள். அதிர்ஸ்டவசமாக இரண்டு தாக்குதலிலும் அவர்கள் தப்பித்தார்கள். பொட்டம்மானின் மீது தாக்குதல் நடத்தப்பட்டபோது, அவர் திடீரென வெளியில் சென்றதால் தப்பித்து கொண்டார். முகாம் முற்றாக அழிந்ததுடன், பல போராளிகள் மரணமானார்கள்.

இந்த தாக்குதல்கள் பொதுவான இலக்குகள் மீதான தாக்குதல் அல்ல, யார் மீது தாக்குதல் நடத்துகிறோம் என்பதை விமானப்படை தெரிந்து கொண்டே தாக்குதல் நடத்தியது என்பதுதான் புலிகளை அதிர்ச்சியடைய வைத்தது. பின்னர்தான் புலிகள் சுதாகரித்து விசயத்தை ஊகித்து பிடித்தனர். அமெரிக்க நிறுவனத்தின் செய்மதி தொலைபேசியில் இருந்தது விசயம்!

பெருந்தொகையில் செய்மதி தொலைபேசிகள் ஒரு தடவையில் விற்பனையானது அந்த அமெரிக்க நிறுவனத்திற்கு சந்தேகத்தை ஏற்படுத்த, அவர்கள் அந்த தொலைபேசிகளில் இருந்து மேற்கொள்ளப்பட்ட உரையாடல்களை Track பண்ண ஆரம்பித்தார்கள். அப்பொழுதுதான் புலிகளின் பாவனையில் தமது தொலைபேசிகள் இருந்தது அந்த நிறுவனத்திற்கு தெரிய வந்தது. இந்த தகவல் அமெரிக்கா உளவுப்பிரிவான சி.ஐ.ஏக்கு சென்றது. புலிகளின் முன்னாள் சர்வதேச நெற்வேர்க்கில் இருந்தவர்களின் ஒரு பகுதியினரை கையாளும் சி.ஐ.ஏ குழுவிற்கு இந்த விடயம் அனுப்பப்பட,



தொலைபேசிகளை யார் பாவிக்கிறார்கள், பாவிக்கப்படும் லொக்கேஷன் போன்ற விபரங்கள் கொழும்பிற்கு வந்தன!

இதற்கு பின்னர்தான் அந்த தொலைபேசிகளை தவிர்த்துவிட்டுதுரையா (thuraya) வகையை பாவிக்க தொடங்கினார்கள்.

சரி, இப்பொழுது விசயத்திற்குவருவோம். இந்தியாவுடன் ஒரு சமரச முயற்சியை மேற்கொள்ள கனிமொழியை அணுக நடேசன் முடிவெடுத்தார். அமெரிக்க பல்கலைகழக பேராசிரியர் ஒருவர் மூலமாக அந்த தொடர்பு கிடைத்ததென்பதை ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். அப்பொழுது மத்தியில் ஆட்சி செய்த காங்கிரசின் பங்காளியாக தி.மு.க இருந்தது.

"எப்படியாவது யுத்தத்தை நிறுத்த வேண்டும். மக்கள் செத்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழ் மக்களின் அழிவை தடுக்க வேண்டிய பொறுப்பு இந்தியாவிற்கும் உள்ளது. மக்களின் உயிரிழப்பை தடுப்பதற்கு உடனடியாக யுத்த நிறுத்தம் அமுல்செய்யப்படுவதுதான் ஒரேவழி. யுத்த நிறுத்தம் செய்ய புலிகள் தயாராக இருக்கிறார்கள். இலங்கை விடாப்பிடியாக இருந்தாலும், அதை வழிக்கு கொண்டுவர இந்தியாவால் முடியும். சில எதிர்பாராத விட்டுக்கொடுப்புக்களிற்கும் நாம் தயாராக இருக்கிறோம்"

இதுதான் கனிமொழிக்கு முதன்முதலாக வாய்மொழியாக கொடுக்கப்பட்ட செய்தி.


கனிமொழி நிஜமாகவே புலிகளிற்கு உதவ வேண்டுமென நினைத்தாரா என்பதை நம்மால் இன்றுவரை உறுதியாக சொல்ல தெரியவில்லை. கனிமொழி இதை பற்றி வாய்திறந்தால்தான் அதை தெரிந்து கொள்ளலாம். ஆனால் நடேசனுடன் முதன்முதலில் தொலைபேசிய பின்னர், உடனடியாக டி.ஆர்.பாலுவுடன் தீவிரமாக ஆலோசனை செய்தார். தி.மு.கவை சேர்ந்த டி.ஆர்.பாலுவும் அப்போது மத்திய அமைச்சரவையில் கபினெற் அமைச்சராக இருந்தார். அப்போதைய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அன்ரனியும், டி.ஆர்.பாலுவும் கூட்டாக கேரளாவில் வர்த்தக பங்காளிகளாக இருந்தனர். இது கனிமொழிக்கும் தெரியும். அதனால்தான் பாலுவுடன் இதைப்பற்றி பேசினார்.

டி.ஆர்.பாலுவும் பாதகாப்பு அமைச்சர் ஏ.கே.அன்ரனியை சந்தித்து பேசினார். ஆனால் ஆரம்பத்திலேயே அன்ரனி இதில் தயங்கினார். காரணம், அன்ரனி மத்திய அரசில் அவ்வளவு செல்வாக்கானவர் கிடையாது. சிரேஷ்ட தலைவர் என்ற போதும் decision maker ஆக இருக்கவில்லை. அது ஏ.கே.அன்ரனிக்கும் தெரியும். ஆனால், காங்கிரஸ் தலைமையுடன் பேசிப்பார்த்து விட்டு சொல்கிறேன் என்றிருக்கிறார். அவர் பேசினாரா இல்லையா என்பது யாருக்கும் தெரியாது. ஒருவாரத்தின் பின்னர், காங்கிரஸ் தலைமை யுத்த நிறுத்தத்திற்கு தயாராக இல்லை என்ற செய்தியை டி.ஆர்.பாலு மூலமாக கனிமொழிக்கு அறிவித்தார்.

இதற்கு பின்னர்தான் ப.சிதம்பரத்தை கனிமொழி அணுகினார். ப.சிதம்பரம் ஒரு decision maker ஆக இருந்தார். ஏற்கனவே மலேசிய வர்த்தகர் மூலம் புலிகளிற்கும் சிதம்பரத்திற்குமிடையில் indirect தொடர்பொன்று ஏற்பட்டிருந்தது. கனிமொழி தொடர்புகொண்டபோது, இது சிதம்பரத்திற்கு புதிய விசயமாக இருக்கவில்லை. காங்கிரஸ் உயர்மட்டத்தில் அவர் இதைப்பற்றி முன்னரே பேசியிருக்க வேண்டும். இந்த பேச்சில் நேரடியாக ஈடுபவதில் கனிமொழி ஏதோ அசௌகரியத்தை உணர்ந்திருக்க வேண்டும். நாம் முன்னர் குறிப்பிட்ட அமெரிக்க பேராசிரியர் (கனிமொழியின் நண்பர். நடேசன் கனிமொழி தொடர்பை ஏற்படுத்தியவர்) சிதம்பரத்துடன் பேசும் ஏற்பாட்டை செய்து கொடுத்தார்.

அந்த அமெரிக்க பேராசிரியர் ஊடாக சிதம்பரம் புலிகளிற்கு அனுப்பிய முதலாவது தகவல் "மக்கள் கொல்லப்படுகிறார்கள். புலிகளும் நெருக்கடியை சந்திக்கிறார்கள். இந்த சமயத்தில் நாம் (இந்தியா) தலையிடுவதென்றால் சில விசயங்களில் தெளிவான அபிப்பிராயத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். நீங்கள் (புலிகள்) தனிஈழக் கோரிக்கையை வைத்திருக்கும் வரை இந்தியாவால் உங்களிற்கு உதவ முடியாது. நீங்கள் தனிஈழ கோரிக்கையை கைவிட தயாரா?" என்பதே.

**(தொடரும்)**



# பெண்களை தெய்வமாக மதித்தவர்!



எம்.ஜி.ஆர் 100
நெடுந்தொடர் 87



ஸ்ரீதர் சுவாமிநாதன்

**எம்.ஜி.ஆர்.** பெண்களை தெய்வமாக மதிப்பவர். பொதுக்கூட்டங்களில் பேசும்போது, "என்னை வாழ வைக்கும் தெய்வங்களான தாய்மார்களே...' என்று குறிப்பிட்டுவிட்டுத்தான் பேசத் தொடங்குவார். கூட்டங்களில் அவரை நாடி உதவி கோரும் பெண்களுக்கு உதவிகள் செய்வதுடன், பெண்களின் பாதுகாப்பிலும் மிகுந்த அக்கறை செலுத்துவார்.

நாகை மாவட்டம் மாயவரத்தில் எம்.ஜி.ஆர் கலந்துகொண்ட ஒரு பொதுக்கூட்டம். அவரது ஆட்சியில்தான் 1982ம் ஆண்டு மாயவரத்தின் பெயர் மயிலாடுதுறை என்று மாற்றப்பட்டது. இந்த சம்பவம் நடக்கும்போது அந்த ஊர் மாயவரம் என்றுதான் அழைக்கப்பட்டது. எம்.ஜி.ஆரைப் பார்த்து உதவி கோர, இரண்டு இளம் பெண்கள் மிகுந்த சிரமத்துடன் மேடை அருகே வந்து காத்திருந்தனர். அவர்கள் இரட்டையர்கள். ஒரே மாதிரி தோற்றம் கொண்டவர்கள். இதில் கொடுமை என்னவென்றால், இருவரும் ஒரே மாதிரி குறை உடைய மாற்றுத் திறனாளிகள்.

இரு பெண்களுக்கும் கால் ஊனம். கைகளை ஊன்றி தவழ்ந்தபடியே, மேடை அருகே வந்துவிட்டனர். மக்களின் வாழ்த்துக்களை ஏற்றவாறு, கையசைத்தபடியே மேடைக்கு எம்.ஜி.ஆர் வந்தார். கூட்டம் முண்டியடித்து மேடை அருகே வர முயற்சித்தது. அந்த நெரிசலில் இரு பெண்களும் சிக்கிக் கொண்டனர். இதை எம்.ஜி.ஆர் கவனித்துவிட்டார். உதவியாளர்களிடம் சொல்லி அவர்களை அழைத்துவரச் சொன்னார். அந்தப் பெண்கள் இருவரும் எம்.ஜி.ஆரிடம், "ஐயா, உங்களிடம் உதவி கோர வந்திருக்கிறோம்" என்றனர். அவர்களை மேடையின் ஓரத்தில் காத்திருக்கச் சொன்னார்.

கூட்டத்தில் பேசி முடித்ததும் அந்த சகோதரிகளை எம்.ஜி.ஆர் அழைத்தார். அவர்களது நிலைகண்டு பரிதாபப்பட்டு, "உங்களுக்கு என்ன உதவி வேண்டும்? சொல்லுங்கள்" என்றார். அந்தப் பெண்கள், "ஐயா, வறுமையால் கஷ்டப்படுகிறோம். எங்களுக்குத் தையல் மெஷின் வாங்கிக் கொடுத்தால் நாங்க தொழில் செஞ்சு பிழைச்சுக்குவோம். அதுக்கு உதவி பண்ணுங்க" என்று கெஞ்சும் குரலில் கேட்டனர். உடனே, இரண்டு தையல் மெஷின்களை எம்.ஜி.ஆர் வாங்கி வரச் சொன்னார்.

தன்னிடம் உதவி கோருபவர்கள் தெளிவாகச் சொல்லாவிட்டாலும் அவர்களது தேவை என்ன என்பதை சரியாகப் புரிந்துகொண்டு உதவுபவர் எம்.ஜி.ஆர்! தையல் மெஷின்கள் வாங்கி வருமாறு சொன்ன மறுவிநாடி ஓடோடிச் சென்ற உதவியாளர்களை அழைத்து, "காலில் தைக்கும் மெஷின் இல்லை. கையில் தைக்கும் மெஷின்" என்று தெளிவாகச் சொல்லி அனுப்பினார். அடுத்த அரை மணி நேரத்தில் இரண்டு புது தையல் மெஷின்கள் காரில் வந்து இறங்கின. அதுவரை காத்திருந்து தன் கையாலேயே அந்தப் பெண்களுக்கு தையல் மெஷின்களை எம்.ஜி.ஆர் வழங்கினார்.

அதைப் பெற்றுக்கொண்ட சகோதரிகள் இருவரும் கண்ணீருடன், "ஐயா, நீங்க தெய்வம்யா" என்றனர். அவர்களது கண்ணீரைத் துடைத்த எம்.ஜி.ஆர், "நான் மனுஷன்தாம்மா; தெய்வம் இல்லே. இந்த நிலைமையிலும் உழைச்சுப் பிழைக்கணும்னு நினைக்கிற நீங்க நல்லா இருக்கணும்!" என்று சொல்லி வாழ்த்திவிட்டு, அவர்களுக்கு தலா ரூ.2,000 அன்பளிப்பாகக் கொடுத்தார்!

திமுகவில் எம்.ஜி.ஆர் இருந்த காலம். அவரது நெருங்கிய நண்பரும் படத் தயாரிப்பாளருமான சாண்டோ சின்னப்பா தேவரின் இல்லத் திருமணம் கோவையில் நடைபெற்றது. அதில் எம்.ஜி.ஆர் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தி பரிசளித்துவிட்டு வந்தார். பின்னர், ஒரு கூட்டத்திலும் கலந்துகொண்டார். பேசிக் கொண்டிருக்கும்போதே, திடீரென தனது உதவியாளர்களைப் பார்த்தார். கூட்டத்தில் குறிப்பிட்ட இடத்தைப் பார்த்துவிட்டு, உதவியாளர்களை மீண்டும் பார்த்தார். எம்.ஜி.ஆருடைய பார்வையின் பொருள் அவர்களுக்குப் புரியும். சத்தம் போடாமல் கூட்டத்தில் மக்களோடு கலந்த உதவியாளர்கள், குறிப்பிட்ட இடத்துக்குச் சென்றனர். அங்கிருந்த ஒரு வாலிபரைப் பிடித்தனர். அங்கேயே அந்த வாலிபரை நிறுத்தி வைக்குமாறு எம்.ஜி.ஆர் சைகை செய்தார்.

கூட்டம் முடிந்த பின், அந்த வாலிபரை உதவியாளர்கள் அழைத்து வந்தனர். "கூட்டத்திலே வந்து அசிங்கமா பண்றே? உன்னோடு அக்கா, தங்கைகள் பிறக்கலையா?" என்று கேட்டவாறே வாலிபரை ஓங்கி கன்னத்தில் அறைந்தார் எம்.ஜி.ஆர்! பொறி கலங்கிப் போய் நின்ற வாலிபரிடம் "இனிமேல் இப்படி நடப்பியா?" என்று ஆத்திரம் பொங்கக் கேட்டார். "சத்தியமா இனி இப்படி நடந்துக்க மாட்டேன். என்னை மன்னிச்சுடுங்க" என்று கெஞ்சிய வாலிபரிடம், "இனிமே என் கூட்டம் எங்கு நடந்தாலும் உன்னை நான் பார்க்கக் கூடாது. ஓடு இங்கிருந்து..." என்று விரட்டினார். விட்டால் போதும் என்று வாலிபர் ஓடி மறைந்தார்.

விஷயம் என்னவென்றால், கூட்டத்தில் அந்த வாலிபர் தன் அருகே நின்று கொண்டிருந்த பெண்ணிடம் சில்மிஷம் செய்திருக்கிறார். எம்.ஜி.ஆரின் பார்வையிலிருந்துதான் எதுவும் தப்பாதே. அதை கவனித்துவிட்டு அந்த வாலிபரை பிடிக்கச் சொல்லி புத்தி புகட்டியிருக்கிறார்!

எம்.ஜி.ஆர், ஜெயலலிதா நடித்து 1967ம் ஆண்டு வெளியாகி அமோக வெற்றிபெற்ற படம் 'காவல்காரன்'. அதில் எம்.ஜி.ஆருக்கு ரகசிய போலீஸ் அதிகாரி பாத்திரம். அவரது பணி குறித்து யாருக்கும் தெரியாது. அவரது நடவடிக்கைகள் ஊகிக்க முடியாதபடி இருப்பதைக் கண்டு ஜெயலலிதா, "ஆமா, நீங்க யாரு?" என்று கேட்பார். அப்போது, எம்.ஜி.ஆர் தனக்கே உரிய ஸ்டைலில் பாடி நடிக்கும் அருமையான பாடல் இது...

'அடங்கொப்புரானே சத்தியமா
நான் காவல்காரன்
நீ ஒப்புக் கொள்ள மறுத்தாலும்
நான் காவல்காரன்!'


தொடரும்...

## அகத்தித் தைலம்

ஒரு லிட்டர் அகத்திக்கீரைச் சாறுடன் 1 லிட்டர் நல்லெண்ணெய் கலந்து கொதிக்க வைக்க வேண்டும். கொதித்துச் சுண்டி, அடியில் படியும் வண்டல் மெழுகு பதத்துக்கு வரும்போது... கஸ்தூரி மஞ்சள், பூலாங்கிழங்கு, விலாமிச்சை வேர், சாம்பிராணி ஆகியவற்றை வகைக்கு 20 கிராம் சேர்த்து இடித்துத் தயாரித்த பொடியைத் தூவி வடித்து ஆற வைத்துக்கொள்ள வேண்டும். இதற்கு 'அகத்தித் தைலம்' என்று பெயர்.

இத்தைலத்தை வாரம் இருமுறையோ அல்லது ஒருமுறையோ தலைக்குத் தேய்த்து குளித்துவந்தால், பித்தத் தலைவலி குணமாவதோடு கண்கள் குளிர்ச்சி அடையும். அதிகமான தலைவலியுடன் மஞ்சள் நிறத்தில் வாந்தியும் வருவதுதான் பித்தத் தலைவலி. வாந்தி ஏற்பட்டவுடன் தலைவலி நீங்கிவிடும். இந்த நோயாளிகளுக்கு அகத்தித்தைலம் ஒரு நிரந்தரத் தீர்வு.

குடிபோதை அதிகமாகி அதிகப் பிதற்றலுடனும் ஆரவாரத்துடனும் காணப்படுபவர்களுக்கு இத்தைலத்தைத் தலைக்குப் பூசி, குடம் குடமாய்த் தண்ணீரை ஊற்றினால் போதை தணியும். குடியை விட்டு விலக நினைப்பவர்கள், இந்தத் தைலத்தை அடிக்கடி தலைக்குத் தேய்த்துக் குளித்து வந்தால் பலன் கிடைக்கும். குடியை விட்டவர்களும் இத்தைலத்தைத் தேய்த்து குளித்து வந்தால் கை, கால் நடுக்கம் குறையும்.



# 'பேலியோ டயட்' தொடங்கப் போறீங்களா?



இளமை மாறாமல், ஃபிட்னெஸுடன் இருக்க வேண்டும் என்பதே பெரும்பாலானோரின் விருப்பம். அதற்காக 'பேலியோ டயட்' உணவுப் பழக்கத்துக்குப் பலரும் மாறி வருகிறார்கள். ஆறு மாதத்துக்குள் ஒல்லியான உடலுக்கு மாற நினைத்து திடுதிப்பென பேலியோ டயட்டைத் தொடங்கும் முன், சில மருத்துவப் பரிசோதனைகளைச் செய்ய வேண்டியது அவசியம் என்கிறார்கள் நரம்பியல் நிபுணர்கள்.

பேலியோ டயட்டுக்கு மாறுவதற்கு முன்பாக, கொழுப்புப் பரிசோதனை, கல்லீரல் பரிசோதனை, சிறுநீரகப் பரிசோதனை, தைரோய்ட் பரிசோனை, இரும்புச்சத்துக் குறைபாடு இருக்கிறதா என்பதை அறியும் பரிசோதனை, ரத்தத்தில் இருக்கும் சர்க்கரையின் அளவு குறித்த பரிசோதனை என ஆறு வகையான பரிசோதனைகளைச் செய்வது நல்லது.

பேலியோ டயட்டை மேற்கொள்ளும் போது நாம் சில பிரச்சனைகளைச் சந்திக்க வேண்டியிருக்கும். இத்தனை நாள்களாக நாம் ஏற்றிருந்த உணவுப் பழக்கத்திலிருந்து மாறுபட்ட ஓர் உணவுமுறையை தேர்ந்தெடுப்பதால், சில பக்க விளைவுகளும் ஏற்படலாம்.

ஆரம்பத்தில் தலைவலி, களைப்பு போன்றவை இருக்கும். நீர்ச்சத்துள்ள உணவு வகைகளை அதிகமாக எடுத்துக்கொள்ள வேண்டும். தண்ணீரையும் வழக்கத்தைவிட அதிகமாகப் பருக வேண்டும். சில நாள்களுக்கு உடற்பயிற்சிகளைச் செய்யாமலிருப்பது நல்லது. ஒரு வாரத்துக்குள் இந்தப் பின்விளைவுகள் எல்லாம் மறைந்து இயல்பான நிலைக்கு நம்முடைய உடம்பு மாறிவிடும்.

**பேலியோ டயட்டில் இருப்பவர்கள் செய்யும் தவறுகள்...**

- மிக முக்கியமான தவறு, உடல் எடையைக் குறைக்கிறேன் என்று வயிற்றைப் பட்டினி போடக் கூடாது. வயிறு நிறையச் சாப்பிட வேண்டும்.
- குறைந்த கலோரி உள்ள உணவுகளை மட்டும் சாப்பிடுவது நல்லது.
- கொழுப்புச் சத்து நிறைந்த உணவு வகைகளைச் சாப்பிட தயங்கக் கூடாது. முட்டையின் மஞ்சள் கரு, இறைச்சி ஆகியவையே இந்த டயட்டில் முக்கியமான உணவு வகைகள்.
- மாதம் ஒருநாள் மட்டும் அரிசி உணவு வகைகள், பழங்கள் முதலியவற்றைச் சாப்பிடலாம். ஜங்க் ஃபுட்ஸ் மற்றும் இனிப்பு வகைகளைத் தவிர்க்க வேண்டும்.

**உடற்பயிற்சிகள் தேவை இல்லை**

சைக்கிளிங், ஓடுதல், ஜாகிங், வெளியில் விளையாடும் விளையாட்டுகள், பளுதூக்குதல் போன்ற கடும் பயிற்சிகளைச் செய்ய வேண்டிய அவசியமில்லை. நாம் ஏதாவது உடற் பயிற்சி செய்ய வேண்டுமே என்று நினைப்போம். ஆனால், சோம்பேறித்தனமும் நேரமின்மையும் நம்மை ரொம்பவே குற்ற உணர்வோடு இருக்கச் செய்யும். ஆனால், பேலியோ டயட்டில் இருப்பவர் கள் இதைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. தினசரி நடைப்பயிற்சி மட்டும் செய்தால் போதும்.

**பேலியோ மாதிரி டயட் சார்ட்:**

மூன்று வேளையும் வீட்டில் சமைத்த உணவை மட்டுமே சாப்பிட வேண்டும். சர்க்கரை, தேன், பேக்கரி பொருள்கள் ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும்.

**அசைவ டயட் சார்ட்:**

- மூன்று முட்டை ஓம்லெட் அல்லது முழு முட்டை. கட்டாயமாக மஞ்சள் கருவும் சேர்த்துச் சாப்பிட வேண்டும். தேவைப்பட்டால், நான்கு முட்டைகளைக்கூட உண்ணலாம். நெய் சேர்த்துச் சாப்பிடுவது நல்லது.
- 100 கிராம் பாதாம் அல்லது பிஸ்தா அல்லது வால்நட்ஸ். நெய்யில் வதக்கியோ ஊறவைத்தோ உண்ணலாம். காலிஃபிளவர் ரைஸ், சிக்கன் அல்லது மட்டன் சூப் பருகலாம்.
- வேகவைத்த அல்லது கிரில் செய்த சிக்கன், மட்டன், மீன் ஆகியவற்றைச் சேர்த்துக் கொள்ளலாம்.

**ஸ்நாக்ஸ்: தினமும் ஒரு கப் கொழுப்பு உள்ள பால் அல்லது 50 கிராம் கொழுப்பு உள்ள சீஸ்.**

**சைவ டயட் சார்ட்:**

- 100 கிராம் பாதாம் அல்லது பிஸ்தா அல்லது வால்நட்ஸ் அல்லது முந்திரி.
- காலிஃபிளவர் சாதத்துடன் (அரிசிச் சாதம் அல்ல) காய்கறி. காலிஃபிளவரை சிறு சிறு துண்டுகளாக நறுக்கி இட்லி பாத்திரத்தில் ஸ்டீம் செய்து எடுத்து, அரிசி போல் சாப்பிடலாம். காய்கறி சூப் ஏராளமாகப் பருகலாம். உடன் சிறிது தேங்காய் சேர்த்துக்கொள்ளலாம். வாரத்தில் ஒரு நாள் 40 கிராம் கைக்குத்தல் அல்லது குதிரைவாலி அரிசி எடுத்துக்கொள்ளலாம்.
- 200 கிராம் பனீர்.

**ஸ்நாக்ஸ்: ஒரு கப் முழுக் கொழுப்பு உள்ள பால் அல்லது தயிர். தினம் 100 கிராம் கீரை சேர்த்துக்கொள்ளவும்.**

**30 நாள் பேலியோ சவால்**
(30 Days Paleo Challenge)

இந்த முப்பது நாள்களும் கீழே தரப்பட்டுள்ள பொருள்களை மட்டுமே உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

செக்கில் ஆட்டிய தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், வெண்ணெய், நெய், தேங்காய், தயிர், சீஸ், கீரை, காலிஃபிளவர், புரோக்கோலி, பாதாம், பிஸ்தா, அவகேடோ, கொய்யா, பூண்டு, நாட்டுக்கோழி முட்டை, இறைச்சி, மீன், கடல் உணவுகள் மற்றும் கிரீன் டீ, மோர் ஆகியவற்றை மட்டுமே உண்ண வேண்டும். இதைத் தவிர்த்து வேறு எதையும் சாப்பிடவே கூடாது. இந்த டயட்டில், குளுக்கோஸுக்கு மாற்றாக கொழுப்பு அமிலங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

**தவிர்க்க வேண்டிய உணவுகள்:**


- காபி, டீ அருந்தக் கூடாது.
- எந்த வகைப் பழங்களும் பழச்சாறுகளும் உட்கொள்ளக் கூடாது.
- வெள்ளைச் சர்க்கரை, தேன், நாட்டுச் சர்க்கரை, வெல்லம், கருப்பட்டி, கரும்பு, மாத்திரைகள் என எந்த வகையிலும் இனிப்பு எடுத்துக்கொள்ளக் கூடாது.
- பிஸ்கட், கேக் போன்ற பேக்கரி உணவுகளோ, பரோட்டா, பிரெட், சப்பாத்தி போன்ற உணவுகளோ எடுத்துக்கொள்ளக் கூடாது.
- உடலுக்குத் தேவையான அளவு தண்ணீர் குடிக்க வேண்டும்.

# பிரெட் தோசை

*தேவையானவை:* பிரெட் துண்டுகள் 3, ரவை அரை கப், மைதா ஒரு டேபிள்ஸ்பூன், தயிர் கால் கப், சீரகம் கால் டீஸ்பூன், வெங்காயம், தக்காளி, பச்சை மிளகாய் தலா ஒன்று (பொடியாக நறுக்கவும்), நறுக்கிய கொத்தமல்லித்தழை ஒரு கைப்பிடி அளவு, எண்ணெய், உப்பு தேவையான அளவு.

*செய்முறை:* மிக்ஸியில் பிரெட் துண்டுகள், மைதா, ரவை சேர்த்து ஒருமுறை அடியுங்கள். பின்னர் அதில் தயிர் சேர்த்து அடியுங்கள். இந்தக் கலவையைப் பாத்திரத்தில் ஊற்றிச் சீரகம், உப்பு, கொத்தமல்லித்தழை, வெங்காயம், தக்காளி, பச்சை மிளகாய் சேர்த்து நன்கு கிளறவும் (தோசை மாவு பதத்துக்கு வர சிறிதளவு தயிரையும், தண்ணீரையும் சேர்த்துக்கொள்ளலாம்). தோசைக்கல்லைக் காயவைத்து, மாவைத் தோசையாக ஊற்றி, எண்ணெய்விட்டுச் சுட்டெடுக்கவும்.

இதற்குத் தேங்காய் சட்னியும் பொருத்தமான கூட்டு.



## கிச்சன் நோட்ஸ்

கரட்டைத் தோல் சீவி, ஐந்து நிமிடங்கள் தண்ணீரில் போட்டு ஊற வைக்கவும். பிறகு, எடுத்துத் துருவினால் கரட் மிருதுவாகி, எளிதாகத் துருவ வரும்.

அப்பிள் மிகவும் புளிப்பாக இருந்தால், நறுக்கி உப்பு, மிளகாய்ப் பொடி, வெந்தயப் பொடி, பெருங்காயப் பொடி கலந்து தாளித்துக் கொட்டினால், புதுமையான ஊறுகாய் தயார்.

பூண்டு, வெங்காயம் ஆகியவற்றை அதிக அளவில் உரிக்க வேண்டி இருந்தால், கொதிக்கும் நீரில் அவற்றைப் போட்டு, உடனே எடுத்து குளிர்ந்த நீரில் போடவும். பிறகு எடுத்து உரித்தால், சுலபமாக வரும்.

எலுமிச்சைச் சாறு மற்றும் தண்ணீரை ஒரு பவுலில் கலந்து கொள்ளுங்கள். ஃப்ரூட் சாலட் செய்யும் போது, பழங்களை நறுக்கிய உடனே இந்தக் கலவையில் நனைத்து எடுத்தால், பழங்கள் நீண்ட நேரத்துக்குக் கருக்காமல் இருக்கும்.

நட்ஸ், பருப்பு வகைகள், ரவை போன்றவற்றை வேக வைப்பதற்கு முன், பச்சை வாசனை போகும் வரை, பொன்னிறமாக வறுத்தெடுத்த பிறகு வேக வைத்தால், உணவு ருசியாகவும் மணமாகவும் இருக்கும்.

சட்னி பவுடர் தயாரிக்க.. உடைத்தக் கடலை, பச்சைமிளகாய், தேங்காய், உப்பு, புளி போன்றவற்றை மிக்ஸியில் போட்டு பவுடராக அரைத்தெடுத்து, ஒரு டப்பாவில் போட்டு ஃப்ரிட்ஜில் வைத்துவிட்டால், தேவைப்படும் நேரங்களில் அந்த பவுடரை எடுத்து தேவையான அளவு தண்ணீர் சேர்த்துக் கலக்கினால்.. சட்னி தயார். மின்சாரம் இல்லாத வேளைகளிலும் வெளியூருக்குச் செல்லும் போதும், இந்த பவுடர் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

## சமையலறை டிப்ஸ்

- தேங்காய் பர்ஃபி செய்யும்போது, சர்க்கரையை அப்படியே சேர்க்காமல், மிக்ஸியில் நன்றாகப் பொடி செய்து சேர்த்தால், பர்ஃபி சூப்பர் சுவையில் இருக்கும்.
- அடை தயாரிக்க பருப்புகளைச் சேர்ப்போம். அப்போது வெள்ளை உளுந்துக்குப் பதிலாக கறுப்பு உளுந்து பயன்படுத்தினால், அடை அசத்தலாக இருக்கும்.
- வாழைக்காயைச் சமையலில் பயன்படுத்தும்போது மிளகு, சீரகம் அதிகமாகச் சேர்த்துக் கொண்டால் வாய்வுத்தொல்லை ஏற்படாது.
- கேரட்டை வேகவைக்கும் போது ஒரிரு சிட்டிகை சர்க்கரை சேர்த்தால், தனிச் சுவையும் மணமும் கிடைக்கும்.
- கோதுமை மாவு அரைக்கும் போது அதனுடன் சிறிதளவு சோயா பீன்ஸையும் சேர்த்து அரைத்தால், அந்த மாவில் செய்யும் சப்பாத்தி கூடுதல் சுவையுடன் இருப்பதோடு, ஊட்டச் சத்தும் அதிகமாக கிடைக்கும்.

## சினி கிசுகிசு

- சரித்திரப் படங்களில் நடிக்க பால் நடிகைக்கு வாய்ப்பு கிடைத்தது. ஆனால், படப்பிடிப்பு தொடங்க தாமதமானதால் இந்தப் படத்தில் இருந்து நடிகை விலகியிருந்தார். இந்த கதாபாத்திரத்தில் யார் நடிக்க வைக்கலாம் என்று படக்குழுவினர் தேடும்போது, பிரியமான நடிகை தூது அனுப்பி பட வாய்ப்பை பெற்றிருக்கிறாராம். பால் நடிகை எப்போது இந்த படத்தில் இருந்து விலகுவார். இதில் நடிக்கலாம் என்று காத்திருந்த பிரியமான நடிகை, தற்போது ரொம்ப குஷியில் இருக்கிறாராம்.
- முன்னணி ஹீரோக்களுடன் நடித்த அந்த மும்பை வரவு தாச நடிகை, காமெடி புயலுக்கு ஜோடியாக நடித்த பிறகு கோலிவுட்டில் காணாமல் போனார். பிறகு அவருக்கு சின்னத்திரை கைகொடுத்தது. இந்நிலையில், பாலியல் தொழிலாளியாக ஒரு தமிழ்ப் படத்தில் நடித்து வருகிறார். இதையறிந்த சில இயக்குனர்கள், அதே கேரக்டரில் தங்கள் படத்திலும் நடிக்க வேண்டும் என்று கதை சொல்கிறார்களாம். இதனால் வெறுத்துப்போன நடிகை, சின்னத்திரையே போதும் என்ற முடிவுக்கு வந்துவிட்டதாகச் சொல்கிறார்கள்.
- பல படங்களில் நடித்தாலும், ஒரு பாடலுக்கு நடனமாடினாலும், மஸ்காரா போட்ட பிறகுதான் மிகவும் பிரபலமானாராம் அந்த நடன அழகி. தொடர்ந்து பல படங்களில் நடனம் ஆடி வருகிறாராம். இவருக்கும் துணை நடிகர் ஒருவருக்கும் காதல் ஏற்பட்டிருக்கிறதாம். இருவரும் அடிக்கடி வெளியில் சந்தித்து ஊர் சுற்றுகிறார்களாம். விரைவில் திருமணம் செய்யவும் திட்டமிட்டிருக்கிறார்களாம். நடன அழகிக்கு தற்போது பல படங்களில் வாய்ப்பு வரும் நிலையில், இப்படி சுற்றுவது நியாயமா? என்று பலரும் பேசி வருகிறார்களாம்.
- திருமண அறிவிப்பு வரை பல படங்களில் நடித்து வந்த காத்தாடி நடிகை, திருமணம் நெருங்க நெருங்க வேறு அவதாரம் எடுத்து கவர்ச்சி அவதாரம் எடுத்தார். மேலும் இதற்காக போட்டோ ஷூட் நடத்தப்பட்டதாம். இதனால் அவரது புகுந்த வீடு தர்ம சங்கடமானதாம். தந்தை மகனை அழைத்து கண்டிக்க, கணவர் தேனிலவு முடிந்ததும் மனைவியிடம் இதுபற்றி பேசினாராம். அப்போது நடிகை 'இனி கவர்ச்சியாக நடிக்க மாட்டேன்' என்று சத்தியம் செய்திருக்கிறாராம். இதனால்தான் நடிகை தொடர்ந்து நடிக்க க்ரீன் சிக்னல் கிடைத்திருக்கிறதாம்.

### ஷூட்டிங் ஸ்பொட்



இரும்புத்திரை

செயல்



## சின்னத்திரை

### சீரியலில் நடிக்க நிர்வாண படம் கேட்ட அதிகாரி!

வம்சம், மரகதவீணை சீரியல்களில் நடித்து வருகிறார் திவ்யா. முன்னர் சமையல் மந்திரம் நிகழ்ச்சி மூலம் இளசுகளை சுண்டி இழுத்தவர். அவர் தனக்கு நேர்ந்த அதிர்ச்சி அனுபவம் ஒன்றை வெளியிட்டுள்ளார். முதல்முறை சீரியலுக்கு நடிக்க போன சமயத்தில், முதல்நாள் சூட்டிங் முடிந்தபோது, சீரியல் அதிகாரியொருவர் அழைத்திருக்கிறார். அரைகுறை ஆடையிலும், நிர்வாணமாகவும் படம் எடுத்து இரவு தனக்கு அனுப்புமாறு கூறியுள்ளார். இதைகேட்டு கோபமடைந்து அவரை திட்ட, இறுதியில் மன்னிப்பு கேட்டார் அந்த அதிகாரி என குறிப்பிட்டுள்ளார். நடிகைகளிற்கு படப்பிடிப்பில் சிக்கல்கள் வந்தாலும், துணிந்து எதிர்க்க வேண்டுமென்றும் ஆலோசனை கூறியுள்ளார்.

### இனி டிஸ்கவரி களைகட்டும்!

டிஸ்கவரி சனலில் மேன் வெர்சஸ் வைல்ட் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கவுள்ளார் சன்னி லியோன். இதுவரை சினிமா, விளம்பரம், ரியாலிட்டி ஷோ என கலக்கி வந்த சன்னி, டிஸ்கவரிக்குள்ளும் களமிறங்குகிறார். இந்த நிகழ்ச்சி மூலம் தான் இன்னும் புகழடையலாமென்று சன்னி கூறியிருக்கிறார். மேன் வெர்சஸ் வைல்ட் பார்க்கிறார்களோ இல்லையோ, சன்னி பார்க்க கூட்டம் கூடுமென டிஸ்கவரி உறுதியாக நம்புகிறதாம். அதற்கேற்ற விதத்தில் சன்னியை ஒவ்வொரு நாளும் காண்பிக்கவுள்ளார்களாம்.

### அழகு சீரியலில் மாற்றம் வரும்!

சன் டிவியின் அழகு சீரியலில் சுதா கரக்டரில் நடிக்கிறார் ஸ்ருதி ராஜ். அபூர்வராகங்கள் சீரியலில் நாயகியாக நடிக்கிறார். அழகு சீரியல் இப்பொழுதுதான் ஆரம்பித்துள்ளது. ஸ்ருதி இடையிடையே வந்து போகும் காட்சிகள்தான் இப்போதைக்கு உள்ளதாம். போகப்போகத்தான் சீரியல் முழுக்க வருகிறாராம். சீரியலில் பெரிய மாற்றத்தை அவரது பாத்திரம்தான் உண்டாக்கும் என்கிறார். முதலில் சினிமாவில் நடித்து, அதில் ரீச் ஆக முடியாமல் போன பின்னர் சீரியலுக்கு வந்தவர். தென்றல் சீரியல் அவருக்கு பெரிய பிரேக் கொடுத்தது. இனி விரும்பினாலும் சீரியலை விட்டு வெளியேற முடியாது என்கிறார் ஸ்ருதி.

### சரஸ்வதிக்கு எப்பொழுது கல்யாணம்?

விஜய் டிவியில் தமிழ் கடவுள் முருகன் சீரியலில் சரஸ்வதியாக நடிப்பவர் அம்மு. பல வருடங்களாக சீரியல், சினிமாவில் நடித்து வருகிறார். பத்து வருடத்திற்கு மேல் நடிப்பில் இருக்கிறார். இன்னும் கல்யாணம் செய்துகொள்ளவில்லை. இதை பற்றி கேட்டால், சரியானவர் இன்னும் அமையவில்லை என சிரிக்கிறார். கல்யாணம் செய்ய வேண்டுமென்பதற்காக ஒருவரை தேடிப்பிடிப்பதில் தனக்கு உடன்பாடு இல்லை, பொருத்தமானவரை கண்டுபிடிக்க வேண்டும் என்கிறார். அதற்காக காதல் கல்யாணம்தான் என்ற கொள்கையும் இல்லையாம். மந்திர புன்னகை படத்தில் சந்தானத்திற்கு ஜோடியாக நடித்திருந்தார். இப்பொழுது சந்தானத்தில் நிலைமையே மாறிவிட்டது. இதைப்பற்றி கேட்டால் "அப்பொழுது எப்படி பழகினாரோ, இப்போதும் அப்படியே பழகுகிறார்" என்றார்.

# வண்ணத் திரை



## சம்பளத்தை குறைத்த ஹன்சிகா!

தமிழில் கிட்டத்தட்ட காணாமல் போகும் நிலைக்கு வந்து விட்டார் ஹன்சிகா. குலேபகாவலி படத்தில் மட்டும்தான் நடித்து வருகிறார். அவரது உடல்எடைதான் பிரச்சனையாக இருக்கிறது என சிலர் சொன்ன ஆலோசனையை கேட்டு, வீட்டில் இருந்த நாட்களில் கடுமையான உடற்பயிற்சி செய்து மெலிந்துள்ளார். புதிய தோற்றத்தில் அசத்தலாக இருப்பதாக பலரும் கூறுகிறார்கள். இப்பொழுது அதர்வாவுடன் ஒரு படத்தில் ஒப்பந்தமாகியுள்ளார். தமிழில் ஹீரோயின்கள் அதிகரித்து கடுமையான போட்டி நிலவுவதால், தனது சம்பளத்தை வெகுவாக குறைத்துள்ளார் ஹன்சிகா. புதிய ஹீரோயின்களுடன் போட்டியிடுவதென்றால் விட்டுக்கொடுக்கத்தான் வேண்டுமென முடிவெடுத்து விட்டார்.

## சங்கரிற்கு கைகொடுக்குமா அரசியல்?

தொடர்ந்து கொமர்ஷியல் ஹிட் படங்களை கொடுத்து வந்த கே.எஸ்.ரவிக்குமாரின் மார்க்கெட், லிங்கா பட தோல்வியால் டல் அடித்தது. பின்னர் கன்னட நடிகர் சுதீப்பை வைத்து, முடிஞ் சா இவன பிடி என்ற படத்தை இயக்கினார். இதுவும் கைகொடுக்கவில்லை. இப்பொழுது தெலுங்கு நடிகர் பாலகிருஸ்ணாவை வைத்து ஜெயசிம்ஹா என்ற படத்தை இயக்கியுள்ளார். இதில் நயன்தாரா நாயகி. ஜனவரி 12ம் திகதி வெளியாகிறது. துபாயில் இறுதிக்கட்ட படப்பிடிப்புக்கள் நடந்தன. இதுவும் கொமர்ஷியல் மசாலா என்றபோதும், வெற்றிப்படம் கொடுக்க வேண்டிய அவசியத்தில் இருப்பதால் அரசியலும் கலந்திருக்கிறாராம். தெலுங்கில் அரசியல் கதைகளிற்கு வரவேற்பு கிடைக்குமென்ற நம்பிக்கையுடன் காத்திருக்கிறார்.

## இப்படித்தான் பெண் பார்க்கிறார் பிரபாஸ்!

பிரபாஸின் திருமணம் பாகுபலி 2 வெளியானதும் நடக்கும், அனுஷ்காவுடன் நடக்குமென்றெல்லாம் எதிர்வுகூறப்பட்டது. ஆனால் எதுவும் நடக்கவில்லை. இப்பொழுது சஹோ படத்தில் நடித்து வருகிறார் பிரபாஸ். தனது திருமணம் பற்றி அண்மையில் வெளிப்படையாக பேசியிருக்கிறார். "திருமணம் செய்துகொள்ள வேண்டுமென இன்னும் நான் முடிவெடுக்கவில்லை. எனக்கு அழகான பெண் வேண்டுமென்றும் விரும்பவில்லை. செயற்கைத்தனம் இல்லாத நல்லபெண்தான் வேண்டும். அப்படியொருவர் கிடைத்தால் உடனே திருமணம் செய்வேன்" என கூறியுள்ளார்.

## அதுல்யாவின் அந்த மாதிரி சீன்!

காதல் கண்கட்டுதே படத்தின் மூலம் சினிமாவில் என்ரியானவர் அதுல்யா. இதையடுத்து பல வாய்ப்புக்கள் அவருக்கு வரத் தொடங்கின. அவர் ஏமாலி படத்தைதான் அடுத்ததாக தேர்வுசெய்தார். இதன் ட்ரெயிலர் சமீபத்தில் வெளியானது. ட்ரெயிலரை பார்த்தவர்களிற்கு பயங்கர அதிர்ச்சி. அதுல்யா அதில் சிகரெட் பிடித்துக்கொண்டும், பயங்கர கவர்ச்சியாகவும் தோன்றுகிறார். முதல் படத்தில் ஹோம்லி நடிகையென பெயரெடுத்துவர், அடுத்த படத்தில் ஓவர் கவர்ச்சி காட்டுகிறார். மேலும் சிகரெட் விசயமும் பலத்த விமர்சனத்தை தோற்றுவித்துள்ளது. ஆனால் ஆதல்யாவோ, "அவசரப்பட்டு முடிவெடுக்காதீர்கள். எனது பாத்திரம் மிக வலுவானது. வெறும் கிளாமர் அல்ல. படத்தை பார்த்துவிட்டு விமர்சியுங்கள்" என்றுள்ளார்.

## ராஜமௌலியின் அடுத்த பட கதை இதுதான்!

ராஜமௌலி படம் என்றாலே இப்பொழுது பலத்த எதிர்பார்ப்பு இருக்கிறது. அவரது அடுத்த படம் என்னவென்பதுதான் பெரிய சஸ்பென்சாக இருக்கிறது. அது தெலுங்குப்படம் என்றும் ராம் சரண், ஜூனியர் என்.டி.ஆர் நடிக்கிறார்கள் என்றும் ஒரு தகவல் கசிந்தது. இப்பொழுது எப்படிப்பட்ட படம் என்ற தகவலும் லீக் ஆகியுள்ளது. அது பொக்ஸிங் சம்பந்தப்பட்ட கதையாம். இதற்காக பொங்ஸிங் போட்டிகளை பார்த்து வருகிறாராம் ராஜமௌலி.

## டாப் கியரில் ஷ்ரத்தா!

விக்ரம் வேதா, இவன் தந்திரன் படங்களில் நடித்த ஷரத்தா விரைவில் முன்னணி நடிகையாகிவிடுவார் என்கிறார்கள். டாப் கியரில் முன்னேறி வரும் அவரது வளர்ச்சி மற்ற கதாநாயகிகளிற்கு எரிச்சலையும் உண்டு பண்ணியிருக்கிறது. தற்போது விஷாலுடன் இரும்புத்திரை படத்தில் நடித்துள்ளார். அடுத்து உதயநிதி ஸ்டாலின் படத்தில் கமிட் ஆகியிருக்கிறார். தனுஷ், ஜெயம் ரவி படங்களில் பேச்சுவார்த்தை நடந்து வருகிறதாம்.

## ஸ்லிம்மான லட்சுமி மேனன்!

நடிகைகள் கொஞ்சம் குண்டானாலே போச்சு. இதற்கு உதாரணம் லட்சுமி மேனன். குண்டாவதை பற்றி கவலைப்படாமல் தொடர்ந்து நடித்து வந்தார். இறுதியில் படவாய்ப்புக்களே இல்லாமல் போனது. இந்த இடைவெளியில் புதிய நடிகைகள் அவரை கடந்து சென்றுவிட்டனர். உடற்பயிற்சி, யோகா டயட் என முயற்சி செய்தும், ஓரளவுதான் பலன் கிடைத்தது. இதனால் சமீபத்தில் கொழுப்பு நீக்க அறுவை சிகிச்சை செய்துள்ளார். இதன் பின்னர் நன்றாக உடல் இளைத்து, ஆளே மாறிவிட்டார். உடல் இளைத்தால் மட்டும் போதாது, கவர்ச்சியாகவும் நடித்தால் விட்ட இடத்தை பிடிக்கலாமென முணுமுணுக்கிறார்கள் கோலிவுட் குசும்பர்கள்.

## அடுத்த வருடமும் சேதுபதிதான் டாப்!

வருடத்தில் அரை டசின் படங்களிற்கு மேல் நடிக்கும் ஹீரோ யார் என்றால் அது விஜய் சேதுபதிதான். அடுத்த வருடமும் அவர் கைவசம் பத்து படங்கள் உள்ளன. ஒரு நல்லநாள் பார்த்து சொல்றேன் பொங்கலுக்கு ரிலீசாகிறது. அடுத்து விஜய் சேதுபதி மூன்று கெட்டப்பில் நடிக்கும் "96" ரிலீசாகிறது. த்ரிஷா ஹீரோயினாக நடிக்கிறார். பெப்ரவரியில் இது ரிலீசாகிறது. அதை தொடர்ந்து சூப்பர் டீலக்ஸ், சீதக்காதி, இடம் பொருள் ஏவல், சயீரா நரசிம்மரெட்டி, ஜூங்கா உள்ளிட்டவை ரிலீசாகின்றன.

## சந்தானம், சிவகார்த்திகேயன் போட்டி!

டிவியில் இருந்து தமிழ் சினிமாவிற்கு வந்தவர்களிற்கு முன்னர்தான் காலமில்லை. இதை மாற்றியவர்கள் சந்தானமும், சிவகார்த்திகேயனும். இதில் சுவாரஸ்யம் என்னவென்றால், இவர்கள் நடித்த படம் ஒரேநாளில் வெளியானதுதான். சந்தானத்தின் சக்க போடு போடு ராஜாவும், சிவகார்த்திகேயனின் வேலைக்காரனும் ஒரேநாளில் வெளியாகியுள்ளன. சிவகார்த்திகேயனின் வளர்ச்சி, சந்தானத்திற்கு பொறாமையைம உருவாக்கியுள்ளதாக ஒரு பேச்சுண்டு. இந்த நிலையில் ஒரேநாளில் இருவரது படங்களும் வெளியாவது திட்டமிட்டதா, அல்லது எதேச்சையானதா என்பது தெரியவில்லை.

## அஞ்சலிக்கு கல்யாணம் இல்லையாம்!

பரபரப்பிற்கு பஞ்சம் இல்லாமல் தினச்செய்தியாக இருந்து வந்த அஞ்சலி, இப்பொழுது கையில் அரை டசின் தமிழ், தெலுங்கு படத்துடன் பிஸியாக இருக்கிறார். தமிழில் பலூன் படம் விரைவில் வெளியாகவுள்ளது. உடல் எடையையும் குறைத்து அடுத்த ரவுண்டிற்கு தயாராகிவிட்டார். இப்போதைக்கு திருமணம் என்ற பேச்சிற்கு இடமில்லையென்பதையும் சொல்லிவிட்டார். அடுத்த வருடம் முழுவதும் கால்சீட் ஒதுக்கிவிட்டாராம். ஜெய் விவகாரத்தை பற்றி குறிப்பிடும்போது, அது நல்ல நட்பு, வேறொன்றும் இல்லையென கூறியுள்ளார்.

மருதன்

ஹிட்லருக்குப் படம் பார்க்கப் பிடிக்கும். வெறும் பொழுது போக்குச் சாதனமாக இல்லாமல், ஓர் அரசியல்

கருவியாகவும் திரைப்படத்தைப் பயன் படுத்தமுடியும் என்று அவர் நம்பினார். ஏப்ரல் 1941ல் ஜெர்மனியில் ஒருதிரைப்படம் வெளியிடப்பட்டது. அந்தப் படத்தைக் காண ஜெர்மானியர்கள் கும்பல் கும்பலாக அணிவகுத்துச் சென்று வரிசையில் நின்றனர். ஒருவர் பாக்கியில்லாமல் ஜெர்மானியர்கள் அனைவரும் இந்தப் படத்தைப் பார்க்கவேண்டும் என்பதுதான் ஹிட்லரின் விருப்பமும். அதனால்தான் அவருடைய நாஜிக்கட்சி இந்தத் திரையிடலுக்கு மிகுந்த ஆதரவை அளித்தது. தேசபக்திமிக்க குடிமகன்கள் இந்தப் படத்தைப் பார்ப்பது நல்லது என்று பிரசாரமும் செய்தது.

முழுப்படமும் அல்ல, அதன் இறுதிக்காட்சியே முக்கியமானது. அதில் பின்தங்கிய ஆபிரிக்காவை நல்வழிப்படுத்தி முன்னேற்றுவதற்காக அவர்கள் இத்தகைய தண்டனைகளை விதிக்கிறார்கள். பிரிட்டன் காலனிய அரசின் உன்னதமான நோக்கத்தைப் புரிந்துகொள்ளமுடியாமல் எதிர்த்தவர்கள்தாம் இந்தக் கைதிகள். எல்லாம் சரி, இந்தப் படத்தை ஹிட்லர் ஜெர்மனியில் திரையிட வேண்டிய அவசியம் என்ன? ஜெர்மானியக் குடி மகன்கள் இந்தப் படத்தைப் பார்க்க வேண்டும் என்று அவர் விரும்பியது ஏன்?


ஏனென்றால், இந்தப் படத்தின் இறுதிக் காட்சிகள் அனைத்தும் நடை பெறுவது வதைமுகாமில். ஹிட்லர் இதன் மூலம் தெரியப்படுத்த விரும்பிய செய்தி அழுத்தமானது. ஜெர்மனியிலும் இதே போன்ற வதைமுகாம்கள்தான் உருவாக்கப் படுகின்றன... யூதர்களை. அதுதான் வேறுபாடு.

பிரிட்டிஷ் காலனிய அரசு பலமிக்கதாக ஆக ஆப்பிரிக்காவை அடிமைப் படுத்தவேண்டியிருந்தது. போயர்களை அழிக்கவேண்டி யிருந்தது. அதேபோல் ஜெர்மனி ஒரு பெரும் சாம்ராஜ்ஜியமாக மாறவேண்டுமானால் நாமும் பிற நாடுகளை ஆக்கிரமிக்கவேண்டும். நாமும் பெருமளவில்எதிரிகளை அழிக்கவேண்டும். இது தவிர்க்க முடியாதது மட்டுமல்ல இதுவேதான் இயற்கை விதியும்கூட. யூதர்கள் பரவுவது நம் சுத்தமான ஆரிய இனத்துக்குக் கேடானது. நோய்களைப் பரப்பும் கொசுக்களை நாம் என்ன செய்யவேண்டும், சொல்லுங்கள்? பாவம் பறந்து போகட்டும் என்றா விட்டு வைப்போம்?

எதிரிகள் என்று அழுத்தந்திருத்தமாகப் பதிவு செய்ய விரும்பினார். கதாநாயகர்களாக வலம் வரும் நல்ல பிரிட்டிஷ் அதிகாரிகள் கெட்டவர்களைச் சுட்டுக்கொன்றபோது கை தட்டி மகிழ்ந்தீர்கள் அல்லவா, அப்படியே யூதர்களை நாஜிகள் சுட்டுக் கொல்லும்போதும் மகிழுங்கள்!

கவனிக்கவும், பிரிட்டனைக் குற்றம் சாட்டுவதல்ல ஹிட்லரின் நோக்கம். தன் செயலுக்கு நியாயம் கற்பிக்கவே அவர் பிரிட்டனைத் துணைக்கிழுத்தார். ஒருமுறை,இருமுறை அல்ல,தொடர்ச்சியாக ஹிட்லர் பிரிட்டனையும் போயர் வதைமுகாமையும் ஜெர்மானியர்களுக்கு நினைவூட்டிக்கொண்டே இருந்தார். இரண்டாம் உலகப் போர் வெடித்தபோது இந்தப் பிரசாரம் மேலும் தீவிரமடைந்தது.

# ஹிட்லரின் வதை முகாம்கள்







சிறைக் கைதிகள் பலர்

காட்டப்படுவார்கள். இந்தக் கைதிகள் பரிதாபகரமாக நலிந்தும் மெலிந்தும் இருப்பதைப் பார்க்கலாம். எதிர்காலம் குறித்த அச்சமும் தவிப்பும் அவர்களுடைய வாடி வதங்கிய முகங்களில் அப்பட்டமாகத் தெரிகின்றன. முதலில் ஒரு கைதியைப் பிடித்து இழுத்துவருகிறார்கள். கைது செய்யப்படுவதற்குமுன்பு அவன் ஒரு போர்வீரனாக இருந்தவன். அவனை இழுத்துவந்து தூக்கில் போடுகிறார்கள் அதிகாரிகள். அடுத்த காட்சியில் அவன் மனைவி சுட்டுக்கொல்லப்படுகிறார். இவர்களைத் தொடர்ந்து மற்ற கைதிகளும் ஒவ்வொருவராகக் கொல்லப்படுகிறார்கள்.

யார் இந்தக் கைதிகள்? எதற்காக அவர்களுக்கு இந்தக் கொடூரமான தண்டனை? அவர்களுக்குத் தண்டனை விதிப்பவர்கள் யார்? இவை அனைத்தும் குழப்பமின்றித் திரைக்கதையில் விவரிக்கப் பட்டுள்ளன. இறுதிக் காட்சியில் காட்டப்படும் கைதிகள், ஆபிரிக்காவிலுள்ள போயர் பழங்குடிகள். இவர்களைச் சிறையில் அடைத்துத் தூக்கிலிட்டும் சுட்டுக் கொன்றும் தண்டிப்பவர்கள் பிரிட்டிஷ் அதிகாரிகள். படத்தின் கதாநாயகர்கள் அவர்கள்தாம்.



பட்டிருக்கின்றன. ஐயோ, நம் நாட்டில் இப்படிப்பட்ட ஓர் கொடூரமான அமைப்பு இருக்கிறதா என்று நீங்கள் அச்சப்பட வேண்டியதில்லை. நாம் கைதிகளை வதைக்கிறோமே, கொல்கிறோமே என்று அவமானம் கொள்ளவேண்டிய அவசியமும் இல்லை. Ohm Kruger என்னும் திரைப்படத்தைப் பாருங்கள். அதிலும் வதைமுகாம் வருகிறது. நாம் உருவாக்கியதைப் போன்ற அதே வதைமுகாம். அதே போன்ற கைதிகள். அதே போன்ற தண்டனைகள். அங்கே கைதிகளாக இருந்தவர்கள் போயர்கள். நாம் கைது செய்து அடைத்து வைத்திருப்பது

Ohm Kruger என்னும் இந்த ஜெர்மானியப் படத்தைத் திரையிட்டு ஜெர்மானியர்களை அதிக எண்ணிக்கையில் பார்க்க வைத்ததன்மூலம் ஜெர்மானியர்களின் கலங்கிய மனசாட்சியை வருடிக் கொடுக்க விரும்பினார் ஹிட்லர். வதைமுகாம் என்பது என் கண்டுபிடிப்பு அல்ல, உலகுக்கே நாகரிகம் கற்றுக்கொடுத்த வெள்ளைக்காரர்கள்தான் அதையும் அறிமுகப்படுத்தினார்கள் என்று ஜெர்மானியர்களுக்கு மட்டுமல்ல உலகுக்கும் அவர் தெளிவுபடுத்த விரும்பினார். இறுதியாக, யூதர்கள் ஜெர்மானியர்கள் அல்லர், அவர்கள் ஜெர்மானியர்களின்

வதைமுகாம் என்பது அயல்நாடுகளில் காலம்காலமாக இருந்துவரும், மதிக்கத்தக்க ஒரு நிறுவனம் என்றார் ஹிட்லருடன் பணிபுரிந்த மற்றொரு உயர் அதிகாரி.

யூதர்களுக்கு எதிரான பெரும்போரைத் தொடங்குவதற்குமுன்பு ஹிட்லர் மேற்கொண்ட முதல் முக்கியமான நடவடிக்கை அவர்களுடைய குடியுரிமையைப் பறித்ததுதான். சட்டத்தின் உதவியைக் கொண்டு, ஆட்சி நிர்வாகத்தைப் பயன்படுத்தி அவர் இதனை அதிகாரபூர்வமாகச் செய்துமுடித்தார். சுத்த ரத்தத்தை உடலில் தாங்கி நிற்கும் ஆரியர்களான ஜெர்மானியர்கள் மட்டுமே நாட்டின் அதிகாரபூர்வமான குடிமக்களாக இருப்பார்கள். யூதர்கள் வெளியேற்றப்பட வேண்டிய அந்நிய சக்திகள் அல்லது அழித்தொழிக்கவேண்டிய கிருமிகள். வதைமுகாமை ஹிட்லர்தான் முதலில் கண்டுபிடித்தார் என்று எப்படிச் சொல்ல முடியாதோ அப்படியே யூத வெறுப்பையும் அவர்தான் முதலில்தூண்டிவிட்டார் என்று சொல்லமுடியாது. பல நூற்றாண்டுக்கால வெறுப்பு அது. ஹிட்லர் செய்ததெல்லாம் இந்த வெறுப்பைத் தன்னுடைய அரசியல் லாபத்துக்காக மேலும் வளர்த்தெடுத்து, கொடூரமான தோர் இனவொழிப்புக்கு இட்டுச் சென்றது மட்டும்தான்.

எந்த அளவுக்குத் தீவிரமான யூத வெறுப்பை ஹிட்லரும் அவருடைய அரசும் கொண்டிருந்தது என்பதற்கு எண்ணற்ற உதாரணங்களை வரலாறு சேமித்து வைத்திருக்கிறது. யூதர்களை அணு அணுவாகச் சிதைத்து முடித்த பிறகு எஞ்சியிருக்கும் உடலைத்தான்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

அவர்கள் இறுதியில் கொன்றார்கள். போலந்தில் உள்ள மாஜ்டெனெக் என்னும் முகாமில் ஒரு குளியலறை இருந்தது. அதைப் பயன்படுத்திய ஒரு கைதியின் குறிப்பு இது. 'கைதிகள் எல்லோரும் அந்த அறையில்தான் குளிப்போம். மிகக் குறைவான குழாய்கள்தான் இருக்கும். நாங்கள் 4,500 பேர் இருந்தோம். அனைவரும் குளித்தாகவேண்டும். சோப் இருக்காது. துடைத்துக்கொள்ள டவல் கிடையாது. ஒரு கைக்குட்டைகூட இருக்காது. ஆனாலும் குளித்தோம்.'

கழிப்பறை என்பது தோண்டப்பட்ட குழிகள்தாம். முழுக்க மலம் நிரம்பி வழியத் தொடங்கியபிறகும் மேலும் சில நூறு பேர் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். சுத்தப்படுத்திக்கொள்ள அழுக்கடைந்த சாக்கடை நீரே இருக்கும். வேலையின் ஒரு பகுதியாக மலக்குழிகளைச் சுத்தப்படுத்தும் பணிகளைக் கைதிகளே செய்தாகவேண்டும். இரண்டு பெரிய தகரப்பெட்டிகளில் கழிவுகளை வழிய வழிய நிரப்பிக்கொண்டபிறகு தோளில் சுமந்து நடக்கவேண்டும். சில கிலோ மீட்டர் இப்படி நடக்கவேண்டும். கவனமாக இருப்பது சுமப்பவருக்கு நல்லது; இல்லாவிட்டால் தகரப்பெட்டிகளில் இருப்பது உங்கள் கால்களிலும் தொடைகளிலும் சிந்தி வழியும்.

சுகாதாரமற்ற சூழல் பலவிதமான வியாதிகளை உற்பத்தி செய்தது. தொற்று நோய் மிக எளிதில் உடல் விட்டு உடல் தாவிப் படர்ந்தது. உடல் வியாதி சிலருக்கு மன வியாதியாகவும் மாறியது. பெர்கென் பெல்சன் முகாமைச் சேர்ந்த ஒரு யூதர் சொல்கிறார். 'எங்கள் முகாமில் வியாதிகள் மிக வேகமாகப் பரவின. டைபாய்டு காய்ச்சல் பலருக்கும் வந்தது. சிலர் தங்களுக்குள் பேசிக்கொள்ளத் தொடங்கினர். திரும்பத் திரும்ப நடந்துகொண்டே இருந்தனர். பசியாலும் வியாதியாலும் நாங்கள் சாகவேண்டும் என்பதுதான் நாஜிக்களின் விருப்பமும்.'


அதிகபட்சக் காய்ச்சல் இருந்தாலும் கைதிகள் வேலை செய்தே தீரவேண்டும். ஒரு கூடுதல் கம்பளிகூடக் கிடைக்காது. ஒரு ஜோடி மரக்காலணி இருந்திருந்தால் குளிரிலிருந்து தப்பிப் பிழைத்திருக்கலாம். கொடுக்க மாட்டார்கள். வயிற்றுப் போக்கைத் தடுத்து நிறுத்த சில எளிய மாத்திரைகள் போதுமானதாக இருந்திருக்கும். அளிக்கமாட்டார்கள். அது வளர்ந்து வளர்ந்து அவரைக் கொல்லும் வரை காத்திருப்பார்கள். மலச்சிக்கல், பல் வலி, தலைவலி, உடல் வலி எதற்கும் சிகிச்சை கிடையாது. வலியிலும் காய்ச்சலிலும் செயலிழந்து புத்தி பேதலித்து தனக்குள் அரற்றிக் கொண்டிருக்கும் நிலை ஏற்பட்டாலும் சீந்த ஒருவரும் இருக்கமாட்டார்கள்.

கிரேக்கத்திலிருந்து வந்திருந்த கைதிகள் என்று சிலரைக் கிடத்தி வைத்திருப்பார்கள். அவர்களுடைய உடல் பாதி எரிந்திருக்கும். சிலருடைய உடல்களில் பெரிய பெரிய ஓட்டைகள் போடப்பட்டிருக்கும் அல்லது ஆழமான தீக்காயங்கள் காணப்படும். 27 தினங்கள் தொடர்ச்சியாக உணவு இல்லாததால் இறந்த ஒரு யூதரின் சடலம் இருக்கும். முழுவதுமாகக் கிழிக்கப்பட்ட உடல்களையும் கண்கள் பிடுங்கப்பட்ட உடல்களையும் காண்பது இயல்பானது. யூதர்களை உயிருடன் படுக்கவைத்து விருப்பப்படி உடலைக் கிழித்தும் குதறியும் போட்ட மருத்துவர்கள் பலர் இருந்தனர்.

வார்த்தைகளில் விவரிக்கமுடியாத பல கொடுமைகளை யூதர்கள் சந்தித்துக் கொண்டிருந்தபோது பெரும்பான்மை ஜெர்மானியர்கள் என்ன செய்துகொண்டிருந்தார்கள் தெரியுமா? வாய்மூடி அமைதியாக இருந்தார்கள். இந்த அமைதிக்கு மூன்று காரணங்களைக் குறிப்பிட்டுச் சொல்லமுடியும். முதலாவது, பொருளாதாரக் காரணம். யூதர்களை அகற்றுவதன் மூலம் சமூகத்தில் அவர்கள் இதுவரை வகித்துவந்த பாத்திரத்தை இனி நாம் வகிக்கலாம். அவர்களுடைய தொழில்களை நாம் நடத்தலாம். அவர்களுடைய செல்வத்தை, அவர்களுடைய சேமிப்புகளை, அவர்களுடைய வாய்ப்புகளை இனி நாம் பயன்படுத்திக் கொள்ளலாம். யூதர்களை அகற்றுவது தமக்கு லாபகரமானதாக இருக்கும் என்று ஜெர்மானியர்கள் நினைத்தனர்.

இரண்டாவது காரணம், வெறுப்பு அரசியல். யூதர்களை உள்ளபடியே





வெறுத்த ஜெர்மானியர்கள் பலர் இருந்தனர். யூதர்களைச் சமூகத்திலிருந்து அகற்றமுடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று உள்ளூரக் கனவு கண்டுகொண்டிருந்தவர்கள் இவர்கள். யூத வெறுப்பையே தன்னுடைய அரசியலாக அறிவித்துக்கொண்ட ஹிட்லரின் அதிரடி நுழைவு இவர்களை உற்சாகப் படுத்தியது. நாஜிக்கள் யூதர்களை வளைத்துப் பிடித்ததும், குடியுரிமையைப் பறித்ததும், வதைமுகாமில் அடைத்து வைத்துக்கொன்றதும் இவர்கள் மனசாட்சியைச் சிறிதும் அசைக்கவில்லை. உண்மையில் அவர்கள் இத்தனை காலமாகச் செய்ய நினைத்திருந்ததைத்தானே ஹிட்லர் சாதித்துக் காட்டியிருக்கிறார்?

மூன்றாவது பிரிவினரின் மனசாட்சி உயிர்ப்புடன் இருந்தது. ஆயிரம் சொன்னாலும் யூதர்களைக் கொல்வது ஏற்கத்தக்கதல்ல என்றே அவர்கள் நினைத்தனர். ஹிட்லரின் இனவெறி அரசியலோடு அவர்களால் ஒன்றமுடியவில்லை. யூதர்கள் ஒழிவது நமக்கு லாபகரமானதுதானே என்று மற்றவர்களைப் போல் அவ்வளவு எளிதாக அவர்களால் வதைமுகாமைக் கடந்துசெல்ல முடியவில்லை. என் அரசு செய்வது தவறு' என்று அவர்கள் உறுதியாக நம்பினர். இருந்தாலும், அவர்கள் அமைதியாக இருந்ததற்குக் காரணம், அப்படி இருப்பதைத் தாண்டி வேறு என்ன செய்வது என்று அவர்களுக்குத் தெரியவில்லை என்பதுதான்.

யூத இனப்படுகொலை நிகழ்ந்ததற்கு ஹிட்லர் மட்டுமன்று, இவர்களும்தான் காரணம். யூதர்கள் இல்லாத ஜெர்மனி அமையவேண்டும் என்பதே முதல் இரு பிரிவினரின் விருப்பம் என்பதால் அவர்கள் ஹிட்லரைத் தாங்கிப் பிடித்து நின்றனர். நாஜிப் படைகளோடு பல சமயம் இந்த இரு பிரிவினரும் இணைந்து யூதர்களின் குடியிருப்புகளையும் வர்த்தக நிறுவனங்களையும் சூறையாடினர். மறைந்து வாழ்ந்த யூதர்களைக் காட்டிக் கொடுக்கவும் அவர்கள் தயங்கவில்லை. ஜெர்மனியின் வரலாற்றை ஹிட்லர் சரி செய்வார் என்றும், இழந்த பெருமிதங்களை மீட்டெடுப்பார் என்றும் அவர்கள் எதிர்பார்த்தார்கள். ஜனநாயகத்தால் ஒரு பலனும் விளையப் போவதில்லை என்றும், ஹிட்லர் போன்ற ஒரு வலுவான தலைமை எடுக்கும் சில கடினமான முடிவுகள் தேசத்தின் வளர்ச்சியைத் துரிதப்படுத்தவே செய்யும் என்றும் இவர்கள் நம்பினர். மூன்றாவது பிரிவினருக்கு இத்தகைய நம்பிக்கைகள் இல்லை என்றாலும், அவர்கள் தங்களுடைய ஒட்டுமொத்த பலவீனத்தால் ஹிட்லரின் பலத்தைப் பல மடங்கு பெருகச் செய்தனர்.

யூதர்கள் அன்றிருந்த நிலையில்தான் இன்றைய அகதிகள் பலர் இருக்கிறார்கள். நாஜிக்கள் போல் வகை வகையாகச் சித்ரவதைகள் செய்ய இன்று யாருமில்லை என்றபோதும் அகதிகள் சந்திக்கும் பல துயரங்கள் யூதர்கள் முன்பு சந்தித்த துயரங்களையே நினைவுபடுத்துகின்றன. ஜெர்மானிய யூதர்களின் குடியுரிமை எப்படிப் பறிக்கப்பட்டதோ அப்படித்தான் இன்று பல அகதிகளின் குடியுரிமையும் பறிக்கப்பட்டுள்ளது.

ஹிட்லரின் படைகளுக்கு பயந்து தங்களுடைய நாட்டை விட்டுத் தப்பியோடிய யூத அகதிகள், எல்லாவற்றையும் போட்டது போட்டபடி தப்பியோடிய ரோஹிங்கியா முஸ்லிம்களையே நினைவுபடுத்துகிறார்கள். சிரியாவில் நடந்ததும் இதுவே தான். இராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் ஆப்பிரிக்காவிலும் இலங்கையிலும் இதுவேதான் நடந்தது. நீ இந்த நாட்டைச் சேர்ந்தவனல்லன். உன் வேர் இந்த மண்ணில் இல்லை. நீ அந்நியன். எனவே நீ வெளியேறியாகவேண்டும். இல்லாவிட்டால் கொல்லப்படுவாய்.

ஹிட்லர் இன்றில்லை. வதைமுகாம்கள் இல்லை. ஆனால், காளான் போல் பெருகிக்கொண்டே போகும் அகதி முகாம்கள் அழுத்தமாக அறிவிக்கும் செய்தி ஒன்றுதான். ஹிட்லரை பலப்படுத்திய மூன்று பிரிவினரும் இப்போதும் உலகம் முழுக்க நிரம்பியிருக்கிறார்கள். ரோஹிங்கியா முஸ்லிம்கள் நம் எதிரிகள் என்று அவர்கள் நினைக்கிறார்கள். இலங்கைத் தமிழர்களை வெளியேற்றினால் அவர்களுடைய வாய்ப்புகளை நாம் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று நினைக்கிறார்கள். என் அரசு செய்வதை நான் ஏற்கவில்லை. ஆனால், என்னால் என்ன செய்யமுடியும் என்று நினைக்கிறீர்கள் என்று அமைதி காப்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அகதி முகாம்கள் பெருகிக்கொண்டு போவதற்கு இவர்களும் ஒரு வகையில் காரணம்தான்.

வரலாற்றிலிருந்து நாம் கற்கவில்லை என்பது பெருஞ்சோகம். ஹிட்லரின் கரங்களில் கடும் வதைகளை அனுபவித்த யூதர்கள், உலகம் முழுக்க அகதிகளாகச் சிதறியோடிய யூதர்கள் தங்களுக்கென்று ஒரு தனி நாட்டை உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள். நல்லது. ஆனால், அதே யூதர்கள் இன்று பிரிவினைச் சுவர்களை எழுப்பி, பாலஸ்தீனர்களை அகதிகளாக மாற்றிச் சிதறடிக்கிறார்கள் என்பதை எப்படிப் புரிந்துகொள்வது?

**சொந்தங்கள் வருவார்கள்...**

# ட்யூப்லெஸ் தீர்வு

ட்யூப்லெஸ் டயர்களில் பஞ்சர் ஏற்பட்டாலும் குறைந்தது 50 கி.மீ வரை போய்விடலாம். இதன் பெரிய மைனஸ் சில கடைகளில் ட்யூப்லெஸ் பஞ்சர் கிட் இருக்காது. தற்காலிகமாகக் காற்றை நிரப்பி ஓட்டுவது, டயர்களுக்கும் நமக்கும் மிகப் பெரிய ஆபத்தை வரவழைக்கலாம். இதற்காகத்தான் நாமே பஞ்சர் ஒட்டிக்கொள்ளும்படி பஞ்சர் கிட் வந்துள்ளன. லைசென்ஸ், RC புக் மாதிரி இந்த கிட்டையும் நாம் பைக்கிலேயே வைத்திருந்தால், எப்போதும் கவலை இல்லை. ட்யூப்லெஸ் பஞ்சர் கிட்கள், நிறைய மார்க்கெட்டில் இருக்கின்றன. இதில் 'கொய்டோ' நிறுவனத்தின் பஞ்சர் கிட், கைக்கு அடக்கமாகவும் தரமாகவும் இருக்கிறது. ஸ்பைரல் டூல், இன்செர்ட்டிங் டூல், கட்டிங் ப்ளேயர், பஞ்சர் சீல்கள், ரப்பர் ட்யூப் சிமென்ட், ஷார்ப் பிளேட் ஆகியவை இந்த டூல் கிட்டில் இருக்கின்றனவா என்று செக் செய்துகொள்ளுங்கள்.

ட்யூப்லெஸ் டயர்களுக்கு சுலபமாக நாமே பஞ்சர் ஒட்டலாம்.


1 முதலில் டயரில் குத்தியிருக்கும் ஆணியை, கட்டிங் ப்ளேயர் கொண்டு வெளியே எடுங்கள்.

2 பிறகு, அந்த ஓட்டையை ஸ்பைரல் டூல் கொண்டு பெரிதாக்குங்கள்.

3 ஊசியில் நூல் கோர்ப்பதுபோல், ரப்பர் ட்யூப் சிமென்ட்டை ரிப்பேர் டூலில் செருகி அந்த ஓட்டைக்குள் செலுத்துங்கள்.

4 ரப்பர் ட்யூபில் பாதி உள்ளே செல்லும்வரை அழுத்தி, டூலை வெளியே எடுத்துவிடுங்கள்.

5 ஓட்டை முழுவதுமாக அடைக்கப் பட்டவுடன், வெளியே தெரியும் மீதி ரப்பர் ட்யூப்பை கிட்டில் இருக்கும் பிளேடு கொண்டு வெட்டிவிட்ட பிறகு காற்றை நிரப்புங்கள். பைக் ஓட ஓட, சேர்ஜரி செய்த இடம் ஸ்மூத்தாகி விடும்.



சாள்ஸ் ஜே போர்மன்

இரவு உறங்கப்போக நேரமாகிவிட்டிருந்தது. வெயிலில் அலைந்ததும், கடல்காற்றும் சேர்ந்து நல்ல களைப்பை உண்டாக்கியிருந்தது.

"நாளை காலை நாங்கள் ஓய்வெடுப்போம், பின்னேரம் வெளியே போவோம்," என்றான் கதிர்.

அவனது வயதில் இப்படியான பிரயாணங்களில் முனகாமல் பங்கெடுப்பது மிகப் பெரிய விடயம் என்று நான் நினைக்கிறேன். சுமார் மூன்று வயதிலிருந்தே நானும் அவனும் தனியே பல தடவைகள் பயணம் செய்திருக்கிறோம். ஒரு பிள்ளையுடன் பயணம் செய்வதானால் மெதுவாகத் தயார் செய்வது அவசியம். முடிந்தவரை பிள்ளையின் விருப்பம், உடல்வலு போன்றவற்றையும் கவனத்தில் எடுத்து அதற்கேற்றபடி நிலைமையை செப்பனிட்டுக் கொண்டுவர வேண்டும்.

"சரி காலையில் நான் எழுப்பமாட்டேன், நீயாக எழும்பியபின் ஹோட்டல் நீச்சல் குளத்தில் குளிப்போம். மாலையில் என்ன செய்யலாம் என்று அதற்குப் பிறகு முடிவு செய்யலாம். நான் வழக்கம் போல் எழும்பி விடுவேன். வெளியே போவதானால் உனக்காக காலைச்சாப்பாட்டை வைத்துவிட்டு அறையைப் பூட்டிக்கொண்டு போய்விட்டு வருவேன்" என்றேன் நான். சரியென்று தலையாட்டினான் அவன்.

வழக்கமாக அதிகாலையில் எழுந்துவிடும் பழக்கமுள்ளவன் நான். இஷ்டப்படி வெளியே குறியில்லாமல் நடக்கலாம், அச்சமயத்தில் எதிர்பாராத ஏதாவது ருசிகரமான இடங்கள் கண்ணில்படக்கூடும் என்று நினைத்துக் கொண்டேன்.

எங்கள் அறைக்குள் காலநிலை பதனப்படுத்தும் கருவி இருந்தாலும் நாங்கள் அதைப் பாவிக்கவில்லை. இரவு முழுவதும் குளிருக்குள் இருந்துவிட்டு வெளியே வரும்போது முகத்திலடிக்கும் வெம்மையும், சூடும் வெளியே போகும் உற்சாகத்தையே குறைத்துவிடும் என்பது எங்களிருவரின் அனுபவம்.

பக்கத்து அறைக்குப் புதியதாக வந்திருந்தவர்களோ நாள் முழுவதும் தங்கள் அறைக்குள் இருக்கும் காலநிலை பதனப்படுத்தும் கருவியை இயக்கிக் கொண்டிருந்தார்கள். அக்கருவியோ எங்கள் அறைக்கு அருகேயிருந்தது. விளைவு அதிலிருந்து வெளிவரும் சூடான காற்று எங்கள் அறை பக்கம் வீசிய காற்றினூடாக திறந்து வைத்திருந்த பால்கனி கதவு மூலம் எங்கள் அறைக்குள் நுழைந்து அந்த இரவை மேலும் சூடாக்கியது.

கண்ணயரும் வரை அது எரிச்சலாக இருந்தாலும் நாங்களிருவரும் வேகமாக தூங்கிவிட்டோம்.

காலையில் ஓரிரு மெலகூனியாத் துண்டுகளுடன் கறுப்புக்காப்பியை குடித்துவிட்டு நான் வெளியே இறங்கினேன். சுமார் ஏழுமணிக்கே வியர்க்க ஆரம்பித்து விட்டது. நகருக்குப் போகும் பாதையில் ஓரளவு தூரம் போனதும் "பழங்கால அக்ரபோலிஸ்" என்ற பெயருடன் இடதுபக்கமாக ஒரு வழி போனதைக் கவனித்து வைத்திருந்தேன்.

அக்ரபோலிஸ் என்றால் குன்றின்மீது இருக்கும் ஒரு நகரம் என்று அர்த்தப்படுத்தலாம். அது நடந்துபோகும் தூரத்தில்தான் இருக்கிறதா என்பதைத் தெரிந்து வைத்திருந்தால் பிறகு கதிரையும் கூட்டிக்கொண்டு அங்கே போகலாம் என்று நினைத்துக் கொண்டு அவ்வழியில் நடந்தேன்.

வளைந்து வளைந்து உயர்வாக போய்க் கொண்டிருந்த வழி விரைவிலேயே ஒரு பிரதானவீதியுடன் சேர்ந்து கொண்டது. வழியெங்கும் வறண்டு போயிருந்தது. உயரமான மதில்களுக்குப் பின்னாலிருந்த ஓரிரண்டு வீடுகளைத் தவிர பல இடங்களில் தொல்பொருள் ஆராய்வுகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த இடிந்த, சேதமடைந்த கட்டடங்களை ஆங்காங்கே காண முடிந்தது.

அக்கட்டடங்களை சுற்றி உயரமான முள்வேலியுடன் யாரையும் நுழையக் கூடாதென்ற எச்சரிக்கைகள் வைக்கப் பட்டிருந்தன. ஆனால், அவ்வேலிகளெல்லாம் சிதைந்து எவரும் உள்ளே நுழையக் கூடியவாறே இருந்தது நிலைமை. சுமார் ஐந்து வருடங்களுக்கும் மேலாக கிரீஸில் உண்டாகியிருக்கும் பொருளாதார நெடுக்கடியால் அரசாங்கத்துக்கு இவ்விடங்களையெல்லாம் கவனிக்கும் வசதி இல்லையென்று நான் புரிந்து கொள்ள முடிந்தது.

திடீரென்று நான் மிக உயரமான குன்றொன்றை நோக்கிப் போய்க் கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. காரணம் வலது பக்கமாக கீழே ரோடோஸ் நகரத்தின் எல்லையிலிருந்த கடற்கரை எனக்குக் கீழே தெரிந்தது.

தொடர்ந்து சில நூறு மீற்றர்கள் தூரத்தில் இன்னொரு குன்றின் மேல் நான் தேடிவந்த அக்ரபோலிஸ் தெரிந்தது.

அதற்குள் சுற்றிப்பார்க்க ஒரு சில மணித்தியாலங்கள் தேவையென்பதாலும், கதிரையும் கூட்டிக்கொண்டு வரவேண்டும் என்று நினைத்துக் கொண்டும் தங்கியிருந்த விடுதிக்குத் திரும்பினேன்.

மதிய உணவைச் சாப்பிட்டுக்கொண்டு அன்றைய மாலை மீண்டும் ரோடோஸ் கோட்டைக்குப் போவதென்று முடிவெடுத்தோம்.

ரோடோஸ் கோட்டையை ஒரு தடவையில் முழுதாகப் பார்த்து முடிக்க முடியாது. சுமார் நான்கு கிலோமீற்றருக்கு உயர்ந்த பாதுகாப்பு மதில்களுக்கு உள்ளே இருக்கிறது. இன்றும் நிமிர்ந்து நிற்கும் அம் மதில்களைத் தவிர பாதுகாப்புக்காக உண்டாக்கப்பட்ட அகழிகள், கோபுரங்கள் மற்றும் விதம் விதமான கட்டடங்களையெல்லாம் பார்த்து அவைகளினூடாக நடந்து கொண்டிருக்கும்போது நாம் அப்பிரதேசம் உயிருடனிருந்த 13ம் நூற்றாண்டு முதல் 15ம் நூற்றாண்டுக் காலத்துக்கே போய்விடுகிறோம்.

கட்டுரைத் தொடரின் ஆரம்பத்தில் இன்று வியாபார ஸ்தாபனங்களினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் கோட்டையின் முக்கிய பகுதியொன்றை பற்றி குறிப்பிட்டிருந்தேன். அவைகளை தவிர்த்து சரித்திரகாலத்தை மட்டும் உணரக்கூடிய பகுதிகளைப் பார்ப்பதற்கு முற்பட்டோம்.

கோட்டை மதில்களுக்கு இப்போது 12 தனித்துவமான அமைப்பில் 12 வாசல்கள் இருக்கின்றன. சில வாசல்கள் அழிந்து விட்டன. இவ் வாசல்கள் அன்று அவசியமான போக்குவரத்துக்கான அகல, உயரத்துடன் மட்டுமிருந்தன. 1924 இல் ரோடோஸ் இத்தாலியர்களின் கையிலிருந்தபோது அவைகள் பெரிதாக்கப்பட்டன.


இம்முறை ரோடோஸ் நகருக்கூடாக நுழையாமல் தெற்குப் பக்கமிருக்கும் [D'Amboise Gate] அம்பியோஸ் வாசலினூடாக உள்ளே நுழைந்தோம்.


உள்ளே நுழைந்தவுடன் திடீரென்று அரங்கு மாறிவிட்டது. பச்சைப்பசேலென்ற புற்றரையில் ஓரளவு அகலமான பாதையில் நடந்து கொண்டிருந்தோம். மேலே நிமிர்ந்து பார்த்தால் உயரத்தில் மாடியில் வேறு வழிகளில் ஆட்கள் நடந்து கொண்டிருப்பது தெரிகிறது.

சிலுவை போர்க்காலத்தில் முக்கிய ஒரு ஆயுதப் போராட்ட இயக்கமாக இருந்த புனித யோவானின் படையினர்கள் ரோடோஸை கைப்பற்றி இக்கோட்டையை அதற்கு முன்பிருந்த அரண்களின் அத்திவாரத்தைப் பாவித்துக் கட்டியதாக நான் முன்பே குறிப்பிட்டிருந்தேன்.


கோட்டைக்குள்ளிருக்கும் நகருக்குள் எட்டு மதில்கள் கட்டப்பட்டு ஏழு நாக்குகள் என்ற பெயரில் பகுதிகள் பிரிக்கப்பட்டன. அவைகள் புனித யோவானின் படையினரில் இருந்த ஏழு [இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்ஸ், ப்ரொவென்ஸ்,





# உலகம் சுற்றி பார்ப்போம் 11




# யூர்ட்டிமெமெலியுடன் முடிந்த ஒரு மாலை

6-ம் பக்க தொடர்ச்சி...

மேற்கொள்ளப்பட்ட தாவரவியல் பூங்காத் திட்டமாகும்.

இந்தத் திட்டமே இன்று இன்னொரு பிரச்சினைக்குக் காரணமாகியுள்ளது. அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட நிதியை மாவீரர் துயிலுமில்லத்துக்குப் பயன்படுத்துவது தொடர்பாக எழுந்த சர்ச்சையே இந்த நிலைமையை உருவாக்கியுள்ளது.

தாவரவியல் பூங்காவை நிர்மாணிப்பதற்கான நிதி, அதைப் பயன்படுத்தும் நடைமுறை? அதற்கான அனுமதி எந்த அடிப்படையில், யாரால் வழங்கப்பட்டது? திட்டத்தின் வகை? காணி உரிமம்? போன்ற பல விடயங்கள் குறித்துவிசாரிக்கப்படும் என்று தெரிகிறது.

அதிலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அமைச்சின் கீழ் கிராம அபிவிருத்தி விசேட செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட 20 மில்லியன் ரூபா நிதி தொடர்பாகவே கூடுதல் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

இதனுடைய முடிவுகள் எப்படி அமையும் என்று தெரியவில்லை. ஆனாலும் தாவரவியல் பூங்காவாக மாவீரர் துயிலுமில்லத்தை மாற்றினால், சட்டரீதியாக அது பிரதேச சபையின் ஆளுகைக்குள்ளாகி விடும். அத்துடன், இவ்வாறு அரசநிதியில் அதை நிர்மாணிக்கும்போது, அதனுடைய உரித்து அரசுக்குச் செல்கிறது. ஆகவே எதிர்காலத்தில் இதற்குள் நுழைவதற்கான அனுமதியை அரசிடமே பெற வேண்டிய நிலையும் ஏற்படும். சில சந்தர்பத்தில் அவசியமேற்படும்போது நீதிமன்ற உத்தரவின் மூலமாக அரசாங்கம் இதற்கான தடை உத்தரவைப் பிறப்பிக்கவும் முடியும். அரசாங்கம் மட்டுமல்ல, பிரதேச சபையினால் கூட இதைச் செய்ய இயலும்.

ஆகவேதான், இந்த நடவடிக்கை தவறாக எடுக்கப்பட்ட ஒரு முடிவின் விளைவு என்று பலரும் விசனம் தெரிவிக்கின்றனர். மாவட்ட செயலக வட்டாரங்களின் முகச் சுழிப்பும் இந்த அடிப்படையிலானதே.

உண்மையில், அரசாங்க நிதிக்குப் பதிலாக, மாவீரர் துயிலுமில்லத்தை மக்கள் தங்களுடைய பங்களிப்பின் மூலமாக நிர்மாணித்திருப்பர். அதற்கான சமூக மனம் தாரளமாகவே உண்டு. இதற்குப் புலம்பெயர் மக்களும்உதவியிருப்பர். அப்படிச் செய்திருந்தால், அது சுயாதீனத்தன்மையைப் பேணியிருக்கும். இப்படி அரச நிதியைப் பயன்படுத்திச் சிக்கல்களை உருவாக்கியிருக்கத் தேவையில்லை.

இப்பொழுது நடந்திருக்கும் தாவரவியல் பூங்கா என்ற செயற்றிட்டமானது, "குளத்தைக் கலக்கிப் பருந்திற்குக் கொடுக்கும் கதை"யேயாகும். நிச்சயமாகப் புத்திசாலித்தனமில்லாத ஒரு நடவடிக்கையே.

ஆனால், "இது ஒரு திட்டமிடப்பட்ட செயலாகும்" என்று வாதிடுகிறார் மூத்த பத்திரிகையாளர் ஒருவர். அவருடைய அவதானித்தின்படி, "இந்தத் திட்டத்தை ஆரம்பித்திருக்கும் சிறிதரன் இது தொடர்பாக தன்னுடைய கட்சியினரித்திலோ, அதனுடைய தலைமையிடத்திலோ கலந்தாலோசித்திருக்கவில்லை. அத்துடன், பகிரங்க அறிவிப்பை விடுத்து, ஒரு கலந்தாலோசிப்பின் மூலமாக இதைச் செய்யவில்லை. ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் அதிகாரிகளோடும்வரையறுக்கப்பட்ட பொது அமைப்புகளோடும் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் இந்த விடயத்துக்குப் பொருந்தவே பொருந்தாது என்பது மாவீரர் குடும்பங்கள உள்ளிட்ட பல தரப்பினரின் கருத்தாகும். சிறிதரன் அதிகமான சந்தர்ப்பங்களிலும் அரசாங்கத்துக்குச் சார்பாகவே செயற்படுகிறார். அரச நிகழ்ச்சி நிரலைச் சாத்தியப்படுத்துவதற்கு அவர் மிகச் சாதுரியமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார். அதை மறைப்பதற்காகவே அவர் விடுதலைப் புலிகளின் அரசியல் சுலோகங்களை மிக நுட்பமாக முன்னெடுக்கிறார். மற்றும்படி அடிப்படையில் அவர் அரசுக்கு ஆதரவான வேலைகளையே செய்து கொண்டிருக்கிறார்" என்று சொன்னார்

இதற்கு அவர் தன்சார்பான சில ஆதாரங்களையும் முன்வைத்தார். முதலாவது, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, இதே துயிலுமில்லத்திலிருந்து படையினர் வெளியேறியபோது, அதைப் புனரமைப்புச் செய்யப்போகிறோம் என கரைச்சிப் பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றச் செய்து மீண்டும் இராணுவ மயமாக்கினார்.




**தாவரவியல் பூங்காவை நிர்மாணிப்பதற்கான நிதி, அதைப் பயன்படுத்தும் நடைமுறை? அதற்கான அனுமதி எந்த அடிப்படையில், யாரால் வழங்கப்பட்டது? திட்டத்தின் வகை? காணி உரிமம்? போன்ற பல விடயங்கள் குறித்துவிசாரிக்கப்படும்**

இரண்டாவது, கடந்த ஆண்டு துயிலுமில்லங்களைப் படையினர் ஒட்டுமொத்தமாக விடுவித்தபோது, உடனடியாக ஓடிச் சென்று தானே அவற்றைக் கையிலெடுக்க முயற்சித்தார். விடுவிக்கப்பட்ட துயிலுமில்லங்களை எப்படி மீள் நிலைப்படுத்துவது, அவற்றை எவ்வாறு அடுத்த கட்டமாக உருவாக்குவது என்பதை தன்னுடைய கட்சியினருடனோ, கூட்டமைப்பின் ஏனையதரப்பினருடனோ, பொது மக்கள், மாவீரர்களின் பெற்றோர் போன்றவர்களுடனோ கலந்து பேசி அதைச் செய்ய விரும்பவில்லை. பதிலாகத் தன்னிச்சையாகத் தனியாகவே அதை எடுத்தாள முற்பட்டார். அதுதான் அவர் மீதான கடுமையான விமர்சனமாகவும் எதிர்ப்பாகவும் மாறியது.

மூன்றாவது, மாகாணசபையின் பொறுப்புக்குட்பட்ட விவசாய அமைச்சு, அதன் கீழான நீர்ப்பாசனத்திணைக்களம் மற்றும்வீதி அபிவிருத்தித்திணைக்களத்தின் வேலைகள், கல்வி அமைச்சுக்குக் கீழான பாடசாலை நிகழ்வுகள், நடவடிக்கைககள் போன்றவற்றில் அத்துமீறி தலையீடுகளைச் செய்து நிர்வாக அதிகாரக் குழப்பங்களை உண்டாக்கி வருகின்றமை. இதெல்லாம் மத்திய அரசாங்கத்தின் விருப்பத்திற்கு (நிகழ்ச்சி நிரலுக்கு) அமைய மாகாண நிர்வாகத்தைக் குழப்பி அதை வலுவிழக்கச் செய்தலாகும்.

நான்காவது, மாகாணசபையின் நிர்வாக ஒழுங்கை மீறி, காணி விடயங்களில் தலையீடுகளைச் செய்து மத்திய காணி ஆணையாளரின் தலையீட்டுக்கு வகை ஏற்படுத்திக் கொடுத்தல். (உதாரணம், ஸ்கந்தபுரம் கரும்புத்தோட்டக்காணி விவகாரம்). இதேவேளை பல மாவீரர் குடும்பங்களின் காணிகளைப் பல வசதியான குடும்பங்களைச் சேர்ந்தோரும் நிதிப்பலமுடையோரும் அபகரிக்கும் போது, அதைக் கண்டும் காணாதும் இருக்கின்றமை.

ஐந்தாவது, தற்பொழுது மாவீரர் துயிலுமில்லங்களைத். தாவரவியல் பூங்காக்களாக்கி அவற்றை அரசுடமையாக்குவதற்கான வாய்ப்பை அளித்திருப்பது எனப் பலவற்றை அவர் குறிப்பிட்டார்.

ஆகவே துயிலுமில்லத்தை. மாற்றுவதற்கான முயற்சியை எடுத்து அதை மிகப் பாரதூரமான ஒரு நடவடிக்கையாக தமிழ் மக்களை மேலும் நெருக்கடிக்கும் குழப்பத்துக்கும் உள்ளாக்கும் ஒரு பிரச்சினைக்குள் தள்ளுவதாக மாற்றியுள்ளார் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சிறிதரன்.

"வலி சுமந்தவருக்கே வலியை அறிய முடியும். மற்றவர்களின் கண்ணீரை அரசியலாக்க முயற்சிப்போருக்கு இதெல்லாம் தூசு" என்கிறார் அந்த மூத்த போராளி. இந்த நிலையைக் குறித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை அறிவதற்காகத் தொடர்பு கொள்ள முயற்சித்தேன். அவர்கள் தேர்தல் கூட்டுகளை உருவாக்குவதிலும் ஏற்கனவே கூட்டமைப்பில் உண்டாகியிருக்கும் உள் முரண்பாடுகளைத் தீர்ப்பதிலுமே கவனமாக இருக்கின்றனர். இருந்தும் இதைக் குறித்து கூட்டமைப்பின் (தமிழரசுக் கட்சியின்) சிரேஷ்ட உறுப்பினர் ஒருவரிடம் கேட்டேன். அவர் சொன்னார், "மாவீரர் துயிலுமில்ல விடயங்கள் இப்போது அவசியமற்ற ஒன்று. ஆகவே அதை அடுத்த ஆண்டு பார்த்துக் கொள்ளலாம்" என்று.

புலிகளுக்கான சோதனைக் காலம் இப்போதைக்கு முடியாது போலுள்ளது.

---

அரகோனியா, அவர்ஜின், கஸ்டிலியனும் இத்தாலியும் ஒன்றாக] முக்கிய மொழியைச் சேர்ந்தவர்களுக்கு ஆளுக்கொரு பகுதியாகக் கொடுக்கப்பட்டது.

வடக்குப் பகுதியிலிருக்கும் நகரபாகம் பெரும்பாலும் போர்வீரர்களின் அதிகார பீடங்களாலானது. தென் பகுதி பல கிறீஸ்தவ தேவாலயங்கள் அடங்கியது.

ஏற்கனவே கோட்டையில் நடந்த முக்கியபோரின் [புனிதயோவானின் படையினருக்கும் ஒத்தமானிய அரசின் படைக்கும் இடையிலான போர்] விபரங்களைப் பற்றி வாசித்து கதிருக்கும் ஓரளவு சுருக்கமாகச் சொல்லியிருந்தேன். அதனால் ஆங்காங்கே சில இடங்களைப் பார்க்கும்போது அவன் அக்கதையின் விபரங்களை தன் கற்பனையுடன் சேர்த்து எனக்குத் திரும்பிக் கதைகள் சொல்லிக் கொண்டிருந்தான்.

அந்தச் சூழலில் அவனுக்கு அத்தனை கற்பனைகள் ஊறுவதில் எந்த அதிசயமுமில்லை. பல பிரபல சினிமாக்கள் இங்கே படமாக்கப்பட்டிருக்கின்றன. Peter and Paul, Pascali's Island, The Guns of Navarone, O Jerusalem என்பன அவைகளில் சில.

பரந்த முற்றங்களினின் ஊடாக நடந்து சென்றால் அவை ஆங்காங்கே நகர சதுக்கங்களில் முடிவடைகின்றன. வழிகளிலும் சதுக்கங்களிலும் மக்களின் தாகம் தணிக்க நீர்க்குழாய்கள் சுவர்களில் பதிக்கப்பட்டிருக்கின்றன. சில பகுதிகளில் கற்களால் பதிக்கப்பட்ட அழகிய நீண்ட வழிகள் 14ம் நூற்றாண்டிலேயே ஒரு நகரம் எப்படித் திட்டமிட்டு அமைக்கப்பட்டிருந்தது என்பதை நினைத்து வியக்க வைக்கிறது.



சில பகுதிகளில் மக்கள் இப்போதும் வாழ்கிறார்கள். சில வீதிகளில் ஆங்காங்கே குடியிருப்புக்களுக்கான சிறிய கடைகள் இயங்குகின்றன. இதற்குள் மோட்டார் வாகனங்கள் பாவிப்பதற்கான வழிகள் குறைவாக இருப்பதால் ஸ்கூட்டர்களையே பல வீட்டு வாசல்களில் காண முடிகிறது.

கால்கள் களைத்துப் போய்விட்டதால் அங்கேயிருந்த சிற்றுண்டிக்கடையொன்றில் கிரேக்கர்களின் பிரபல சிற்றுண்டியொன்றை சுவைக்க முடிவுசெய்தோம். யூர்ட்டிமெமெலி [Yiaourtimemeli] என்றழைக்கப்படும் அது கட்டித்தயிர், கெட்டியான தேன், கறுவாத்தூள், வனிலாத்தூள் மற்றும் வாதுமைப் பருப்புக்களைக் கொண்டிருந்தது.


மிகவும் ஆரோக்கியமானதும் உற்சாகத்தை ஊட்டக்கூடியதுமான இந்தப் பண்டத்தை கிரேக்கர்கள் நாளின் எந்தச் சமயத்திலும் சாப்பிடுகிறார்கள்.

அங்கே போடப்பட்டிருந்த சிறிய கதிரைகளில் ஆறுதலாக இருந்து அதை சுவைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருக்க மாலை மெதுவாக தனது இரவுத்திரையை எங்களைச் சுற்றி போட்டுக் கொண்டிருந்தது.

தொடரும்...

# மன8மே நலமா?

## உங்கள் சந்தேகங்களை கேளுங்கள்






குரு.நக்கீரன்
உளவள ஆலோசகர்


**ஆண் (வயது 29)**
**வட்டுக்கோட்டை**

***கேள்வி: பல வருடங்களாக எனக்கு நீலப் படம் பார்க்கும் பழக்கம் உள்ளது. நான் கணினி துறையில் பணியாற்றுகின்றேன். அதனால் பல வாய்ப்புக் கிடைக்கின்றது. நீலப்படம் பார்த்த பின் சுயஇன்பம் அடைவது வழக்கம். எனக்கு திருமணம் செய்யும் ஆர்வமும் குறைந்து கொண்டு செல்கின்றது. நீலப்படம் பார்ப்பது தான் பிரச்சினையா? நீலப்படம் பாரப்பதை நிறுத்த வேண்டும் என நினைக்கின்றேன். ஆனால் முடியவில்லை என்ன செய்யலாம்?***

**பதில் :** அன்புத் தம்பி! உமது கேள்வியைப் பார்க்கும் போது சிரிப்பதா அழுவதா என்று தெரியவில்லை. உண்மையில் இது உமது ஒருவரின் பிரச்சினை அல்ல. உலகம் முழுவதும் பரந்த வாழும் மனிதர்களின் பிரச்சினை. அண்மையில் நான் கிறிஸ்தவ சபையின் மதப் பிரச்சாரப் புத்தகமொன்றில் ஒரு கட்டுரை வாசித்தேன். அதில் இத்தாலியைச் சேர்ந்த 28 வயதுள்ள பெண்மணி எழுதுகிறார். தான் வலைப்பின்னலில் ஆபாசப் படங்களைப் பார்த்துப் பழகி அடிமை நிலைக்குச் சென்றுவிட்டதாகவும், இப் பழக்கத்தில் இருந்து வெளியேற முடியாமல் தவித்ததாகவும் இறுதியில் அந்த கிறிஸ்தவ சபை பிரசங்க ஊழியர் ஒருவரின் போதனையின் விளைவால் கர்த்தார் தன்னைக் காத்தார் என.

உண்மையில் மனித வாழக்கையைச் சீர்குலைப்பதில் இன்று தகவற் தொடர் சாதனங்களின் பங்களிப்பு மிக முக்கிய பங்காற்றுகின்றது. ஆக்கத்திற்;கும் வளர்ச்சிக்கும் பயன்படக் கூடிய புதிய உலகில் தகவற் தொடர்பு சாதனங்களின் பாதிப்பு எதிர்மறையானதாகவே உள்ளது. உண்மையில் நான் ஒவ்வொருவரையும் பார்த்துக் கேட்கின்றேன், நவீன தகவற் தொடர்பு சாதனங்களின் பாவனையால் பெறக்கூடிய நன்மைகளையும் தீமைகளையும் பட்டியல் இடுங்கள். எத்தனை பேருக்கு நன்மையே அதிகம் தருவதாகக் கூறப் போகிறீர்கள். என்னால் கூற முடியும் 85 சதவீதத்துக்கு மேற்பட்டோருக்கு நன்மைகளை விட தீமைகளையே அதிகம் பயக்கின்றது. இருந்தாலும் நவீனத்துவ வாழ்வில் இவைகளை எம்மால் கைவிட முடியாமல் உள்ளோம். அடிமை நிலையில் உள்ளோம்.

உங்களின் நிலைப்பாடும் இதுவே. இளமை வயதில் பலான படங்கள் பார்ப்பது, ஆபாசப் படங்களைப் பார்ப்பது இன்று நேற்று வந்ததில்லை. ஆனால் என்ன, முந்தைய காலத்தில் இப்படியான ஒரு புத்தகமோ, படமோ பெறுவது என்பது மிகக் கடினமான ஒரு விடயம் அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று இவற்றின் பழக்கம் மிக மிகக் குறைவு. இரண்டாவது இவற்றைப் பரிமாறுதலோ, கொண்டு செல்லுதலோ மிகச் சிரமமான விடயம். ஆனால் இன்று, இவ்விரண்டும் முற்றிலும் எதிர்மறையாக உள்ளது. ஒவ்வொருவரின் கையோடும், பையோடும் இவை உள்ளன. எங்கும் எப்போதும் யாரும் பார்க்கவும் பரிமாறக் கூடிய அளவுக்க வலைப்பின்னலில் கொட்டி விடப்பட்டுள்ளன.

சரி உமது விடயத்தில் என்னால் கூறக் கூடியது என்னவென்றால், இப்படியான விடயங்கள் பொதுவாகத் தொட்டால், எம்மை விடாது தொடரும். எனவே நீர்தான் விட்டுவிட முயற்சிக்க வேண்டும். இவ் வகையான செயற்கைத் தயாரிப்புப் படங்களைப் பார்த்து சில வேளைகளில் நிஜமான வாழ்வியலுக்கு ஒத்துவர முடியாமல் அவதிப்படுவோரும் உண்டு. எனவே நீர் முதலில் செய்ய வேண்டியது உம்மிடம் உள்ள ஸ்மார்ட் போனை யாருக்காவது விற்றுவிடும். ஒரு சாதரண Nokia போனை குறிப்பிட்ட காலம் வரை பாவியும். தேவையற்று சமூக வலைத்தளங்களில் நேரத்தை செலவிட வேண்டாம். ஊர் வீட்டுக் குப்பை எல்லாவற்றையும் உமது வீட்டில் கொட்ட ஆசையா? என்ன? கணினிக்கும், ஸ்மார்ட் போனுக்கும் password போட்டிருப்பின் அதை முதலில் கொஞ்ச காலம் அழித்துவிடும். கூடிய அளவு தனமையில் கணினியில் வேலை செய்யாமல் நாலு பேருடன் கூட இருந்து வெளிப்படையாக வேலை செய்யும் வகையில் கணினி மேசைகளை இடமாற்றும். இதை எல்லாவற்றையும் விட முக்கியமானது. ஒவ்வொரு தடவையும் ஆபாசப் பட தளத்தை திறக்க மனம் தீண்டும் பொழுது, இதைப் பார்க்கமால் என்னால் இருக்க முடியும் என்று வாய்விட்டுச் சொல்லிக் கொள்ளவும்.

உண்மையான ஆரம்பம் பாதி வெற்றி என்று ஒரு பழமொழி உண்டு. எனவே இதில் இருந்து வெளியேற்றும். எந்தக் கவலையும் வேண்டாம். எது எப்படியாயினும் ஆளுமை உள்ள ஒருவனால் எத்தகைய பிரச்சினைகளையும் கையாள முடியும். எனவே நீங்கள் உடனடியாக திருமண பந்ததிற்கு நுழையுங்கள். சம்சார சாகரத்தினுள் இதையெல்லீம் மறந்து விடுவீர்கள்.

**பெண் (வயது 25)**
**தொண்டமானாறு**

***கேள்வி: நான் பல்கலைக் கழகத்தில் கற்கின்றேன். நான் ஒருவரைக் காதலிக்கின்றேன். நான் ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்தவள். சாதி விடயங்களை கடக்க வேண்டுமென நான் விரும்புகின்றேன். அவரும் அப்படித்தான். அவரது சாதி விஷயம் எனக்கு பொருட்டான விஷயமல்ல. ஆனால், இப்பொழுது ஒரு சிக்கல். விரைவில் இருவரும் திருமணம் செய்யவுள்ளோம். திருமணத்தின் பின் உறவுகளின் பார்வை எப்படியிருக்கும் என்பது என் பயமாக உள்ளது. கணவரின் வீட்டில் இத் திருமணத்தில் விருப்பம் இல்லை. ஒரு வேளை சமூகமும் நம்மை ஒதுக்குமோ? எனக் குழப்பமாக உள்ளது. எப்படி இதைக் கையாளலாம்?***

**பதில் :** அன்புச் சகோதரியே! இந்த வருடத் தொடக்கத்திலும் இதே போன்ற பிரச்சினையுடன் வந்த மடலுக்கு பதில் கொடுத்து இருக்கின்றேன். நீங்கள் வாசித்தீர்களோ தெரியாது. இருந்தாலும் உங்களுக்கு சில விடயங்களில் தெளிவு படுத்தவதற்காக சிலவற்றைக் குறிப்பிடுகின்றேன்.


மகளே! உண்மைக் காதலுக்கு கண் இல்லை என்பது உமக்குத் தெரியாதா? என்னைப் பொறுத்தவரை உண்மைக் காதலுக்கு இரு மனங்களின் தேடல்கள் மற்றும் அது தொடர்பான எதிர்பார்ப்புக்களுடன் கூடிய ஏக்கம். இவையிரண்டையும் விட வேறு எதனையும் சிந்திக்கவோ, திட்டமிடவோ தெரியாது. ஆனால் சமூகப் பிராணியான மனிதன் சமூகவியலைக் கருத்தில் கொள்ள வேண்டிய கடப்பாட்டிலும் உள்ளாள் என்பதும் மறுப்பதற்கல்ல. உண்மையான இருமனங்களின் தேடல்களின் சங்கமமான காதலின் முன் ஏனையவை எல்லாம் சிறு விடயமே. சரியாகத் திட்டமிடப்படின் நீங்கள் எதிர்கொள்ள வேண்டிய பிரச்சினைகளுக்கு முற் கூட்டியே தயார் நிலையில் இருப்பீர்கள் இது இப் பிரச்சினைகளை எதிர் கொள்வதற்கு உங்களுக்கு உதவியாக இருப்பதுடன், கையாள்வதும் இலகுவாக இருக்கும்.

உதாரணமாக வெவ்வேறு சாதியைச் சேர்ந்த இருவர் சாதியம் எனும் விடயத்தில் மிகவும் நுணுக்கமாக உள்ள ஒரு சமூதாயத்தில் திருமண பந்தத்தில் இணையும் போது அவர்களை சமூகவியல் விடயங்களில் ஒதுக்குவதிலும் புறந்தள்ளுவதிலும் சற்றுக் கரிசணையாக இருப்பார்கள். எனவே அப்படியான இடங்களை இனம்கண்டு முற்கூட்டியே தவிர்த்தல் நல்லது. அதேபோல ஆண்டுக்கணக்கான முரண்பாடுகளை வளர்த்துக் கொண்டே இருப்பார்கள். இன்னும் சிலர் சில உரிமைகளையும், கடமைகளையும் தட்டிக் கழிப்பார்கள். அதாவது உங்களுக்குரிய உரிமை, கடமைகளை பறிப்பதில் கவனமாக இருப்பார்கள். இவை அனைத்துக்கும் அவர்கள் சொல்லும் காரணம் சாதிவிட்டு சாதி சென்று திருமணம் முடித்ததால், குடும்பமானம், கௌரவம் இழந்துவிட்டது என்பதே. மற்றப்படி தனிப்பட்ட தன்மானம் சார் பிரச்சினைகள் கூட இருக்கலாம்.

எது எப்படியாக இருந்தாலும், சமூக இயக்கத்திற்கு இன்றியமையாத இரு விடயங்கள் உண்டு. ஒன்று அந்தஸ்து. இரண்டாவது பொருளாதாரம். ஒருமனிதன் எப்படிப்பட்டவனாக இருந்தாலும் சமூக அந்தஸ்தை உயர் நிலையில் பேணும் வகையில், அவனை சமூகம் ஏற்றுக் கொள்ளும். சமூக அந்தஸ்தை அடைய ஒன்றில் கல்வி கேள்விகளால் ஆன உயர் பதவி, பட்டம் போன்றவை, அல்லது சிறந்த பொருளாதார உன்னத நிலை. இன்னும் சொன்னால் கல்வியுடன் கூடிய சமூக அந்தஸ்தும், நிறைந்த பொருளாதார வலுவும் இருக்கும் ஒருவனை எப்போதும் சமூகம் இழக்க விரும்புவதில்லை. மாறாக உறவாடி மகிழ்வதிலிலே பெருமைபட்டுக் கொள்ளவே தயாராக இருப்பார்கள்.

எனவே பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் உங்களுக்கு நான் கூறக் கூடியது, இளவயது துடிப்பான பருவம், கற்கவும் சுறுசுறுப்புடன் உழைக்கவும் சமூக உயர் நிலையை நோக்காக் கொண்டு முயற்ச்சிக்க உங்களால் முடியும். காதல், திருமணம் ஒரு புறம் இருக்கட்டும். இன்னொரு புறம் வாழ்வில் உயர் இலக்கினை அடையும் நோக்கோடு முயற்சியுங்கள். காதலில் வேகமும், வாழ்வின் தேடலும் உங்கள் எதிர்கால சமூதாய உயர்வுக்கானதாக ஆக்கிக் கொள்ளுங்கள்.

ஆனால் உண்மையான இலட்சியம் இல்லாதகீழ்தரமான தேடல்களை மட்டுமே கொண்ட காதல்களால் நான் சொன்ன நிலையை எட்டிக் கூடப் பார்க்க முடியாது. அவர்கள் சாதிய சுழிக்குள் சிக்குப்பட்டு சமூதாய சந்தையிலேயே கேள்விப் பொருளாகவே கணிக்கப்படுவார்கள். உண்மையான மனித மாண்புடன் கூடிய காதல் வாழ வேண்டும் எனின் காதலுக்கு எப்போதும் உறுதுணையான தோழனே சோதனையுடன் கூடிய சாதனை தான். ஒரு கவலையும் வேண்டாம். உங்கள் காதல் உண்மை எனின் இருவரும் சோதனைகளை சேர்ந்து தாண்டி சாதனை படைப்பீர்கள் என்ற நம்பிக்கை இருக்குமெனின் வாயுள்ள வரைக்கும் கதைத்துக் கொண்டே இருக்கும். சமூகத்தின் முன் சாதித்து வாழ்ந்து காட்டுங்கள். வெற்றி உங்களுக்கே.



# செங்கமலக்கண்ணன் எங்கே?






காரில் சென்றுகொண்டிருந்த ராம்சேகர், சாலையோரம் ஒரு சிறுவன் வலிப்பால் துடிப்பதைப் பார்த்து வண்டியை ஓரமாக நிறுத்திவிட்டு அவனை நோக்கிச் சென்றார்.

தன் காரிலிருந்து ஒரு விரிப்பை எடுத்து நடைபாதையில் போட்டு அதன் மீது அந்தப் பையனைப் படுக்கவைத்தார். சுற்றி இருப்பவர்களை நகரச் சொல்லி அவனுக்குப் போதிய காற்று கிடைக்கும்படி செய்தார்.

மனிதாபிமானமிக்க ஒருவர், "நான் போய் சோடாவோ டீயோ வாங்கி வரவா?" என்று கேட்க, வேண்டாம் என்று மறுத்தார் ராம்சேகர். கை, கால்கள் வெட்டி இழுக்கும் நேரத்தில் எந்த உணவுப் பொருளையும் கொடுக்கக் கூடாது என்று அவருக்குத் தெரியும். ஒருவர் தன் வீட்டுச் சாவிக் கொத்தை அந்தச் சிறுவன் கையில் திணித்தார். மருத்துவம் ஏற்றுக்கொள்ளாத விஷயம். என்றாலும் அவர் மனதைப் புண்படுத்த வேண்டாம் என்று அதற்கு ராம்சேகர் மறுப்புக் கூறவில்லை.

கொஞ்சம் கொஞ்சமாகச் சமநிலையை அடைந்தான் அந்தச் சிறுவன்.

"தம்பி, உன் வீடு எங்கே இருக்கு, உங்க அப்பா, அம்மா எங்கே இருக்காங்க?".

இத்தனை கேள்விகளுக்கும் அந்தச் சிறுவன் ஒரே கோணத்தில்தான் பதிலளித்தான். தன் அப்பாவைப் பற்றி அவன் சொன்ன விவரங்கள், அப்பாவின் மீது அவனுக்கு உள்ள அதிகமான பாசத்தை வெளிப்படுத்தியது.

"எங்க அப்பா பேரு செங்கமலக் கண்ணன். பக்கத்திலே சாவகச்சேரியில தான் வேலை செய்யறாரு. அப்பானா எனக்கு ரொம்ப இஷ்டம். பளிச்சினு உடை உடுத்திக்குவாரு. பைக்லதான் வேலை பாக்கற இடத்துக்குப் போவாரு. இன்னக்கி கறுப்பு ஜீன்ஸ், கறுப்பு ஷூ போட்டிருந்தாரு. எங்கப்பாவோட மீசை எனக்கு ரொம்பப் பிடிக்கும். காலையிலே வரும்போதெல்லாம் முந்திரி பிஸ்கெட், வாழைப்பழம்னு எனக்குப் பிடிச்ச விஷயங்களை வாங்கிட்டு வருவாரு. அவர் தலையிலே இருக்கும் நரைமுடி கூட அவருக்கு அழகாக இருக்கும். ஒரு வருஷத்துக்கு முன்னாலேதான் அவர் மூக்குக் கண்ணாடி போடத் தொடங்கினாரு. பட்மிண்டன் நல்லா விளையாடுவாரு. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நானும் அவரும்...".

பேசிக் கொண்டிருந்தபோதே அந்தச் சிறுவன் மிகவும் பலவீனமானான். மயக்கமடைந்தான்.

ராம்சேகர் அவனது நாடியைப் பிடித்துப் பார்த்தார். கண்ணின் கீழுள்ள தசையைச் சிறப்புறமாக இழுத்துப் பார்த்தார். கவலைப்பட எதுவுமில்லை. என்றாலும், அருகிலுள்ள மருத்துவமனையில் அவனுக்கு சிகிச்சை அளிக்கலாம் என்று முடிவெடுக்கும்போது கூட்டத்திலிருந்த நான்கு பேர் அடுத்தடுத்து சில தகவல்களைப் பகிர்ந்துகொண்டார்கள்.

"சேர், எனக்குத் தெரிஞ்ச செங்கமலக் கண்ணன்ற பேர்ல சாவகச்சேரியில இருக்கிற பேக்கரியில் ஒருத்தர் வேலை செய்யறாரு. இன்னிக்கு அவரைப் பார்த்தேன். கறுப்பு ஜீன்கும் நீல நிறச்சட்டையும் போட்டிருந்தாரு. ஆனால், அவர் ஷூ அணிந்திருந்தாரா, செருப்பான்னு எனக்குச் சரியா தெரியல" என்றார் ஒருவர்.

"எனக்குக்கூடச் செங்கமலக் கண்ணன்னு ஒருத்தரைத் தெரியும். அவர் இங்கிருக்கும் விசா ஆபீஸிலே வேலை செய்யறாரு. விசாவுக்கு விண்ணப்பிக்கும் மக்களை ஒழுங்குபடுத்தி அனுப்புவதுதான் அவர் வேலை. அவருக்குப் பெரிய மீசை உண்டு" என்றார் இன்னொருவர்.

மூன்றாவதாக மற்றொருவரும் தனக்கு செங்கமலக்கண்ணன் என்று ஒருவரைத் தெரியும் என்றார். "சாவகச்சேரியிலுள்ள நூலகத்தில் நூலகராகப் பணிபுரிகிறார்" என்றவர், "அவர் தலையில் கொஞ்சம் நரை உண்டு" என்ற கூடுதல் தகவலையும் அளித்தார்.

செங்கமலக்கண்ணன் என்ற ஒருவரை தனக்கும் தெரியும் என்றார் நான்காமவர். "சாவகச்சேரியிலுள்ள நாவிதர் ஒன்றில் பணியாற்றுகிறார் அவர்" என்றார். மூக்குக் கண்ணாடி அணிந்தவர் அவர் என்றும் குறிப்பிட்டார்.

சோதனையாக நான்கு பேருக்குமே தாங்கள் குறிப்பிட்ட செங்கமலக் கண்ணனின் குடும்பத்தைப் பற்றிய எந்த விவரமும் தெரியவில்லை.

நான்கு பேர் கூறிய தகவல்களையும் கேட்ட ராம்சேகர், அந்த நான்கு செங்கமலக்கண்ணன்களில் யார் இந்தச் சிறுவனின் அப்பாவாக இருக்க முடியும் என்பதை ஊகித்தார். அந்த இடத்துக்கு ஓர் ஆளை அனுப்பினார். அவர் ஊகம் சரிதான் என்பது உறுதியானது.

விவரங்கள் அளித்த நான்கு பேரில் யார் கூறியதை வைத்துக்கொண்டு ராம்சேகரால் இந்த ஊகத்தைச் செய்ய முடிந்தது? அந்த நால்வரில் சிறுவனுடைய அப்பா யார்?

(துப்பறியலாம்)

## சென்ற வார விடை

காய்கறிகள் வரையப்பட்டிருந்த அந்தத் தாளைக் கொண்டு ராம்சேகர் கண்டுபிடித்தது என்ன?

பாகற்காய், உருளைக் கிழங்கு, பரங்கிக்காய், பூசணி, அவரைக்காய் ஆகியவற்றின் படங்கள் வரையப்பட்டிருக்கின்றன. இந்தப் பெயர்களில் இரண்டாவது எழுத்தை மட்டும் எடுத்துக்கொண்டால் க, ரு, ர, ச, வ. ஐவர் அணி என்று அழைக்கப்படும் ஐவரின் பெயர்களும் இந்த எழுத்துகளில்தான் தொடங்குகின்றன. அதாவது கந்தசாமி, ருக்மணி, ரங்கநாதன், சண்முகராஜன், வடிவேலு.

ஒவ்வொரு காய்க்கும் முன்பாக ஓர் எண் இருக்கிறது. அந்த எண்கள் தொடர்ச்சியாக இல்லை. 1, 2, 4, 5, 3 என்று காணப்படுகின்றன. ஐவர் அணியில் உள்ளவர்களின் பெயர்கள்தான் காய்கறிகளின் உருவத்தில் குறிக்கப்பட்டுள்ளன என்பதை ராம்சேகரால் ஊகிக்க முடிகிறது. அந்தந்தக் காய்கறிக்கு எதிரேகாணப்படும் எண் (கோடிகளில்) ஒவ்வொருவருக்கும் எதற்காகவோ பகிரப்பட்ட கறுப்புப் பணமாக இருக்க வாய்ப்பு உண்டு என்றும் ஊகிக்கிறார் ராம்சேகர்.

# கிளிநொச்சி வேட்பாளர் பட்டியலில் தலைமைக்கு உடன்பாடில்லை?





கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி மன்ற வேட்பாளர் பட்டியலில் இருந்து, ரெலோ, புளொட் கட்சிகளின் வேட்பாளர்கள் நீக்கப்பட்டது சிறிதரன் எம்பியின் தன்னிச்சையான முடிவின் அடிப்படையிலேயே என தெரிகிறது. கூட்டமைப்பின் தலைவர்கள் எடுத்த முடிவை செயற்படுத்துவதே இரண்டாம் நிலைவர்களின் பணி, அதை குழப்புவதல்ல என தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசா அறிவித்த நிலையிலும் சிறிதரன் தன்னிச்சையாக அந்த முடிவை எடுத்திருக்கிறார்.

வேட்புமனு தாக்கல் செய்வதற்கு முன்னரே பங்காளி கட்சிகளிற்குரிய ஆசனங்களை வழங்க முடியாதென சிறிதரன் எம்.பி விடாப்பிடியாக நின்றார். எனினும், பங்காளிக்கட்சிகள் தொடர்ந்து பேச்சு நடத்தி வந்த நிலையில், யாருடனும் கலந்தாலோசிக்காமல் திடீரென கிளிநொச்சியில் வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது தமிழரசுக்கட்சி தலைமைக்கும் அதிர்ச்சியையும், அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 20ம் திகதி பங்காளி கட்சிகளின் தலைவர்களை தொடர்புகொண்ட தமிழரசுக்கட்சியின் உயர்பீடம், கிளிநொச்சியில் தன்னிச்சையாக வேட்பாளர் தெரிவு நடந்துள்ளதாக விளக்கமளித்துள்ளது.

இது தொடர்பாக பங்காளி கட்சிகளின் தலைவர்களை தொடர்பு கொண்டு கேட்டபோது, தமிழரசுக்கட்சியின் தலைமைக்குதெரியாமல் இரண்டாம்நிலை தலைவர்கள்தான் குழப்பமான வேலையில் ஈடுபட்டுள்ளனர். இது கூட்டமைப்பின் ஒற்றுமைக்கு உடனடியாக பாதிப்பை ஏற்படுத்துமென சொல்ல முடியாது. ஆனால், கட்சியின் உறுப்பினர்களை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டியது தமிழரசுக்கட்சியின் கடமை. உறுப்பினர்கள் தன்னிச்சையாக நடந்து விட்டனர் என தொடர்ந்து காரணம் கூற முடியாது என தெரிவித்தனர்.

# மட்டக்களப்பில் கொல்லப்பட்ட புலிகளின் புலனாய்வுத்துறை முக்கியஸ்தர்!

## இராணுவத்தின் தலையில் விழுந்த கொலையை செய்தது யார்?

பீஷ்மர்

விடுதலைப்புலிகளின் முக்கி தளபதி சோவின் தற்கொலை பற்றிய சில தகவல்களை மேலோட்டமாக கடந்த இதழில் குறிப்பிட்டிருந்தேன். பால்ராஜின் கட்டளையை ஏற்காத ஜெயந்தன் படையணி தளபதியொருவரை பற்றி குறிப்பிட்டு, அவரை ஏன் புலிகள் விட்டுப் பிடித்தார்கள் என்பதற்கான காரணங் களை குறிப்பிடும்போது மட்டக்களப்பு மகளிர் படையணி தளபதி நிலாவினி, சோ பற்றிய கிளைச் சம்பவங்கள் விரிந்து வந்துள்ளன. இரண்டு கிளைச்சம்பவத்தையும் குறிப்பிட்டு விட்டு, இந்த அத்தியாயத்திலேயே பிரதான விசயத்துக்குள் நுழைந்து விடுவேன்.

குட்டிசிறி மோட்டார் படையணி தளபதியாக இருந்த சோ விற்கும், அந்த படையணியின் மகளிர் அணியின் பொறுப்பாக இருந்த பெண் தளபதி யொருவருக்கும் காதல் இருந்தது. சில வருடங்களாக அந்த காதல் இருந்தது. ஆனால் அவர் அதை இயக்கத்தில் பதிவு செய்யவில்லை. இருவரும் பெரியவர்கள், பொறுப்பான பதவியில் இருந்தவர்கள். அதனால் அது நாகரிகமான காதலாக இருந்தது. திருமணம் செய்யும்படி இயக்கம் சொல்லும்போது இருவரும் திருமணம் செய்துகொள்ளலாம் என்ற, இருவருக்கிடையிலான உடன்படிக் கையாக அது இருந்தது. எப்பொழுதாவது இருவரும் சந்தித்து பேசிக்கொள்வார்கள். அவ்வளவுதான்.

விடுதலைப்புலிகள் அமைப்பில் இணை யும் ஒவ்வொருவரையும் பற்றிய தனிப்பட்ட விபரங்கள் பதிவு செய்யப்படும். அதில் ஒரு முக்கியமான கேள்வி நீங்கள் யாரையாவது காதலித்திருக்கிறீர்களா? என்பது. பின்னர் வருடாந்தம் இந்த பதிவு புதுப்பிக்கப்படும். அமைப்பில் இணைந்த பின்னர் காதலில் சிக்கினால் அடுத்த வருட பதிவில் பதிவுசெய்யலாம். சோ இதை செய்யவில்லை.

அவரது காதல் விசயம் எப்படியோ வெளியில் கசிந்து விட்டது. இது அவர்களிற்கு பெரிய அசௌகரியமாக இருந்திருக்க வேண்டும். ஒரே பிரிவில் இருப்பவர்கள், இரகசியமாக காதலித்த விசயம் வெளியில் வந்ததை அவர்கள் ஏன் அவ்வளவு சீரியசான பிரச்சனையாக எடுத்துக் கொண்டார்கள் என்பது தெரியவில்லை.

இந்த விசயம் வெளியில் கசிந்ததை தொடர்ந்து, மாலதி படையணி தளபதி விதுசா, சோவின் காதலியை அழைத்து சில அறிவுரைகள் சொன்னதாகவும் அப்போது ஒரு பேச்சிருந்தது. சோவின் காதலி மாலதி படையணி நிர்வாகத்திற்கு கீழ்ப்பட்டவர் அல்ல. ஆனால் பொதுவாக மகளிர் படையணி போராளிகள், தளபதி விதுசாவில் பெரிய மரியாதை வைத்திருந்தனர். அவர் என்ன சொன் னாலும் கேட்பார்கள். இந்த அடிப்படையில் சோவின் காதலியை விதுசா அழைத்து பேசியிருக்கலாம். ஆனால் சோவின் காதலியை விதுசா அழைத்து பேசிய விசயம் போராளிகள் மட்டத்தில் வெறும் பேச்சளவில்தான் இருந்ததே தவிர, உறுதிப்படுத்தப்படவில்லை.

காதல் விசயம் வெளியில் வந்தது அவமானம் என நினைத்து அவர்கள் தற்கொலை செய்துகொண்ட படியால் புலிகளும் இந்த சம்பவம் பற்றி அவ்வளவாக விசாரணை செய்யவில்லை.

அம்பகாமத்தில் இருந்த சிறிய அம்மன் ஆலயமொன்றிற்கு சென்ற இருவரும் தற்கொலை செய்யும் முடிவை எடுத்துள்ளனர். அந்த சம்பவத்தை நேரில் கண்ட சாட்சி யாருமே இல்லை. ஒரு கைக்குண்டு வெடித்த சத்தம் கேட்டு போராளிகள் அந்த இடத்திற்கு சென்று பார்த்தபோது, இருவரும் கட்டிய ணைத்தபடி குண்டை வெடிக்க வைத்து தற்கொலை செய்துகொண்டிருந்தனர்.

இந்த சம்பவம் பிரபாகரனின் காதிற்கு சென்றதும் மிகுந்த வருத்தப்பட்டார். காதல் விசயம் வெளியில் கசிந்ததை ஏன் இவ்வளவு சீரியசாக எடுத்துக் கொள்ள வேண்டும்? என்னிடம் சொல்லியிருந்தால் இருவருக்கும் திருமணம் செய்து வைத்திருப்பேனே என்றுதான் கூறினாரே தவிர, சோ மீது கோபப்படவில்லை. வாழ்வில் இணைய முடியாத அந்த காதலர்களின் உடல்களை ஒன்றாக அடக்கம் செய்ய உத்தரவிட்டதும் பிரபாகரன்தான்.

சோவின் சம்பவத்தை ஏன் குறிப்பிட்டேன் என்றால், புலிகளிற்குள் காதல் விசயங்களில் எப்படியான இறுக்கமான நடைமுறை இருந்தது என்பதை குறிப்பிடவே. இப்பொழுது நான் சொல்லப்போகும் விசயம் சிலருக்கு அசௌகரியமாக இருக்கலாம். ஆனால் இதை களத்தில் நின்ற யாருமே மறுக்க மாட்டார்கள்.

நான் மேலோ சொன்ன இதே இறுக்கமான நடைமுறை கிழக்கு படை யணிகளில் அவ்வளவாக இருக்கவில்லை. களமுனையில் தொடர்ச்சியாக நிற்கும் போராளிகளிற்கு அதிகமான கட்டுப்பாடு விதிப்பது அவர்களை சோர்வடைய செய்து, களத்தை விட்டு ஓட வைக்குமென அதன் தளபதிகள் நினைத்தார்கள். இதனால் களமுனையில் சில விசயங்களில் கண்டும்காணாமலும் இருந்து விட்டார்கள்.

அன்பரசி படையணி தளபதி நிலாவினியும் இந்த இயல்புடையவர்தான். அவருக்கும் ஜெயந்தன் படையணி முக்கியஸ்தர்கள் சிலருக்குமிடையில் உடல்ரீதியான தொடர்பிருப்பதாக களமுனையில் பேச்சு எழுந்தது. இது புலிகளின் உயர்மட்டம் வரை சென்றது. இது பிரபாகரனிற்கு தெரியவந்ததும், கோபமடைந்தார். ஜெயசிக்குறு களமுனை தளபதியாகவும், கிழக்கு படையணிகளின் தளபதியாகவும் இருந்த கருணாவை அழைத்து, இந்த சம்பவத்தை குறிப்பிட்டு கண்டித்தார். உடனடியாக நிலாவினியை இயக்கத்தை விட்டு நீக்குமாறும் அறிவுறுத்தினார்.

ஆனால் கருணா அதை செய்யவில்லை. அன்பரசி படையணி பொறுப்பாளராக வேறு ஒருவரை நியமித்துவிட்டு, நிலாவினிக்கு பொறுப்புக்கள் வழங்காமல் விட்டு வைத்திருந்தார். பிரபாகரன் சொன்னது, நிலாவினியை வீட்டுக்கு அனுப்பும்படி. ஆனால், கருணா அதை செய்யாமல், நிலாவினியின் பொறுப் புக்களை மட்டும் எடுத்து புதியவருக்கு வழங்கினார். இந்தவிடயம் பிரபாகரனிற்கும் போனது. அவர் சத்தமில்லாமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

ஓயாத அலைகள் மூன்றின்போது பால்ராஜின் கட்டளையை ஏற்க மறுத்த அக்கினோவை பற்றிய தகவல் புலிகளின் தலைமைக்கு போனபோது, அவர் மீது உடனடியாக எந்த நடவடிக் கையும் எடுப்பதில்லையென தீர்மானித் தார்கள். இன்னொருமுறை தலைமையின் கட்டளையை கருணா மீறும் சூழலை ஏற்படுத்தாமல் இருப்போம், கருணா விடயத்தில் விரைவாக ஒரு முடிவெடுக்க லாம் என்பதே புலிகளின் எண்ணம்.

அக்கினோ விசயத்தை பெரிதுபடுத் தாததைபோல அப்போது புலிகள் நடந்து கொண்டார்கள். ஆனையிறவை வீழ்த்தும் உக்கிர சண்டையும் நடந்துகொண்டிருந்தது. இந்த சூழலில் அக்கினோ என்ற ஒருவரின் சிக்கலை முதன்மைப்படுத்தவில்லை. ஆனால் அக்கினோ விசயம் புலிகளின் "கையாளப்பட வேண்டிய விசயங்கள்" பட்டியலிற்கு போனது. அத்துடன், ஓயாத அலைகள் மூன்றில் அதன் பின்னர் ஜெயந்தன் படையணியை களமிறக்குவதையும் தவிர்த்துக் கொண்டனர். உப படையணியொன்றை போலவே பயன்படுத்தினார்கள்.

புலிகள் படையணிகளிற்குள் பேதம் காட்டுவதில்லை. ஆனால் ஜெயந்தன் படையணி விசயத்தில் இப்படியான முடிவெடுத்ததற்கு காரணமிருக்கிறது. அக்கினோ விசயத்தை தளபதி தீபன் உடனடியாக கருணாவிற்கு அறிவித்தார். ஆனால் கருணா அதை பெரிய விசயமாக எடுத்துக்கொள்ளவில்லை. "அவர்கள் அப்படி நடப்பதில் தவறில்லை" என்பதை போன்ற பதிலொன்றையும் சொல்லி யிருக்கிறார். கிழக்கு இளநிலை தளபதி களின் முறுகலின் பின்னணி என்னவென்பதை புலிகள் சரியாக கணித்ததால், தொடர்ந்து நிலைமைய சிக்கலாக்காமல் விடுவோம் என்றுதான் ஜெயந்தன் படையணியை அவ்வளவாக களமிறக்கவில்லை.

2000 ஆம் ஆண்டில் புலிகளிற்குள் நடந்த இவ்வளவு பெரிய சிக்கலை இதுவரை நீங்கள் அறிந்துகொண்டிருக்க வாய்ப்பில்லை. ஆனால் அப்பொழுது நடந்த சில சம்பவங்களை இப்பொழுது குறிப்பிட்டால், அனைத்தையும் பொருத்திப் பார்த்து நீங்கள் ஒரு முடிவிற்கு வர வாய்ப்பாக அமையும்.

ஓயாத அலைகள் 3 இன் யாழ்ப்பாண முனைக்கான சமரில், கிழக்கு படை யணிகளின் பங்கு மிக குறைவு. வடக்கை சேர்ந்தவர்கள்தான் இந்த சமரில் ஈடுபட்டனர். இந்த சமர் தொடங்க முன்னர் தளபதிகள் மட்டத்திலான கலந்துரையாடலில் பிரபாகரன் சொன்ன விசயம் கவனிக்க வேண்டியது. "யாழ்ப் பாணத்திற்கான சமரை யாழ்ப்பாணத்




தொடர்ச்சி அடுத்தபக்கம்...

தவர்களே செய்யட்டும். கிழக்கு போராளிகளை எல்லா முனைகளிலும் களமிறக்குவது சரியல்ல. அவர்களிற்கு தமது பிரதேசங்களை மீட்க வேண்டிய தேவையும் உள்ளது".

ஆனையிறவை புலிகள் கைப்பற்றியதும், 2000 ஏப்ரல்ஞ் இல் தளபதி பானு ஆனையிறவில் புலிக்கொடியை ஏற்றினார். இன்றும் புலிகளிற்கு எதிரானவர்கள் சொல்வார்கள், தளபதி கருணா ஆனையிறவில் கடுமையாக போராடியும் புலிக்கொடி ஏற்றும் பொறுப்பு யாழ்ப்பாணத்தை சேர்ந்த பானுவிற்கு வழங்கப்பட்டது என. ஆனால் உண்மையில் விசயம் அதுவல்ல. இவர்கள் சிந்திப்பதை போல "அவர் மட்டக்களப்பு, நான் யாழ்ப்பாணம்" என சின்னத்தனமாக புலிகள் சிந்தித்ததில்லை.

அப்படியென்றால் உண்மையில் நடந்தது என்ன?

கருணாவின் படையணிகள் குழப்பம் விளைவிக்க தொடங்க, அதை கருணாவும் கட்டுப்படுத்தாமல் விட்டார். இதை பிரபாகரன் ரசிக்கவில்லை. "கிழக்கு படையணிகள் இல்லாவிட்டால் உங்களால் ஒன்றும் செய்ய முடியாது" என்ற எண்ணத்தில்தான் கருணா தன்னிச்சையாக நடக்கிறார் என்பதை பிரபாகரன் தெரிந்து கொண்டு விட்டார்.

கிழக்கு படையணிகளை யாழ்ப்பாணத்திற்கான சமரில் இறக்காமல் விட பிரபாகரன் முடிவெடுத்ததற்கு இரண்டு காரணமிருந்தது. முதலாவது கிழக்கு போராளிகள் இல்லையென்றால் புலிகளால் எதுவும் செய்ய முடியாதென்ற அபிப்பிராயம் வரக்கூடாது. அப்படியான அபிப்பிராயம் கிழக்கு போராளிகளிடம் ஏற்படுத்தப்பட்டால், பின்னாளில் அமைப்பையே கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியாமல் போய்விடும்.

இரண்டு உண்மையிலேயே கிழக்கு போராளிகள் வடக்கில் அதிகமாக உயிரிழப்பை சந்தித்துவிட்டனர். வடக்கை சேர்ந்தவர்களே யாழ்ப்பாணத்தை மீட்கும் சமரில் ஈடுபடுவதே சரி என்பதாலேயே புலிகள் அந்த முடிவை எடுத்தனர்.

ஆனையிறவில் கொடியேற்றுவதற்கு யார் பொருத்தமானவர்?

கருணாவை ஆனையிறவில்கொடி யேற்ற விடாதது புலிகளின் வடக்கு, கிழக்கு பாகுபாட்டின் காரணமாகவே என இன்று கருணாவின் ஆதரவாளர்கள் சிலர் குறிப்பிடுகிறார்கள். உண்மை அதுவல்ல. கிழக்கு இளநிலை தளபதிகள் வடக்கில் முரண்டு பிடிக்க ஆரம்பிக்க, புதிய மாற்றங்களுடன் உருவாக்கப்பட்ட இராணுவ கட்டமைப்பின்படியே இந்த கொடியேற்றல் நடந்தது. இதன்மூலம், கருணாவிற்கு பிரபாகரன் தெளிவாக செய்தியொன்றையும் சொல்லியிருந்தார்.

யார் இல்லையென்றாலும் என்னால் எதையும் செய்ய முடியும்!

இதுதான் அந்த செய்தி. ஏனெனில் கருணா படித்த பாடசாலையில் ஹெட் மாஸ்ரரே அவர்தானே!

இதன் பின்னர் 2000 ஆம் ஆண்டின் மத்திய பகுதியில் கருணா தலைமையிலான கிழக்கு படையணிகளை மீண்டும் கிழக்கிற்கே அனுப்பினார் பிரபாகரன். முள்ளியவளையில் இருந்த ஜெயந்தன் படையணி முகாமில் கிழக்கு போராளிகளின் பிரிவுபசார நிகழ்வில் பிரபாகரன் கலந்து கொண்டார். அங்கு உரையாற்றிய போது, கடந்த மூன்றரை ஆண்டுகளில் வன்னியில் கிழக்கு போராளிகள் செய்த அர்ப்பணிப்புக்களை நினைவுகூர்ந்து மெச்சினார். புலிகள் அமைப்பு நெருக்கடியான சந்தர்ப்பத்தில் சிக்கியபோது, கிழக்கு போராளிகளே அந்த நெருக்கடியை தகர்த்தார்கள் என புகழாரம் சூட்டினார்.

கிழக்கு போராளிகளில் பிரபாகரனிற்கு எந்த அதிருப்தியும் இருக்கவில்லை. ஆனால் இளநிலை தளபதிகளை தூண்டி விட்டது யார் என்பதில் அவருக்கு சந்தேகம் இருக்கவில்லை.

கிழக்கிற்கு கருணாவை அனுப்பும்போது, அவரது நடவடிக்கைகளில் அதிருப்தியடைந்தவராகத்தான் அனுப்பி வைத்தார். இயக்கத்தின் ஒருங்கிணைந்த தன்மையை கருணாவின் நடவடிக்கைகள் பாதிக்கிறது என்பதை தெரிந்தும், "மட்டக்களப்பிற்கே போஞ் அங்கே எதையாவது செய்து கொள்" என திட்டித்தான் அனுப்பினார்.

கிழக்கிற்கு கருணா வந்த சிறிதுகாலத்தில் 2002 பெப்ரவரியில் அரசுபுலிகள் சமாதான உடன்படிக்கை எட்டப்பட்டு விட்டது. இதன் பின்னர் புலிகளின் நிர்வாக கட்டமைப்புக்கள் கிழக்கிற்கு நகர்த்தப்பட்டன. காவல்துறை, நீதிமன்றம், நிதி கட்டமைப்புக்கள் கிழக்கிற்கு சென்றது கருணாவிற்கு பிடிக்கவில்லை. காரணம், அதுவரை இவை அனைத்தையும் கருணாவே கவனித்து வந்தார். நிர்வாக கட்டமைப்பு உருவாக்கப்பட்டால், தனது பிடி நழுவிவிடும் என அவர் பயந்தார். இதனால் நிர்வாக கட்டமைப்புக்களிற்கு தொடர்ந்து இடையூறுகள் விளைவிக்க ஆரம்பித்தார். இதை கருணா நேரடியாக செய்ததை போல தெரியாது. அவரின் கீழிருந்த தளபதிகள்தான் நிர்வாக இடையூறுகளை நேரடியாக ஏற்படுத்துவார்கள். பின்னர் விசயம் கருணாவிடம் போகும். தனது தளபதிகளிற்கு சார்பாக கருணா முடிவெடுப்பார். இது மிக திட்டமிட்ட முறையில் நடந்து வந்தது.



வன்னியில் காவல்துறை விஸ்தரிக்கப்பட்டபோது, போராளிகளுடன் சிறிய முரண்பாடு ஓரிரண்டு வந்ததுதான். சிவில் குற்றங்களில் சம்பந்தப்பட்ட போராளிகளை காவல்துறையே விசாரிக்கும் என்ற நடைமுறை போராளிகளிற்கு அவ்வளவாக பிடிக்கவில்லை. ஆனால், அது பொதுவான நடைமுறையென்றபோது அவர்கள் இதற்கு இணங்கி சென்றார்கள். பெரிய முரண்பாடுகள் இல்லாமல் வன்னியில் காவல்துறை செயற்பாடு விஸ்தரிக்கப்பட்டது.

ஆனால் கிழக்கில் அதற்கு கருணா முழுமையான தடையாக இருந்தார். இரண்டு மூன்று சந்தர்ப்பங்களில் காவல்துறை உறுப்பினர்களை கருணாவின் போராளிகள் அடைத்து வைத்த சம்பவம் எல்லாம் நடந்துள்ளது.

இதன் உச்சக்கட்டமாக ஒருமுறை துப்பாக்கிச்சூடும் நடந்தது. காவல் துறையினர் தங்கியிருந்த வீட்டின் மீது கருணாவின் அணியினர் கைக்குண்டும் வீசி, துப்பாக்கியாலும் சுட்டனர். காவல்துறையினர் பதில் தாக்குதல் நடத்தாமல் அங்கிருந்து தப்பிச் சென்று விட்டனர். இந்த சம்பவம் பிரபாகரனிற்கு தெரியவந்ததும் கருணாவை கண்டித்தார். சம்பந்தப்பட்டவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படியும் உத்தர விட்டார். ஆனால் அப்படியெதுவும் நடக்கவேயில்லை.

கருணா கிழக்கில் வரி அறவிடும் நடவடிக்கையை மேற்கொண்டு வந்தார். புலிகளின் நிதித்துறை இதில் தலையிட்டபோது, அவர்களிற்கும் இடையூறு விளைவிக்கப்பட்டது. புலிகளின் ஆரம்ப கட்டத்தில் ஒவ்வொரு பிரதேசத்தில் இருந்தவர்களும்வரி அறவிட்டுஇயக்கத்தின் அன்றாட நடவடிக்கையை கவனித்தனர். 1980களின் மத்தியில் யாழ்ப்பாணத்தில் கிட்டு பொறுப்பாக இருந்தபோது, அவர் வர்த்தகர்களிடம் வரி அறவிட்டார். அதே சமயத்தில் வன்னி பொறுப்பாளராக இருந்த மாத்தையா, கிளிநொச்சியில் வரி அறவிட்டார். ஏ9 பிரதான வீதியால் செல்லும் லொறிகளும் வரி செலுத்தின. யாழ்ப்பாணத்தில் கிட்டுவிடமும், கிளிநொச்சியில் மாத்தையாவிடமும் வரி செலுத்த வேண்டிய நிலைமையும் வந்தது. பின்னாளில் வடக்கில் வரி அறவிடுவது ஒரே அலகான பின்னர், இந்த சிக்கல் எழவில்லை. வடக்கில் வரி ஒரு ஒழுங்குமுறைக்குள் கொண்டு வரப்பட்டபோதும், கிழக்கில் கருணா வரி அறவிட அனுமதிக்கப்பட்டிருந்தார்.

2002 சமாதான உடன்படிக்கையின் பின் புலிகளின் வரி விவகாரம் முக்கிய விசயமாக அரசாங்கத்தால் பேசப்பட தொடங்க, வரி அறவிடுவதை நிறுத்தும்படி கருணாவிற்கு உத்தரவிடப்பட்டது. கிழக்கு போராளிகளிற்கு தேவையான பணம் வன்னியிலிருந்து அனுப்பப்பட்டது. ஆனால் கருணா வரி அறவிடுவதை நிறுத்தவில்லை.

புலிகளின் புலனாய்வுத்துறையையும் கருணாவிற்கு பிடிக்கவில்லை. மட்டக்களப்பு நிலவரத்தை உடனுக்குடன் பிரபாகரனிற்கு அறிவித்து கொண்டிருந்தது கருணாவிற்கு பிடிக்கவில்லை.

புலிகளை விட்டு கருணா பிரிந்த சமயத்தில், கருணா ஒரு பேட்டி வழங்கியிருந்தார். புலிகள் இயக்கத்தில் மீண்டும் இணைவதென்றால், காவல்துறை பொறுப்பாளர் நடேசன், புலனாய்வுத்துறை பொறுப்பாளர் பொட்டம்மான், நிதித்துறை பொறுப்பாளர் தமிழேந்தி ஆகிய மூவரையும் இயக்கத்தை விட்டு நீக்க வேண்டுமென கூறியிருந்ததையும் கவனியுங்கள். இப்பொழுது கருணா பிளவின் அடிப்படை உண்மையை புரிந்துகொள்ளலாம்.

இதுகூட பரவாயில்லை.வன்னியிலிருந்து மட்டக்களப்பிற்கு கருணா தலைமையில் கிழக்கு படையணிகள் வந்த பின்னர் நடந்த கொலையொன்றுதான் பயங்கர அதிர்ச்சியை ஏற்படுத்தும் சம்பவமாக அமைந்தது. இந்த கொலை 2001 நடந்தது. சமாதான உடன்படிக்கை ஏற்படக்கூட இல்லை. கருணா புலிகளின் கிழக்கு பிராந்திய தளபதியாக இருந்த சமயம். அப்போது, புலிகளின் புலனாய்வுத்துறை முக்கியஸ்தர் ஒருவரை கருணாவின் கீழ் இருந்த புலனாய்வு அணி கொலை செய்துவிட்டு, இராணுவம் செய்ததாக காட்ட முயன்றார்கள். ஆனால் புலிகளிற்கு அந்த சம்பவம் பற்றிய முழு விபரமும் போய்விட்டது.

கொல்லப்பட்ட புலனாய்வுத்துறை முக்கியஸ்தர் யார்? எப்படி கொல்லப்பட்டார்? புலிகளின் பதில் நடவடிக்கை என்னவென்பதை அடுத்த வாரம் குறிப்பிடுகிறேன். **(தொடரும்)**



"மன்னர் இளவரசரை ஏன் இன்ஜினீயரிங் படிக்க வைக்க விரும்புறார்?"

"ஹைடெக்கா பதுங்கு குழி கட்டணுமாம்!"



"அண்டை நாட்டு அரசன் என்ன சொல்கிறான் அமைச்சரே?"

"அவரோட ஸ்டேட்டஸுக்கு மாதம் ஐம்பதாயிரம் லைக்ஸை, நீங்க கப்பமா இடணுமாம் மன்னா!"




"மாப்பிள்ளை போஸ்ட்மேன்னு சொல்லி ஏமாத்திட்டாங்க..."

"ஏன் என்னாச்சு...?"

"எந்நேரமும் வெட்டியா... ஃபேஸ்புக்ல போஸ்ட் போட்டுட்டு இருப்பாராம்..."
















# டேபிள் மனர்ஸ் தெரிந்து கொள்வோமா?

பொதுவாக விருந்துகளுக்குச் செல்லும்போது பலருக்கு இருக்கும் ஒரு பிரச்னை, ஸ்பூன் மற்றும் ஃபோர்கில் உணவுகளை எவ்வாறு சாப்பிடுவது? அவைகளை எப்படிக் கையாள்வது? என்கிற

பலவிதமான சந்தேகங்களுக்கு விடை அளிப்பதோடு, 'டேபிள்ஸ் மனர்ஸ்' பற்றியும் இந்த பகுதியில் குறிப்பிடுகிறோம்.

நம்மை விட வயதில் மூத்தவர்கள் அமரும்வரை நாம் நாற்காலியின் பின் காத்திருந்து பிறகு அமரவேண்டும். அமர்ந்த உடன் நாற்காலியை ஒலி எழுப்பாமல் மேஜையை அணைத்தபடி நகர்த்தி அமர வேண்டும். பிறகு மேஜையின் மீது வைத்துள்ள நாப்கினை (Napkin) எடுத்து மடியில் விரித்துக்கொள்ளவேண்டும். நமது கைகளை மடியிலோ அல்லது வேறுவிதமாகவும் வைக்காமல், முழங்கைகளை மேஜையின் மீது வைத்துகொண்டால், ஜென்டில் லுக் தரும். அமரும் போது கன்னத்தில் கைவைத்துக் கொண்டு இருக்கக் கூடாது.

விருந்துகளில் முதலில் பரிமாறப்படுவது சூப். சூப் அருந்தும் போது பெரியதாக வாயைத் திறக்காமல், அதே நேரம் சத்தம் வராமலும் முதுகு கூன் விழாமலும் சூப்பைக் குடிக்க வேண்டும். சூப் ஸ்பூனை வலது கைகளைக் கொண்டு உபயோகப்படுத்தவும். சூப் மேலே சிந்தாமல் இருக்க, நெக் நாப்கினை (Neck Napkin) அணிந்துகொள்ள வேண்டும். சூப் குடித்து முடித்த உடன் நெக் நாப்கினைக் கழற்றி மடித்து வைத்து விட வேண்டும்.

பலரும் சாப்பிட தடுமாறும் ஓர் உணவு நொன்வெஜ். அதை சாப்பிட ஆரம்பிக்கும் முன்பு அதற்கேற்றவகையில் இடது கையில் ஃபோர்க் ஸ்பூனும் (Fork Spoon) வலது





கையில் நைஃபும் வைத்துக் கொள்ளவும். தட்டில் பரிமாறப்படும் நொன்வெஜ் வகைகள் சூடாக இருந்தால் சாப்பிடுவது மிகவும் எளிது. ஏனெனில், சூடாக இருக்கும் நொன்வெஜ்ஜை ஃபோர்காால் எடுத்து சாப்பிட இலகுவாக இருக்கும். அவை ஆற ஆரம்பித்தால் ஃபோர்கால் எடுப்பது சற்று கடினமாகிவிடும். நொன் வெஜ்ஜை எடுக்கும் போது, கத்தியால் சிறிய துண்டுகளாக்கி ஃபோர்க்கால் எடுத்து சாப்பிட வேண்டும்.

இனிப்பு வகைகளை சாப்பிடுவதற்கு நோர்மலான சின்ன வகை ஸ்பூனில் சாப்பிடலாம். உணவை உண்ணும் போது வாயை மூடி உண்ண வேண்டும். வாயில் உணவு இருக்கும் போது, பேசக் கூடாது. அது மற்றவர்களுக்கு தர்மசங்கடத்தைத் தரும்.

மேஜையின் மீது வைக்கப்பட்ட உணவுகளில் உங்களுக்குப் பிடித்தமான உணவு தூரமாக இருந்தால், எழுந்து கையை நீட்டி இழுக்கக் கூடாது. அந்த உணவுக்கு அருகில் இருக்கும் நபரை பொதுவாக அழைத்து, 'உணவை என் அருகே பாஸ் செய்யுங்கள்' என்று சொல்ல வேண்டும். நீங்கள் கேட்கும் நேரத்தில் வேறு யாராவது அந்த உணவை எடுக்கவிருந்தால், அவர்கள் அதை எடுத்துவிட்டு உங்கள் பக்கம் தரும் வரை அமைதி காக்க வேண்டும்.

ஸ்பூனால் எடுக்க முடிந்த காய்களை ஸ்பூனாலும், குத்தி எடுக்க முடிகிற நிலையில் இருக்கும் காய்களை ஃபோர்க்காலும் எடுத்து, சாப்பிடுங்கள்.

கதிரையில் நிமிர்ந்து உட்கார வேண்டும். தட்டுக்கு அருகே உங்கள் முகத்தைக் கொண்டு வந்து உண்ணக்கூடாது. அதற்கு பதில் நிமிர்ந்து உட்கார்ந்து ஸ்பூனால் எடுத்து உண்ண வேண்டும். சாப்பிடும் போது வாயை மூடி சத்தம் வராமல் மெல்ல வேண்டும்.

நீங்கள் உணவு அருந்தி முடித்துவிட்டால், உங்கள் மடியின் மீது இருக்கும் நாப்கினை டேபிள்மீது வைத்துவிட்டு அனைவரும் உணவு அருந்தும் வரை காத்திருப்பது நம் ஒழுக்கத்தைக் காட்டும்.

மேஜையை விட்டு எழுந்திருக்க வேண்டுமென்றால் 'எக்ஸ்கியூஸ் மீ' என்று சொல்லிவிட்டு எழுந்திருக்க வேண்டும். நீங்கள் எங்கே செல்கிறீர்கள் என்று மற்றவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை.

உணவை 'கட்' செய்து உண்ணும் போது உங்கள் உடல் டேபிளுக்கு நெருக்கமாகவும், முழங்கைகளை டேபிள் அருகிலும் வைத்திருக்கவும்.

சாப்பிடும்போது விக்கல் அல்லது இருமல் வந்தால், அமைதியாக 'ஸாரி' சொல்லிவிட்டு கைக்குட்டையால் வாயை அணைத்துக்கொள்ளுங்கள்.

சாப்பிடும்போது உங்கள் பற்களின் இடையே உணவு மாட்டிக்கொண்டால், விரல்களை வாயில் வைத்து, அதை எடுக்க முயற்சிக்கக் கூடாது. 'டூத்பிக்' உபயோகித்து எடுக்கக் கூடாது. வோஷ் ரூமுக்கு சென்று வாயை சுத்தம் செய்துகொள்ள வேண்டும்.

நீங்கள் பபிள்கம் சுவைத்துக்கொண்டே ஹோட்டலுக்கு செல்கிறீர்கள் என்றால், அவற்றைத் துப்பிவிட்டு பிறகே டேபிளில் அமர வேண்டும். அதைவிடுத்து, டேபிளில் பபிள்கமை ஒட்டுவதோ, கதிரையில் அமர்ந்த பின்னர் எழுந்து சென்று துப்புவதோ நல்ல பழக்கம் இல்லை.

டேபிளில் பரிமாறப்பட்ட உணவுகளில் உங்களுக்குப் பிடிக்காத உணவு ஏதேனும் இருந்தால், எந்த கமெண்டுகளும் சொல்லாமல், அதை எடுப்பதைத் தவிர்த்துவிடுங்கள். அதே போல நீங்கள் குடிக்கும் சூப்பில் உப்போ அல்லது காரமோ குறைவாக இருந்தால், எந்தக் குறையும் சொல்லாமல், அங்கு வைத்திருக்கும் உப்பு, மிளகை உங்கள் தேவைக்கு ஏற்றாற் போல் பயன்படுத்துங்கள்.

ஹோட்டலில் இருந்து வெளியே வரும்போது, 'தங்க்யூ' என்று சொல்லிவிட்டு புன்னகையோடு வெளியே வாருங்கள். ●

## நெட்டி முறித்தல்

நம் விரல் எலும்புகளின் இணைப்புகளுக்கு இடையே 'சைனோவியல்' (Synovial fluid) எனப்படும் உயவு திரவம் உள்ளது. நாம் நெட்டி முறிக்கும்போது, இந்தத் திரவம் வேகமாக ஓர் இடத்தில் இருந்து இன்னோர் இடத்துக்கு நகர்கிறது. அப்போது, நெட்டி முறிக்கும் இடத்தில் வெற்றிடம் தோன்றி, 'நைட்ரஜ் ஒக்ஸைட்' உருவாகிறது. இதனால்தான் 'சொடக்' எனச் சத்தம் வருகிறது.

சைனோவியல்தான் நம் விரல் இணைப்புகளில் உள்ள எலும்புகள் ஒன்றோடு ஒன்று உரசாமல் ஒத்திசைவாகச் செயல்பட உயவு திரவமாகச் செயல்படுகிறது. அடிக்கடி நெட்டி முறிக்கும்போது இந்தத் திரவம் குறைகிறது. மேலும், கை விரல்களில் டென்டன், லிகமென்ட், கப்ஸ்யூல் என மூன்று அமைப்புகள் உள்ளன. அடிக்கடி ஒருவர் நெட்டி முறிக்கும்போது இவை மூன்றும் வலுவிழந்து விரல்கள் பலவீனமடையக்கூடும்.

எப்போதாவது நெட்டி முறிப்பது தவறு இல்லை. ஆனால், அதையே தொடர் பழக்கமாக வைத்துக்கொள்ள வேண்டாம்.

நெட்டி முறிக்க வேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டால், கைகளுக்கான ஸ்ட்ரெச்சிங் பயிற்சிகளைச் செய்யலாம்.

தொடர்ந்து டைப் செய்வது போன்று ஒரே மாதிரியான வேலையைக் கைகளுக்குக் கொடுக்க வேண்டாம். அவ்வப்போது இரண்டு நிமிடம் ஓய்வு எடுக்கலாம்.

கல்சியம் நிறைந்த உணவுகளான பால், முட்டை, கேழ்வரகு, கீரைகள், எள் போன்றவற்றை அதிகமாக எடுத்துக்கொள்வது நம் எலும்புகளை வலுவாக்கும். நீண்ட நேரம் வேலை செய்தாலும், சோர்வடையாமல் இருப்பதற்கான வாய்ப்பை உருவாக்கும்.



# மாணவர் பக்கம்




முன்கதை: அபூர்வ சக்தி படைத்த நாகராஜ், ஸ்பெயின் நாட்டில் இருக்கும் மர்கோஸ் எனும் தீவிரவாத கும்பலைத் தேடி வருகிறார். கால்பந்துப் போட்டி நடக்கும் இடத்தில், 'ராபின்சன்' என்ற வீரனைக் கொல்ல நடக்கும் முயற்சியை முறியடிக்கிறார். பிறகு...












# மந்திரம்... தந்திரம்!

## கண்ணைக் கட்டும் சீட்டுக்கட்டு!



சின்னச் சின்ன கலகலப்பு, சட்டென பற்றிக்கொள்ளும் விறுவிறுப்பு... பார்ப்போரை கட்டிப்போடும்; உங்கள் மஜிக்கை வெற்றியாக்கும்.

● ஒரு சீட்டுக்கட்டோடு உங்கள் நண்பர்களுக்கு முன்பாக நில்லுங்கள். அவற்றைவிரித்துகைகளில்பிடித்துக்கொண்டு, ஒருவரின் முகத்துக்கு நேராக காட்டுங்கள். “இதில் ஒரு சீட்டை எடுத்து எனக்குத் தெரியாமல் மற்றவர்களிடம் காட்டு” எனச் சொல்லுங்கள்.


● பிறகு, அந்தச் சீட்டை உங்கள் கைகளில் இருக்கும் சீட்டுகளுக்கு இடையே ஓரிடத்தில் வைத்துவிட சொல்லுங்கள். “நீ எடுத்த சீட்டை நான் பார்க்கலை. ஆனால், எந்தச் சீட்டு எனச் சரியாகச் சொல்றேன்” எனச் சொல்லிவிட்டு, சீட்டுக்கட்டை மாற்றி மாற்றி பலமுறை குலுக்கிக்கொள்ளுங்கள்.

● பிறகு, மீண்டும் முன்பு போல விரித்து, அவர்களின் முன்பு காட்டியவாறு, “நான் ஒவ்வொன்றாக எடுத்துக் காட்டுவேன். உன் மனசுக்குள்ளே இருந்து கண்டுபிடிப்பேன். நீ எந்த ரியாக்ஷனும் காட்டாமல் இருக்கணும்” எனச் சொல்லி, கார்டுகள் ஒன்றிரண்டை எடுத்து முகத்துக்கு நேராக நீட்டுங்கள். மூன்றாவதாக ஒன்றை காண்பித்து, “கொன்ஃபோர்மா இதுதான்” எனச் சொல்லி அசத்துங்கள். எப்படி இந்த ஆச்சர்யம்?

● சிம்பிள். உங்கள் நண்பர் ஒரு சீட்டை எடுத்து மற்றவர்களிடம் கண்பிக்கும் நேரத்தில், உங்கள் கையில் இருக்கும் சீட்டுகளை ஒன்றாக்கி, யாருக்கும் தெரியாமல் தலைகீழாக மாற்றிக்கொள்ளுங்கள். அதாவது, பின்பக்கம் உள்ள (ஒரே மாதிரியான) படங்கள் தலைகீழாக மாறி இருக்கும். பிறகு, நண்பர் அவரது சீட்டை வைக்கும்போது, அது மட்டும் பின்பக்கம் நேராக இருக்கும். அதைவைத்து எளிதாக கண்டுபிடித்துவிடலாம். நண்பர் அந்த கார்டையும் தலைகீழாக வைத்தால்... நீங்கள் உஷாராகி, ஏதாவது ஜோக்கடித்து மீண்டும் அவரை சரியான நிலையில் கார்டை வைக்கச் செய்ய வேண்டும். இதில்தான் உங்கள் மந்திரமும் தந்திரமும் இருக்கிறது.



1913ம் ஆண்டு டிசம்பர் 21ம் திகதி வெளிவந்த ‘நியூயோர்க் வேர்ல்ட்’ பத்திரிகையில், ஆர்தர் வைன் (Arthur Wynne) என்பவர், கட்டம் கட்டமாக எதையோ வரைந்து, சில கேள்விகளைக் கேட்டிருந்தார். ‘கேள்விகளுக்கான விடைகளை, அந்தக் கட்டங்களில் எழுதணும்’ என்றார்.




இது என்ன புதுசா இருக்கு? வார்த்தைகளை, மேலேயும் கீழேயும் எழுதச் சொல்றாரே என சிலர் கடுப்பானாங்க. ஆனால், இந்த வார்த்தை விளையாட்டு பலருக்குப் பிடித்தது. அதன் பிறகு, உலகம் முழுக்க பல பத்திரிகைகளில் வெவ்வேறு மொழிகளில் வெளியாகி, சூப்பர் ஹிட் அடித்தது. அதுதான் குறுக்கெழுத்துப் புதிர் (Crossword).





அதிகபட்சம் 25 கேள்விகள், 100 கட்டங்கள் இருக்கும் குறுக்கெழுத்துப் புதிர்களை எழுதிப்பார்க்கும்போதே பலருக்கு தலைசுத்தி மயக்கம் வந்துவிடும். பார்த்ததுமே மயக்கம் வரும் அளவுக்கான மெகா குறுக்கெழுத்துப் புதிர்களும் இருக்கிறது. மிகப்பெரிய குறுக்கெழுத்துப் புதிராக கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பெற்ற புதிரில் 25,970 குறிப்புகள், 1,32,020 கட்டங்கள் இருந்தன. ஆரா ஹோவ்ஹன்னிஷன் (Ara Hovhannisian) என்பவர்தான் இந்த மெகா குறுக்கெழுத்துப் புதிரை உருவாக்கியவர். புதிர் மாதிரியே இவர் பெயரும் உச்சரிக்கப் புதிராக இருக்கிறதா!




எடைகளைச் சரியாகப் பாருங்க... விடைகளைக் கட்டங்களில் எழுதுங்க!




## விடைகள்:

2. 3+1 = 4, 4-1 = 3

3.




Clean Master
திருமண மண்டப வளாகம்,
ஏ9 றோட், கைதடிச் சந்தி
அன்பர்கள் நண்பர்கள் வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் இறைமகன் இயேசு கிறிஸ்து
பிறப்பின் நத்தார் வாழ்த்துக்கள்
விசேடமாக திணைக்களங்கள், மற்றும்
அலுவலகங்கள் மற்றும் வீடுகளில்
பாவனையில் உள்ள சோபா செற், வீல்
கதிரைகள் இயந்திரங்கள் மூலம் கழுவி
பொழுசிங் செய்து பெற்றுக் கொள்ளலாம்.
இலவச வாகன விநியோகம். (நிபந்தனைக்குட்பட்டது)
OPEN
ABIERTO
LED LIGHT BOARD
உங்கள் நிறுவனங்களுக்கு ஏற்ற வகையில்
விளம்பரங்கள் தயாரித்துப் பொருத்தி தரப்படும்.
hotline - 0778210102
office - 0214507462




இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்றட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 17.12.2017 அன்று வெளியிடப்பட்டது.